கோகுலம்

GOKULAM

மார்ச் '91 விலை ரூ. 3/–





பாசத் தங்கை சொன்னால்தான்
பந்து ஆட வருவாயோ?



கோகுலம்

1991 மார்ச் மாத இதழ்

மலர்: 9 இதழ்: 2





அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஆண்டுத் தேர்வை எழுதப் போகும் எல்லோருக்கும் எனது மனங்கனிந்த நல்வாழ்த்துக்கள். தேர்வு என்பது, ஏற்கெனவே படித்தவற்றை, வகுப்பில் சொல்லிக் கொடுத்ததை எந்த அளவுக்கு நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளச் செய்யப்படும் முயற்சிதானே? நீங்கள் அனைவரும் இதை வெற்றிகரமாகச் செய்து காட்டுவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

உங்கள் கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியராகத் திகழ்ந்த குழந்தைக் கவிஞரின் 2 ஆவது நினைவு நாள் இந்த மாதம் வருகிறது. அவரது பள்ளித் தோழராக விளங்கிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், அவரைப் பற்றிய சுவையான நிகழ்ச்சி ஒன்றை இந்த இதழில் எழுதியிருக்கிறார்கள். டாக்டர் பூவண்ணன் குழந்தைக் கவிஞரின் 'மலரும் உள்ளம்' நூலின் சிறப்பைக் கதைப் பாடலாகத் தந்திருக்கிறார்.

சென்ற இதழில் 'உண்மைக் கதை' வெளிவராததைக் குறித்து ஏராளமானோர் எழுதியிருக்கிறீர்கள். இடமில்லாத காரணத்தால்தான் இது விட்டுப் போனதே தவிர வேறு காரணமில்லை. இதே போல் பிருந்தாவனக் கவியரங்கம், கதையரங்கம் வரவில்லையே என்று பலரும் ஏக்கத்தோடு எழுதியிருக்கிறீர்கள். இந்தப் பகுதிகள் பிரித்துப் பிரித்துத் தரப்பட்டுள்ளதைக் கவனிக்க மறந்து விட்டீர்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.



இந்த இதழில்



நன்றிக்குரிய கிரகாம்பெல்

'எதிரெதிர் உள்ள இரு மனிதர்
எதையும் பேசிக் கேட்பது போல்
எத்தனை தூரம் ஆனாலும்
ஏன், பேசிக் கேட்க முடியாதா?'

சிந்தனை பூத்தது அவர் நெஞ்சில்
செயல்உருப் பெற்றது அவர் கையில்
வந்தது சோர்வு, கடும் உழைப்பால்,
விளைந்தது என்ன, வியப்புத்தான்!

எடுத்த குடுவை நழுவியதால்
எங்கும் அமிலம் சிதறியது,
பட்டது காலில் தீப்பொறி போல்
பாவம்! ஐயோ! அலறல்தான்.

ஆனால் என்ன அதிசயம்!
அடுத்த அறையில் ஆனந்தம்!
அலறல் கேட்டே அவர் நண்பர்
"ஆகா! வெற்றி!" என்றாரே!

ஆமாம், அதுதான் நாம் காணும்
அற்புத டெலிபோன் கதையாகும்
நாமா அவரை மறந்திடுவோம்!
நன்றிக்குரிய கிரகாம்பெல்.

— ஆர். பி. சாரதி.



பிறந்தநாள் கவியரங்கம்

ஐன்ஸ்டீனை அறிவீரோ?

தினமும் காலை வேளை தனில்
  தனது 'ஹோம் ஒர்க்' நோட் டுடனே
கணிதம் பயில ஒரு சிறுமி
  கிழவர் ஒருவர் வீடு செல்வாள்!

நட்பாய் அந்தச் சிறுமி யுடன்
  நயமாய்ப் பழகிடத் தாத்தாவும்
கடமை செய்ய மனம் இன்றிக்
  காலை வேளை காத்திருப்பார்!

சிறுமி வந்த உடன் தாத்தா
  சின்னக் குழந்தை போல் ஆகி
விருப்பத் தோடு கணி தத்தை
  விளையாட் டாகக் கற்பிப் பார்!

சில நாள் கால தாம தமாய்ச்
  சிறுமி வந்தால் அதற் குள்ளே
கலங்கித் தாத்தா பதறிடு வார்;
  கண்ட பின்னே மகிழ்ந் திடுவார்!

அந்த வேளை ஒரு சமயம்
  அவளும் சிலநாள் காய்ச்ச லினால்
வந்திட வில்லை என்ற துமே
  வருத்தம் உற்றார்; போய் அழைத்தார்!

''வருக'' என்ற தாய், ''வேண்டாம்;
  வீணில் தொல்லை அவள் உமக்குத்
தருவாள்,' என்றே தடை சொல்லத்
  தாத்தா மறுத்து இது சொன்னார்:

''கணக்கின் பதிலை நான் சொன்னால்
  கிடைக்கும் மிட்டாய் சிறுமி யிடம்
எனக்கு; நானும் அதைப் பெறவே
  ஏனோ தடைநீர் சொல் கின்றீர்...?''
என்றே சொல்லிச் சிறுமி யிடம்
  இனிதாய்ச் 'சாக்லெட்' பெற்ற தையே
சொன்ன வர்தான் இம் மாதம்
  ஜனித்த 'ஐன்ஸ்டீன்' அறிவீரே!

— ஜி. ஜயராமன்.

வெண்ணிலாவே



பால்போல் வெளுத்திருக்கும் வெண்ணிலாவே — நீ
பகலெல்லாம் எங்கிருந்தாய் வெண்ணிலாவே
கண்ணுக் கழகளிக்கும் வெண்ணிலாவே — நீ
காணாமற் போவதென்ன வெண்ணிலாவே
வானத்தில் நீ இருந்தால் வெண்ணிலாவே — எங்கள்
வாட்டமெல்லாம் தீர்ந்திடுமே வெண்ணிலாவே
வேண்டி வேண்டி அழைக்கின்றோம் வெண்ணிலாவே — நீ
விளையாட வருவாயோ வெண்ணிலாவே.

* 1930 இல் எழுதப்பட்டது.




குழந்தை இலக்கிய முன்னோடிகளில் முதல் வரிசையை அணி செய்யும் மயிலை சிவமுத்துத் தாத்தா, இந்தப் பெரியாரது மாணவர் என்ற வியப்பான உண்மையே இவரது பெருமையை உணர்த்தும். மணி மங்கலம் திருநாவுக்கரசர் என்று அழைக்கப்பட்ட இவர் 1888 ஆம் அண்டில் பிறந்தவர். தமிழில் கடலாக விளங்கிய இவர், சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராக இருந்தார். திரு. வி. க., மறைமலை யடிகள் போன்ற பல தமிழ்ப் பெரியார்களது மதிப்புக்குப் பாத்திரமாக விளங்கிய இப்பெரியார் குழந்தைகளுக்காகவும் எளிமையான பாடல்களை எழுதியுள்ளது குழந்தை இலக்கியத்திற்குப் பெருமையளிப்பதாகும்.

தந்தவர் யார்?

பூவே உன்னைப் படைத்தவர் யார்?
புதுமணம் உள்ளே நுழைத்தவர் யார்?
பலபல நிறங்கள் பண்ணவர் யார்?
பார்க்க அழகு தந்தவர் யார்?
உன்னைச் செய்தோன் வல்லவனே;
உலகுக் கெல்லாம் நல்லவனே!





எம் பள்ளித் தோழர்!

கடியாபட்டி — இராயவரம் இவ்விரு ஊர்களுக்கிடையே பாலாறு ஓடுகிறது. பாலாற்றங் கரையில் திருக்கோயில், மடங்கள் உண்டு.

ஒரு நாள் மாலை ஐந்து மணி அளவில் ஒரு நெல்லிக்கனி மரத்தடியில் சிறுவன் ஒருவன் அழுது கொண்டு உட்கார்ந்திருக்கிறான்!

கடியாபட்டி பூமேஸ்வரா உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் இராயவரம் மாணவர்கள், சைக்கிளில் மாலையில் பள்ளிக் கூடம் விட்டபின் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர், நல்ல உருவப் பொலிவு தூய வெள்ளை ஆடை அணிந்த இளைஞர்! அழுது கொண்டிருந்த சிறுவனைப் பார்க்கிறார். சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி சிறுவனிடம் வருகிறார். பரிவோடு அவனை விசாரிக்கிறார். சிறுவனும் தான் அழுது கொண்டிருக்கும் காரணத்தைக் கூறுகிறான்.

இளைஞனும் சிறுவனும் ஒரே பள்ளியில் பயிலும் மாணவர்கள். சிறுவன் ஒன்பதாம்வகுப்பு! விசாரித்த இளைஞர் பத்தாம் வகுப்பு. இளைஞர்,

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

உலகக் குழந்தைகள் ஆண்டில், குழந்தைக் கவிஞருக்குப் பொன்னாடை அணிவிக்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.



தனது சைக்கிளின் பின்னால் சிறுவனை உட்காரவைத்து, சிறுவனுக்குத் தெரியாது அவன் வீட்டுக்கே அவனை அழைத்துச் செல்கிறார்!

வீட்டுக் கூடத்தில் கம்பீரமான உருவமுடைய ஒரு பெரியவர் அமர்ந்திருக்கிறார். அவர்தான் சிறுவனின் தமையனார். கண்டிப்புக்குப் பெயர் போனவர். சிறுவனை அழைத்து வந்த இளைஞர் பணிவோடு கூறுகிறார்:


''தேர்வில் மதிப்பெண் வாங்கவில்லை என்பதற்காக இப்படி அடிக்கலாமா? தம்பி பயந்து விட்டான்! எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண்தான் வாங்கியிருக்கிறான். கணிதத்தில் மட்டும்தான் போதிய மதிப்பெண் வாங்கவில்லை. இதோ பாருங்கள்''— மதிப்பெண் அட்டையைக் காட்டுகிறார் இளைஞர். சிறுவனின் தமையனார் பொடி போட்டு முடித்து அதை வாங்கிப் பார்த்து, ''உன்னை சிபாரிசுக்கு அழைத்து வந்து விட்டானா? சரி சரி போ,'' என்று கூறிச் சிறுவனை உள்ளே போக அனுமதிக்கிறார்.

இது நடந்தது 1943 ஆம் ஆண்டில். அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

அடியேன் குன்றக்குடி அடிகளார் தான்! என்னைப் பரிவோடு அழைத்து வந்து, கண்டிப்புக்குப் பேர்போன தமையனாரிடம் விளக்கிக் கூறி, அவரை சமாதானப் படுத்திய அந்த இளைஞர் வேறு யாருமல்ல, குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பாதான்! அவர்தான் எனக்குத் தைரியம் கூறி, என்னை என் தமையனார் தமிழாசிரியர் கோபால கிருஷ்ணன் அவர்களிடம் அழைத்து வந்து உண்மையை விளக்கிச் சொல்லி அவரை சமாதானப் படுத்தியவர்.

வள்ளியப்பா எப்பொழுதுமே பிறர் துன்பத்தைக் கண்டு உருகிப் போகும் குழந்தை உள்ளம் கொண்டவர். பள்ளிப் பருவத்திலேயே உடன் பயிலும் மாணவர்களுடன் சிரித்துப் பழகுவார். ஆசிரியர்களின் நன் மதிப்பைப் பெற்று பணிவு மிக்க மாணவராக விளங்கினார்.

வள்ளியப்பா குழந்தைக் கவிஞராகி உங்களுக்கெல்லாம் அறிமுகமாகு முன்பே, எனது பள்ளித் தோழராக இருந்தார் என்ற இனிப்பான செய்தி உங்களுக்கு வியப்பாக இருக்கிறது இல்லையா?



மறக்க முடியுமா?

ஞானிமணாளன்

பள்ளிக்கூடம் சென்றிருந்த சிறுவனுக்கு அந்தப் படுகொலைச் செய்தி எட்டியது. ஏற்கெனவே, அவனுடைய பிஞ்சு நெஞ்சில் ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்ற எண்ணம் துளிர் விட்டிருந்தது. அவனுடைய தந்தை மற்றும் சித்தப்பாக்கள் எல்லாம் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிச் சிறை சென்றவர்கள். அதனால் இயல்பாகவே ஆங்கில ஆட்சி மீது அவனுக்கு ஒரு வெறுப்பு இருந்தது.

அன்று பஞ்சாபியரின் புத்தாண்டு நாள். 'பைசாகி தினம்' என்று பெயர். வீட்டுக்குச் சென்று பண்டிகை கொண்டாட வேண்டும் என்பதையும் மறந்தான். பள்ளிக்கூடத்திலிருந்து ஜாலியன்வாலாபாக்கிற்குச் சென்று விட்டான்.

அங்கு கண்ட காட்சி அவனைக் கொதிப்படைய வைத்தது. அப்போதே அவன் ஒரு முடிவுக்கு வந்தான். 'என்றாவது ஒரு நாள் இந்தக் கொலைக்குப் பழிவாங்கி விட வேண்டும்' என்ற தணியாத வேகம் பிறந்து விட்டது அவன் மனத்தில். அந்த இடத்தின் மண் சாதாரண மண்ணாகத் தோன்றவில்லை அவனுக்கு! உயிர் நீத்த தியாகிகளின் இரத்தம் சிந்தியிருந்த ஈர மண்ணை அள்ளி ஒரு சீசாவில் அடைத்துக் கொண்டு வீடு திரும்பினான். அதனால்தான் வீடு திரும்பத் தாமதம்.

அன்று முதல், தினமும் ரத்தம் கலந்த அந்தத் திருமண்ணைத் திலகமாக இட்டுக் கொண்டுதான் அவன் பள்ளி செல்வான். அந்த சீசாவைக் காணும்போதெல்லாம் அவன் உணர்ச்சிவசப்படுவான். பழிக்குப் பழி வாங்க எப்பொழுது வாய்ப்புக் கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருந்தான் தியாக உள்ளம் கொண்ட அச் சிறுவன். அவனுக்கு அப்பொழுது வயது பன்னிரண்டுதான்.

பள்ளிப் படிப்பை முடிக்கு முன்பே சிறுவனைத் திருமணம் செய்து கொள்ளும்படி வீட்டில் வற்புறுத்தினர். ஆங்கிலேயரை நாட்டை விட்டு விரட்ட உறுதி பூண்டிருந்த சிறுவனா அதற்கு இணங்குவான்? மறுத்து விட்டான் உறுதியாக. புரட்சியாளரான கர்தார் சிங் சாரபா என்பவரின் அறிமுகமும், சுகதேவ் என்பவரின் நட்பும் அவனது நாட்டுப்பற்றை வளர்த்துக் கொள்ள உதவின. வீட்டை விட்டு வெளியேறினான். புரட்சியாளர் சந்திரசேகர ஆஜாத்தின் தோழமை அவரது இலட்சியத்தை உறுதியாக்கிக் கொள்ள உதவியது.


சிறுவன் இளைஞனாகி இந்துஸ்தான் ரிபப்ளிக் அசோசியேஷனில் உறுப்பினராகி, மக்களுக்குச் சுதந்திரத்தின் அவசியத்தை எடுத்துக் கூறினான். 'சுதந்திரத்தை இரந்து பெற வேண்டாம்; வென்று பெறுவோம்' என்று முழக்கமிட்ட புரட்சியாளர்களில் முக்கியமானவனானான் இளைஞன். ஆங்கில அரசு இளைஞனைக் கைது செய்ய முயன்றது. இளைஞன் போலீசாரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு லாகூர் சென்றான்.

அப்போது, இந்திய அரசியலை ஆராய இங்கிலாந்திலிருந்து ஒரு 'கமிஷன்' வந்தது. அதற்கு 'சைமன் கமிஷன்' என்று பெயர். அதைக் காங்கிரஸ் இயக்கம் பகிஷ்கரித்தது. இளை

ஞனும் அதில் கலந்து கொண்டான். 1928 அக்டோபர் 30. பஞ்சாபில் லாலா லஜபதிராய் தலைமையில் நடந்த ஓர் ஊர்வலத்தில் போலீசார் தடியடி நடத்தினர். இளைஞன் தன் நண்பர்களுடன் ஓடிச் சென்று லாலாஜியைக் காப்பாற்ற முயன்று அடிப்பட்டான். காயங்களின் காரணமாக லாலாஜி உயிர் துறந்தார். இளைஞனின் இரத்தம் கொதித்தது. பழிக்குப் பழி வாங்கத் துடித்தான்.

புரட்சியாளர்கள் கூடினர். லாலாஜியை அடித்து வீழ்த்திய போலீஸ் சூப்பரின்டென்டெண்ட் ஸ்காட்டைக் கொல்லும் முயற்சியில் ராஜகுரு என்பவருடன் சேர்ந்து இளைஞன் முயன்றான். ஆனால், குறி தவறியது. ஸ்காட்டுக்குப் பதில் சான்டர்ஸ் என்பவனைக் கொன்று தப்பினர்.

ஆங்கில அரசு பொதுப்பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வர முயன்றது. இதன் கீழ், காரணம் ஏதும் காட்டாமல் எவரையும் சிறையில் அடைத்து விட முடியும். எனவே, அந்தச் சட்டம் நிறைவேறுவதைக் குண்டு வீசித் தடுத்து விடப் புரட்சியாளர்கள் முடிவு செய்தனர். பொறுப்பு இளைஞனிடமும், அவனது வங்காளி நண்பனிடமும் ஒப்படைக்கப்பட்டது.




1929 ஏப்ரல் 8 ஆம் நாள். சட்டசபையில் பொதுப் பாதுகாப்புச் சட்டம் அறிமுகமாகும் கட்டம் வந்தது. இளைஞன் எழுந்து 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று வீர முழக்கம் செய்து குண்டுகளை வீசினான். அவனும் நண்பனும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். சபையில் பெரும் பரபரப்பு!

போலீசார் வருவதற்குள், அவர் நினைத்திருந்தால், தப்பியோடியிருக்கலாம். ஆனால், இருவருமே அதை விரும்பவில்லை. அவர்களுடைய நோக்கமே சட்டசபையில் பரபரப்பை ஏற்படுத்தி விட்டு வலியச் சென்று கைதாகி, வழக்கு நீதிமன்றம் ஏறும் போது, அங்கு, தங்களுடைய உள்ளக் குமுறலை வெளிக்காட்ட முடியாத மக்களின் சார்பில் அவர்களின் குமுறல்களையும், தமது இயக்கத்தின் கொள்கைகளையும் விளக்கி விட வேண்டும்' என்பதுதான். எனவே இருவரும் வலிய முன்வந்து கைதானார்கள்.

வழக்கு நீதிமன்றத்துக்குச் சென்றது. வெடிகுண்டு வீச்சு வழக்கில் அவனுக்குக் கடும் தண்டனை வழங்க முடியவில்லை. வழக்கு விசாரணை லாகூருக்கு மாற்றப்பட்டு, இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு 1930 மார்ச் 23 ஆம் நாள் லாகூர் சிறைச் சாலையில் நிறைவேற்றப் பட்டது. இந்த வீர இளைஞன் வேறு யாருமில்லை. பகத்சிங்தான்.

நாம் இன்று அனுபவிக்கும் சுதந்திரம், பகத் சிங் போன்ற எண்ணற்ற தேச பக்தர்களின் தியாகத்தால் பெறப்பட்டது. சுதந்திரம் என்ற சொல் பகத்சிங்கின் மன உறுதியையும் தியாகத்தையும் என்றும் நமக்கு நினைவுகூறும்.



மூட்டைப்பூச்சி வந்தாச்சு!

தேவி நாச்சியப்பன்

"நூர்ர்ர்ர்........"—வாயால் கற்பனை வண்டியை ஓட்டியபடி வங்கிக்குள் நுழைந்தான் ராமு. அப்போது, எதிரில் வந்த பியூன் மாணிக்கம், 'ஆச்சு. மூட்டைப்பூச்சி வந்தாச்சு!' என்று வெளியே கேட்காது முணுமுணுத்துக் கொண்டே, "ராமு, இன்னிக்குப் பள்ளிக்கூடம் லீவா?" என்று கேட்டான். ராமு வாயைத் திறப்பதற்குள் கிளார்க் முருகேசன், "என்ன மாணிக்கம், தெரியாத மாதிரி கேட்கிறீங்க?" எல்லா சனிக்கிழமையும் ராமுவுக்கு லீவுதானே? வாரந் தவறாம சனிக்கிழமையானா, இங்கே வந்து, ஒரு இரண்டு மணி நேரமாவது நம்மை எல்லாம் கேள்விக் கணைகளால் துளைத்து எடுத்திடுவானே?" என்று அலுப்போடு சொன்னார். ராமு அதைப் பெருமையாக நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

ராமுவின் அப்பா சண்முகம்தான் அந்த வங்கியின் மானேஜர். வங்கியின் பின்புறமாக உள்ள குவார்ட்டஸில் மானேஜரின் குடும்பம் குடியிருந்தது. மானேஜருக்கு ராமு ஒரே செல்ல மகன். துருதுருப்புக்கு மறு பெயர்தான் ராமு என்றால் பொருத்தமாக இருக்கும். முதல் வகுப்புப் படிக்கிறான். சனிக்கிழமைகளில் அவனுக்கு லீவு என்பதால் வங்கிக்குள் வந்து விடுவான். எல்லாவற்றையும் பார்த்து, 'அது என்ன? இது என்ன? இது ஏன் இப்படி இருக்கு?' என்று கேட்டுக் கொண்டே இருப்பான். வங்கிக்கு சனிக்கிழமை அரை நாள்தான் பணி. எனவே, சனிக்கிழமைகளில் காலை நேரத்தில் அதிகக் கூட்டம் இருக்கும். அதனால், ராமுவின் கேள்விகள் வங்கிப் பணியாளர்களுக்கு, அதிலும் சனிக்கிழமைகளில் சிறிது தொல்லையாகக் கூட இருக்கும். ஆனாலும் எப்படி அவனைத் தவிர்ப்பது? மானேஜரின் மகனாச்சே? வேண்டா வெறுப்பாகப் பதில் கூறுவார்கள். அவனை மூட்டைப்பூச்சி என்று குறிப்பிட்டு தங்களுக்குள் பேசி அலுத்துக் கொள்வார்கள்.

லெட்ஜரைப் பார்த்து, "ஏன் மாமா இவ்வளவு பெரிய, பெரிய நோட்டா வச்சிருக்கீங்க? எங்களைப் போல சின்னச் சின்ன நோட்டா வைத்துக் கொண்டால் தூக்கிப் புரட்ட வசதியா இருக்குமே?" என்று கேட்பான்.

கேஷ் கவுண்டருக்குள் இருக்கும் கேஷியரைப் பார்த்து, "மாமா உங்களை ஏன் புலி சிங்கத்தைப் போட்டு அடைக்கிற மாதிரிக் கூண்டுக்குள் போட்டு வச்சிருக்காங்க?" என்று கேட்பான்.

ஒரு நாள், கேஷியர் வைத்திருக்கும் பணத்தைப் பார்த்து, "மாமா இவ்வளவு பணம் வச்சிருக்கீங்களே!

அப்புறம் ஏன் சைக்கிள்ள வர்றீங்க? பெரிய ஏ. சி. கார் வாங்க வேண்டியதுதானே?'' என்று கேட்டான். அதற்கு கேஷியர் ''எல்லாப் பணமும் என்னுடையது இல்லையே ராமு'' என்றார். ''அப்ப யாருடையது?'' என்று திருப்பிக் கேட்டான். பொறுமையை இழக்காத அவர், ''பொது மக்களோட பணம்'' என்று பதிலளித்தார்.

ராமு அத்துடன் விடவில்லை. தொடர்ந்து அடுக்கடுக்காய் பல கேள்விகள் கேட்டான். ''பொது மக்கள்னா யாரு? அவுங்க ஏன் இங்கே வந்து பணத்தை வைக்கணும்? இங்கே திருடன் வரமாட்டானா? ஏன்?'' என்றெல்லாம் கேள்விகளை அடுக்கியதும் கேஷியர் விளக்கம் சொல்லாமல், ''வேலையிருக்குப்பா ராமு. அப்புறமா இன்னொரு நாள் சொல்றேன்னு'' கடுமையாகக் கூறித் தன் வேலையைத் தொடர்ந்தார்.

ராமுவுக்கு, தன் கேள்விகளுக்கு உடனடியா விடை தெரிஞ்சுக்காட்டி தலையே வெடிச்சுடும் போல இருந்தது. எனவே, அப்பாவின் அறைக்குள் சென்றான். கேஷியர் மாமாவிடம் கேட்ட அதே கேள்விகளைத் தன் அப்பாவிடம் கேட்டான். அப்பா சிரித்துக் கொண்டே, ''பன்னிரண்டு மணிக்கு ஆபீஸ் முடிஞ்சவுடன் உனக்கு பதில் சொல்றேன். நீ போய் விளையாடுப்பா'' என்றார். அவனுக்கு விளையாடப் போகவே பிடிக்கலை. இருந்தாலும் எப்படாப்பா பன்னிரண்டு மணி ஆகும்னு காத்துக் கொண்டே இருந்தான். மணி பன்னிரண்டு அடிச்சதும் ராமு, அப்பாவிடம் ஓடிப் போய் ''இப்பச் சொல்லுங்கப்பா,'' என்று துளைத்தான்.

ராமுவின் அப்பாவுக்குப் பொறுமை அதிகம். அவன் எழுப்பிய கேள்விகளுக்கான பதிலை விளக்கமாகச் சொன்னார். ''ராமு, பொது மக்கள்னா இந்த ஊரில் இருக்கிற எல்லா மக்களையும் பொது மக்கள்னு சொல்லுவோம். அவுங்க பணத்தை இங்கே கொண்டு வந்து கட்டினால், அந்தப் பணத்துக்கு வட்டியா மேலும் கொஞ்சம் பணம் போட்டுத் திருப்பிக் கொடுப்போம். அது மட்டுமல்ல. இங்கே இருந்தா பணம் பத்திரமா இருக்கும். திருடன் வந்து திருட முடியாதபடி நாங்க பாதுகாப்பா



வச்சிருப்போம்.''

ராமுவுக்கு இன்னும் ஒரு சந்தேகம், ''எப்படி அப்பா திருடன் திருட முடியாதபடி வச்சிருப்பீங்க?'' என்று கேட்டான். ராமுவின் அப்பா அவனை பாதுகாப்பு அறைக்குக் கூட்டிக் கொண்டு போய் அங்கிருந்த பெரிய கதவு, பூட்டு எல்லாவற்றையும் காட்டி, ''பார்த்தியா இதன் கனத்தையும், அளவையும். இதைத் திறக்க முடியாது. இப்பப் புரியுதா?'' என்று கேட்டார்.

ராமுவுக்கு இன்னும் சந்தேகம் தீரலை! ''ஏம்பா, இந்த கூண்டுக்குள்ளே காஷியர் மாமா உட்கார்ந்திருக்கும் போது திருடன் வந்து பறிச்சிக்கிட்டுப் போனா, என்ன செய்வே?'' என்று கவலையாகக் கேட்டான்.

ராமுவின் அப்பா, மகனின் புத்திசாலித்தனத்தை வியந்தபடி அவனைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்று அங்குள்ள மேசைக்குக் கீழே அவனைக் குனிந்து பார்க்கச் சொன்னார். அவனும் பார்த்தான். ''அட, நம்ம வீட்டு 'காலிங்' பெல் போல இருக்கே!'' எனத் தொடப்



போனான். உடனே ராமுவின் அப்பா அவன் கையைப் பிடித்துக் கொண்டு, ''ராமு, இதை அடிக்கக் கூடாது. இதை அடிச்சா பயங்கரமா சத்தம் கேட்கும்'' என்றார்.

''கேட்டா என்னப்பா, ஒரே ஒரு முறை அடிச்சுப் பார்க்கறேனே?'' என்று கெஞ்சினான் ராமு.

''கூடாது ராமு, இதை அடிச்சா, நம்ம தெரு முனையிலே இருக்கும் போலீஸ் ஸ்டேஷன், அதற்கு எதிரில் உள்ள பஸ் ஸ்டாண்டு, கடை வீதி எல்லா இடங்களிலும் இதன் மணிச் சத்தம் கேட்கும். நம்ம பாங்குக்குத் திருடன் வந்திருக்கான் என்பதை அறிவிக்கும் பெல் சத்தம் அது. போலீஸ் உடனே உதவிக்கு ஓடி வரும். அதனாலதான் சொல்றேன், இதை நீ தொடக் கூடாது'' என்றார் அப்பா.

''ஓ, திருடன் வந்தா இந்தப் பெல்லை அமுக்கி, போலீசை வர வழைச்சுப் பிடிச்சுடலாமா? அதுக்குத்தானா பெல்லை இங்கே வச்சிருக்கீங்க'' என்று புரிந்து கொண்டவன் போல் கேட்டான் ராமு. ''ஆம்'' என்று சொன்ன ராமுவின் அப்பா, ராமுவை அழைத்துச் சென்று ஆபீஸர் டேபிளுக்குக் கீழும், காஷியர் டேபிளுக்குக் கீழும் காட்டினார். ராமு ஒவ்வொரு மேஜையாகச் சென்று குனிந்து பார்த்தான். ஆபீசர் மேசையிலும், கேஷியர் மேசையிலும் அதே போன்ற மணி இருப்பதைக் கண்டு, ''இதெல்லாம் கூடத் திருடன் வந்தால் போலீசை அழைக்கும் பெல் தானாப்பா?'' என்று கேட்டான். அவன் புத்திசாலித்தனத்தை வியந்து கொண்டே அவனைத் தூக்கிக் கொண்டு சாப்பிட வீட்டுக்குள் சென்றார் அப்பா.

அன்று ராமுவின் பள்ளியில் ஆண்டு விழா. எனவே, கலை நிகழ்ச்சிகள், கூட்டம் எல்லாம் முடிந்து மதியம் பன்னிரண்டு மணிக்கே ராமு வீட்டிற்கு வந்து விட்டான். சாப்பிட்டு விட்டுப் பாங்கிற்குப் போகக் கிளம்பினான். ''போகாதேடா. இங்கேயே விளையாடு'' என்று அம்மா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மெதுவாக பாங்கிற்கும், வீட்

கோணல் முகப் போட்டி!

* 1985 நவம்பரில், தங்கள் முகத்தைத் திறமையாகக் கோணலாக்கிக் கொள்ளும் போட்டி உலக அளவில் ஜெர்மனியில் நடைபெற்றது. இதில் முதல் பரிசு ஜெர்மனியைச் சேர்ந்த ஹேர்பர்ட் என்பவருக்கும், 2வது பரிசு கார்டன் பிளாக்வாக் என்பவருக்கும் கிடைத்தது.

— ஆரா. வெங்கடேஷ், குத்தாலம்.

டிற்கும் இடையில் இருந்த கதவை ஓசையின்றித் திறந்து கொண்டு வங்கிக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான் ராமு.

அங்கே அவனுக்கு ஒரு அதிர்ச்சியான காட்சி காத்திருந்தது!

பாங்கில் எல்லோரும் கையைத் தூக்கியபடி நின்றனர்! மூன்று பேர் முகத்தில் கண் மட்டும் தெரியும்படியாகக் கறுப்பு முகமூடி அணிந்து கையில் துப்பாக்கி வைத்திருந்தனர். மானேஜர், கேஷியர் இரண்டு பேருக்கும் அருகில் இருவர் நிற்க, மூன்றாவது ஆள் வாடிக்கையாளர் நிற்கும் இடத்தில் கையில் துப்பாக்கியுடன் நின்றிருந்தான். ''யாரும் அசையக் கூடாது. அசைந்தால் சுட்டுடுவேன்'' என்று அவர் கர்ஜித்துக் கொண்டிருக்கும் போதுதான் ராமு ஓசையின்றி பாங்குக்குள் நுழைந்தான். ஆனால், அவனை யாருமே கவனிக்கவில்லை.

போன வாரம் டீ. வி. யில் பார்த்த சினிமாவில் இப்படித்தானே திருடர்கள் வந்தார்கள்! இந்தத் திருடர்களைப் பிடிக்க அப்பா காட்டின பெல்லை அடிக்க வேண்டியது தானே? ஏன் அப்பா இப்படிப் பேசாம நிற்கிறார்!' என்று யோசித்த ராமுவின் குட்டி மூளை ஒரு நிமிட நேரத்தில் ஒரு திட்டம் போட்டது. அப்பாவின் அறைக்குள் மெதுவாக நுழைந்து பெல்லை அழுக்கி விட்டு, மேசைக்குக் கீழேயே ஒளிந்து கொண்டான். அவ்வளவுதான்! 'கிர்ர்...' ரென்று சத்தமான சத்தம் சுற்றுப்புறத்தையே கதிகலங்க வைத்தது! இதை எதிர்பார்க்காத திருடர்கள் ஓட முயன்றனர்! அதற்குள் துப்பாக்கியுடன் இரண்டு போலீஸ்காரர்கள் உள்ளே வந்து விட்டனர். அப்புறம் என்ன? வங்கியைக் கொள்ளையடிக்க வந்த முகமூடித் திருடர்கள் பிடிபட்டனர்.

அப்புறம்தான் எல்லோருக்கும் 'யார் அவசர மணியை அடித்திருக்கக் கூடும் என்று யோசிக்கத் தோன்றியது! மேசைக்குக் கீழிருந்து சாவகாசமாக வெளியே வந்த ராமு, ''திருடன் வந்தா அடிக்கிற மணின்னு எனக்குச் சொல்லிக் கொடுத்தீங்களே! உங்களுக்கு மறந்து போச்சா அப்பா?'' என்று கேட்டான்.


ராமுவின் அப்பா மகனைத் தூக்கி முத்தம் கொடுத்தபடி, ''இல்லை ராமு. இன்று அக்கௌண்டன்ட் லீவு. அதனால், நான் என் மேசைக்கும் அவர் மேசைக்கும் நடந்து கொண்டிருந்த போது, இடையில் வந்து ஏதோ கேட்பது போல என் கழுத்தில் துப்பாக்கியை வைத்து விட்டான் திருடன்'' என்று விளக்கினார்.

''ஆமாம் சார். நானும் என் பெல்லை அடிக்க முயன்ற போது என் முட்டியிலேயே அடித்து பின்புறமாக இழுத்து நிற்க வைத்து விட்டான்'' என்றார் கேஷியர் பரிதாபமாக.

''ராமு, நீ எல்லோரையும் விடாம கேள்வி கேட்பதைப் பார்த்து உனக்கு மூட்டைப் பூச்சின்னு பேர் வைத்தோம். ஆனால் நீ, உண்மையாகவே ஒருத்தர் கண்ணிலும் படாது மூட்டைப்பூச்சி மாதிரியே நுழைஞ்சு, பெல்லை அடிச்சு எங்களையும் வங்கிப் பணத்தையும் காப்பாத்திட்டே'' என்று ராமுவைத் தூக்கிக் கொண்டான் பியூன் மாணிக்கம்.

''இனிமே எத்தனை கேள்வி வேண்டுமானாலும் கேள். எல்லோரும் பதில் சொல்றோம்'' என்று ராமுவைத் தூக்கிக் கொண்டார் கேஷியர்.

எல்லோரும் சிரித்தனர்.



கம்பளிப் புழுவும் நத்தையும்

மெல்ல ஊர்ந்து வந்த கம்பளிப் புழு எதிரே ஒரு நத்தையைப் பார்த்து.

''வணக்கம் அண்ணா''

''என்ன நான் உனக்கு அண்ணனா? என்ன உளறுகிறாய்?

''நாம் இருவரும் ஒரே இனந்தானே? அண்ணன் என்று உன்னை அழைக்கக் கூடாதா?

பார்க்கவே பிடிக்காத நீயா எனக்குத் தம்பி? நீ போ! வேறு பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டு போனது நத்தை. கம்பளிப் புழு வருத்தத்துடன் நகர்ந்தது.

ஒருநாள் நத்தை அழகிய வண்ணத்துப் பூச்சி ஒன்றைக் கண்டது. அது மகிழ்ச்சியோடு அங்குமிங்கும் பறந்தது. அதன் பல வண்ணச் சிறகுகள் பளபளப்பாக இருந்தது.

அதன் அழகில் மயங்கியது நத்தை.

''பட்டாம்பூச்சி! பட்டாம்பூச்சி! நீ மிக அழகாய் இருக்கிறாய். உன் சிறகுகள் என்ன பளபளப்பு. இங்கே வாயேன்! கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்'' என்றது.

''திமிர்ப் பிடித்த நத்தையே நானா அழகாய் இருக்கிறேன்? என் சிறகுகள் தான் உனக்குப் பிடிக்கின்றன. பார்க்கவே பிடிக்காமல் ''சீ போ'' என்று நீ வெறுத்த பழைய கம்பளிப் புழுதான் நான்'' என்றது வண்ணத்துப்பூச்சி.

வெட்கம் அடைந்த நத்தை தன் உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டது.

(பிரெஞ்சு நீதிக்கதை)

— அரக்கோணம் சங்கரபாண்டியன்

எந்த வயதில் நீச்சல் கற்கலாம்?

"நீச்சல் கற்றுக் கொள்ள வயது ஒரு வரம்பே கிடையாது" என்று சொல்கிறார், திரு. எம்.பி. செல்வன். இவர் சென்னை ஒய். எம். சி. ஏ. கல்லூரி நீச்சல் பயிற்சியாளர்.

குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுப்பதைப் பற்றி இந்தப் பயிற்சியாளர் தெரிவித்த கருத்துக்களில் சில:

நடப்பது எப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் இயல்பானதோ, அதே போலத்தான் நீச்சலும். தரையாக இருப்பதால், குழந்தை தானே சுவரைப் பிடித்து கொண்டு எழுந்து நடக்க முயற்சிக்கிறது; பெரியவர்களும் அது நடக்கும் நிலைக்கு வந்து விட்டதை அறிந்து அதன் கையைப் பிடித்து நடை பழக்குகிறார்கள். நடப்பது என்ற இயல்பான செயல், பெரியவர்கள் கொடுக்கும் ஊக்கத்தால் முழுமை பெறுகிறது.

அது போலவேதான் நீச்சலும். கிராமங்களில் வாய்க்கால்கள், நீரோடைகள், குளங்கள், ஏரிகள் என்று ஏதாவது ஒரு நீர் நிலை இருக்கும். அதில் குளிப்பதற்காகப் போகும் பெரியவர்கள், தங்களுடன் சிறு குழந்தைகளையும் அழைத்துச் செல்வார்கள். தாங்கள் நீந்திக் குளிக்கும் போதே அந்தக் குழந்தைகளையும் தண்ணீரில் விடுவார்கள். தண்ணீர் என்றாலே குழந்தைகளுக்குக் கும்மாளம் தான். எளிதாக நீந்தக் கற்றுக் கொண்டு விடுவார்கள்.



* ஹரீஷ்

சென்னை போன்ற நகரங்களில் நீச்சல், குளங்களுக்குப் போய்த் தான் நீச்சல் பழக வேண்டும். இம்மாதிரியான நீச்சல் குளங்களில் நீரின் ஆழம் மூன்றடியிலிருந்து சுமார் பத்து அடி வரை அல்லது அதற்கு மேலும் இருக்கும். சிறுவர்களுக்கு நீரைப்பற்றி அவர்களுக்குள்ள கூச்சத்தை; பயத்தைப் போக்க வைக்க வேண்டும். அதற்குப் பிறகு தண்ணீருடன் அவர்களுக்கு நட்புறவை ஏற்படுத்த, மூன்றடி ஆழ நிலையில் இறக்கி, மெல்ல தண்ணீருக்குள்ளேயே நடந்து வரப் பழக்குவோம். பிறகு,படிப்படியாக ரப்பர் குழாய், அல்லது சிறு மரப் பலகையைப் பிடித்துக் கொண்டு கால்களை உதைத்து நீந்தும் பயிற்சி, அப்புறம்,கைவீச்சு என்று அடுத்தடுத்த பயிற்சிகள்.

சில நுணுக்கமான பயிற்சி முறைகளை மேற்கொள்ள ஆறு முதல் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வயது வரம்பு பொருத்தமானது என்பது அனுபவத்தால் உணரப் பட்டது. ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நீச்சல் சொல்லித் தரலாம் என்றாலும், புது உத்திகளை குழந்தைகள் ஆறு வயதுக்கு மேல் கற்றுக் கொண்டால்தான் அவர்களுடைய உடல் வளர்ச்சி அதற்கு நன்கு ஒத்துழைக்கும்.

ஆனால், அதிலும் ஓரிரு விதிவிலக்குகள் உண்டு. ஒரு உதாரணம் — சென்னை கொரட்டூரில் உள்ள பக்தவத்ஸலம் வித்யாஸ்ரமத்தில் முதல் வகுப்பு மாணவன் டி.டி. ஹரீஷ். நாலரை வயது அவனுக்கு. அவனுடைய ஆர்வமும் உற்சாகமும் என்னை பிரமிக்க வைத்தன. அவனுக்கு வீடு வில்லிவாக்கத்தில். அங்கிருந்து நந்தனம் வந்து என்னிடம் அவன் நீச்சல் கற்றுக் கொள்கிறான் என்றால் அதற்கு அவனிடம் உள்ள ஈடுபாடும் அவனுடைய அம்மாவின் ஒத்துழைப்பும்தான் முக்கிய காரணம். காலையில்



சுவையான பழங்கள் உங்கள்
குழந்தை வளர்ந்திட.
குழந்தைக்கான ஃப்ரூட்ஸ் ஸலாட் உணவு'
ஆப்பிள், மாம்பழம் மற்றும்
வாழைப் பழத்தின் எல்லா
வித நற்பயன்களையும் உங்கள்
குழந்தைக்குத் தருவது ஃபாரெக்ஸ்
ஃப்ரூட்ஸ் மட்டுமே—அத்துடன்
கோதுமை மற்றும் பாலும் கொண்டது.
குழந்தைகள் மிகவும் விரும்பும்,
முன்கூட்டிப் பக்குவம் செய்யப்பட்ட
சுவைமிக்க உணவு.
ரெகுலர் பேக்கைவிட
100 கிராம் அதிகம்.
ஃபாரெக்ஸ்-ஃப்ரூட்ஸ்
சுவையுடன் வளரும் வழி.
Farex-fruits
WITH CEREAL, FRUITS AND MILK
DELICIOUS
ந்தக் கடையிலும் சிக்கனமான ஒரே விலையில் கிடைக்கிறது.
Gx.357.90 Tm

ஹரீஷை பள்ளிகூடத்துக்குத் தயார் பண்ணி எட்டு மணிக்குள்ளாகக் கொண்டு போய் விட்டுவிட்டு வருவாங்க; பிறகு வீட்டுக்கு வந்து மதியம் ஒன்றரை மணிக்கு அவனுக்குப் பள்ளிகூடம் விடும் போது கொடுப்பதற்காக சாப்பாடு எடுத்து கொண்டு போவார். பள்ளியில் அவன் சாப்பிட்டதும் லோக்கல் ரயிலில் வீட்டுக்கு வரும் வழியிலேயே அன்றைய பாடங்கள் என்னென்ன என்று கேட்டு, சொல்லிக் கொடுப்பார். பிறகு வீட்டுக்கு வந்ததும் மறுநாளைக்கான வீட்டுப் பாடங்களைப் படிக்கச் சொல்லி விட்டு, சுமார் நாலரை மணிக்கு, ரயில், பஸ் பிடிச்சு நந்தனம் ஒய்.எம்.ஸி.ஏ நீச்சல் குளத்திற்கு அவனை அழைத்து வருவார். சுமார் ஒரு மணி நேரம் நீச்சல் பயிற்சி நடக்கும். பிறகு மகனோடு வீடு திரும்புவார்.

அவருடைய இந்த முயற்சி வீண் போகவில்லை.

இன்டர் டிஸ்ட்ரிக்ட் நீச்சல் போட்டி நாலைந்து மாதங்களுக்கு முன்னால் நடந்தது. அதில் கலந்து கொண்ட ஹரீஷ் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றான். எட்டு வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டி அது. போட்டியில் கலந்து கொண்வர்களின் உயரத்தை ஒப்பிடும் போது அவன் ஒரு கைக் குழந்தையாகவே இருந்தான்!

அதோடு மாநில அளவில் ஒரு நீச்சல் போட்டி நடந்தது. போட்டியாளர்கள் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள். அவர்களுடைய இடுப்பு உயரத்துக்கே வந்த ஹரீஷ், அந்தப் போட்டியில் ஏழாவதாக வந்தான். போட்டியில் பங்கு பெற்றதற்காக அவனுக்கு ஓர் நற்சான்றிதழ் கிடைத்தது.

நீச்சல் ஒரு அற்புதமான உடற் பயிற்சி. உச்சந்தலை முதல் உள்ளங் கால்வரையிலான முழு உடம்புக்கும் ஆரோக்கியம் காக்கும் உன்னதமான பயிற்சி. ஆஸ்துமா, போலியோபோன்றவியாதிகளால்பாதிக்கப் பட்டவர்கள் இந்தப் பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது என்று டாக்டர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய நோயின் தன்மைக் கேற்ப முறையான நீச்சல் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

போலியோ நோயினால் ஒருவருக்கு முழங்காலுக்குக் கீழே உணர்வில்லை என்று வைத்துக்கொள்வோம். அதனாலேயே, அவர் முழங்காலுக்கு மேல் உணர்வுள்ள பகுதியையும், பயனற்றதாகச் செய்து விடுகிறார். உணர்வுள்ள பகுதிக்கு நீச்சல் பயிற்சி மூலம் இயக்கத்தை அதிகப்படுத்துவதால், முழங்காலில் உணர்ச்சியற்ற பகுதியும் மெல்ல மெல்ல இயக்கம் பெறும். அதாவது, அப்பகுதியில் உள்ள இறந்துவிட்ட செல்கள் கூட உயிர் பெறும்; உணர்ச்சி பெறும். இதை நான் அனுபவபூர்வமாகக் கவனித்திருக்கிறேன்.

முதலில் நீச்சல் கற்றுகொள்பவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி, கண் எரிச்சல்



ஹரீஷ், பயிற்சியாளர் திரு. எம். பி. செல்வனுடன்.

போன்றவை ஏற்படக் கூடும். நல்ல சுத்தமான தண்ணீரில் நீந்துவோர் இந்த ஆரம்ப கால சிறு உபாதைகளுக்கு பயப்படத் தேவையில்லை. ஆனால், அதுவே தொடர்ந்து இருக்குமானால், டாக்டரின் ஆலோசனையை நாடலாம்.

ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு அரை மணி நேரம் அல்லது சுமார் இரண்டாயிரம் மீட்டர் தூரம் நீச்சல் பழகுவது உடல் ஆரோக்கியத்துக்கு வழி செய்யும்.

என்னிடம் நீச்சல் பயின்ற பல மாணவர்கள் பல சிறப்புத் தகுதிகளைப் பெற்றிருப்பது எனக்குப் பெருமையாகவே உள்ளது.

தேசிய அளவில் சாம்பியன்களை இந்த ஒய்.எம்.ஸி.ஏ. நீச்சல் குளம் உருவாக்கியிருக்கிறது. ஹரீஷ் மாதிரியான குழந்தையையும், நீச்சல் வீரனாக என்னால் உருவாக்க முடிந்ததென்றால் அதற்கு அவனுடைய தனிப்பட்ட ஆற்றல், அவனுடைய பெற்றோரின் ஆர்வம் இவையும் முக்கிய காரணங்களாகும்.

— அட்டை வண்ணப்படம், படங்கள், கட்டுரை: பிரபுசங்கர்.



சினிமாவுக்கா போனே?

அதிகாலையிலேயே எழுந்து பழக் கூடையுடன் புறப்பட்டு விடும் தாயார், இன்று வழக்கத்துக்கு மாறாகப் படுக்கையில் சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்துக் காரணம் புரியாமல் திகைப்படைந்தாள் சுமித்ரா.

ஒருவேளை அதிகக் களைப்பில் தூங்குகிறாளோ என்று நினைத்தவள், அருகில் சென்று, தாயின் கையைப் பிடித்து, ''அம்மா'' என்று உலுக்கினாள். உடம்பு நெருப்பாய்ச் சுட, பதறிப் போன சுமித்ரா அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். காய்ச்சல் கடுமையாக இருந்தது!

மெதுவாகக் கண் விழித்து சுமித்ராவைப் பார்த்த தாயார், ''உடம்புக்குக் கொஞ்சமும் முடியல்லேம்மா. இன்னைக்கு வியாபாரத்துக்குப் போக முடியாதுன்னு தான் தோணுது. அடிச்சுப் போட்ட மாதிரி உடம்பெல்லாம் வலிக்குது'' என்று முனகினாள்.

தாயாரின் சிரமத்தைப் பார்க்க சுமித்ராவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தன்னைப் படிக்க வைப்பதற்காகவும், பட்டினி இல்லாமல் நாட்களைக் கழிக்கவும் அம்மா எவ்வளவு சிரமப்படுகிறாள். வாழைப் பழக் கூடையைச் சுமந்து கொண்டு, வெயிலிலும் மழையிலும் தெருத் தெருவாக அவள் அலைவதாலேயே வீட்டில் அடுப்பெரிகிறது.

ஒரு நிமிடம் கூட அவள் ஓய்ந்திருப்பதில்லை. இரயில் வருகிற நேரத்தில் இரயில் நிலையத்தில் இருப்பாள். சினிமாக் காட்சி முடிகிற போது கொட்டகை வாசலில் நிற்பாள். கோயில் திருவிழாவா, பொதுக் கூட்டமா, எங்கும் அவளை வாழைப் பழக் கூடையுடன் பார்க்கலாம்.

இப்படி ஐந்தும் பத்துமாகச் சம்பாதித்துத்தான் சுமித்ராவை எந்தச் சிரமமும் தெரியாமல் படிக்க வைக்கிறாள். தகப்பனற்ற அவளை எப்படியும் உயர்நிலைக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற தணியாத ஆவல்தான், தன் தாயாரை இப்படி உழைக்க வைக்கிறது என்பதை சுமித்ரா மிக நன்றாக அறிவாள். அதனாலேயே, தன் பொறுப்பை

உசந்தன்

உணர்ந்து நன்றாகப் படித்து, பள்ளிக் கூடத்தில் திறமைசாலியாக விளங்கினாள் அவள்.

நேற்று முழுவதும் பெய்த மழையில் அம்மா நன்றாக நனைந்திருப்பாள். அதுதான் இப்படித்திடீரென்று காய்ச்சல் வந்திருக்கிறது என்று எண்ணினாள் சுமித்ரா.

''இன்னைக்கு எங்கேயும் போகாதீங்க. படுத்திருங்க. எட்டு மணிக்கு ஆஸ்பத்திரி திறந்ததும் மருந்து வாங்கணும். உடம்பு சரியான பிறகு வியாபாரத்தைப் பார்த்துக்கலாம்'' என்று தாயாரை உரிமையுடன் கடிந்து கொண்டாள் சுமித்ரா.

இருவரும்சென்று மருந்து வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்போது மணி ஒன்பதைத் தாண்டி விட்டது. அம்மாவுக்கு மருந்து கொடுத்துப் படுக்க வைத்து விட்டு, பார்லி கஞ்சி போட்டாள்.

கஞ்சியை ஆற வைத்து எடுத்து வந்த சுமித்ரா அம்மாவிடம், ''கவிதா வீட்டுக்கு படிக்க வர்றதாச் சொல்லிட்டு வந்தேம்மா,'' என்றாள்.

''அதை முதலிலேயே சொல்றதுக்கு என்னடி? சீக்கிரம் போ. அந்த புள்ளை வேற காத்துக்கிட்டு இருக்குமில்ல..? படிக்கிறதுதான் உனக்கு முக்கியம். தெரியுதா..? அதை விட்டுட்டு வேற எதுவும் நீ செய்ய வேண்டாம். உம், கிளம்பு'' என்று அவசரப் படுத்திக் கிளம்ப வைத்தாள் தாய். நேரத்தை வீணாக்காமல் மகள் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு.

''நல்லவேளை, இப்பவாவது வந்தியே, எங்கே வராமலே இருந்துடுவியோன்னு நினைச்சேன்... என்று அவளை வரவேற்ற கவிதா தெரியுமாடி உனக்கு? சொர்ணா நடிச்ச படம் நம்ம ஊர் கொட்டகையில ஓடுது. நீயும் வரதாச் சொல்லி அம்மாகிட்டே அனுமதி வாங்கி இருக்கேன். மத்தியானம் பகல் ஆட்டத்துக்குப் போகலாண்டி'' என்றாள் உற்சாகத்துடன்.

''படிக்கறதுக்குத்தானே என்னை வரச் சொன்னே'' என்று தோழியின் முகத்தைப் பார்த்தாள் சுமித்ரா.

''ஆமாண்டி, படிக்கலாம்னு தான் உன்னை வரச் சொன்னேன். பிறகு தான் தெரிஞ்சது சொர்ணா நடிச்ச படம் ஓடற விஷயம்.''

நடிகை சொர்ணாவின் மேல் சுமித்ராவுக்கு மிகுந்த அபிமானம் உண்டு. அதனால் அவள் நடித்த படம் என்றதும் மனம் சபலத்தால் நிறைவதைத் தவிர்க்க முடியவில்லை. அதே நேரம், படிக்கப் போவதாகச் சொல்லி விட்டுச் சினிமாவுக்குப் போனதை அறிந்தால், அம்மா மிகவும் வருத்தப்படுவாள். சினிமா கொட்டகை வாசலிலேயே பழம் விற்கும் அவள், தனக்குத் தெரிந்து இதுவரை ஒரு சினிமா கூடப் பார்த்ததில்லை. நல்ல படிப்பினை உள்ள திரைப்படம் என்று தெரிய வந்தால் மட்டும் அவளாகவே சுமித்ராவை அழைத்துக் காசு கொடுத்து அனுப்புவாள். படிப்பை விட்டுத் தன் பெண்ணின் கவனம் சிதறி விடக் கூடாது என்று அல்லும் பகலும் உழைக்கும் தாய்க்குத் தெரியாமல், தோழியோடு செல்வதற்கு அவள் மனம் ஒப்பவில்லை.

மிகுந்த தயக்கத்துடன், ''அம்மா கிட்ட படிக்கப் போறதாச் சொல்லிட்டு வந்திருக்கேன். அவங்களுக்கு உடம்பு வேறே சரியில்லே. இந்த நேரம் நான் வீட்ல இருந்திருந்தா ஏதாவது உதவியாவது செய்திருக்கலாம். நேற்றைக்கு உங்கிட்ட படிக்க வரதாச் சொன்னதாலதான் வந்தேன். சினிமா எல்லாம் இன்னைக்கு வேண்



டாம்'' என்றாள்.

ஆனால், கவிதா விடுவதாக இல்லை. ''சாயங்காலம் நாலு மணிக்குள்ளே வீட்டுக்குப் போயிடலாம். நீயும் எங்கூட வருவேன்னு நினைச்சுத்தான் அம்மாகிட்டே அனுமதி வாங்கினேன். கடைசி நேரத்துல வேணான்னு சொல்லிடாதே'' என்று வற்புறுத்தினாள்

''அம்மாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவாங்களே'' என்று சுமித்ரா தயங்க,

''அவங்களுக்குத்தான் உடம்பு சரியில்லையே? இன்னிக்கு பழம் விற்கவும் வர மாட்டாங்களே? அப்புறம் எப்படித் தெரியும்...? உனக்கு சொர்ணா நடிச்ச படம்னா ரொம்பப் பிடிக்குமே, அதுதான் சொல்றேன்'' என்று அவள் ஆசையைக் கிளறினாள் கவிதா.

தன் தாயார் இன்று பழம் விற்பதற்குக் கொட்டகை வாசலுக்கு வர மாட்டாள். அதனால் அவளுக்கு, தான் திரைப்படத்திற்குச் செல்வது தெரிய வர வாய்ப்பில்லை என்பது சுமித்ராவுக்கு மிகுந்த தைரியத்தைக் கொடுத்தது. அவள் கவிதாவின் யோசனைக்கு இணங்கினாள்.

மாலையில் படம் முடிந்து வெளியே வந்த போது சுமித்ராவின் மனம் மிகவும் சோர்ந்து போயிருந்தது. படிக்கப் போவதாகச் சொல்லி விட்டு, இப்படிச் செய்து விட்டேனே என்று வருந்தினாள். உடனே வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் நடந்ததைச் சொல்லி விட்டால்தான் மனம் ஆறுதல் அடையும் போலிருந்தது. ஒருவேளை அம்மா திட்டினாலும் கூட தான் செய்த தவறின் பொருட்டு அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்.



இப்படி எண்ணியவாறு கொட்டகை வாசலுக்குத் தன் தோழியுடன் வந்தாள் சுமித்ரா. அவசரமாக வெளியே நடக்க முற்பட்டவளை சட்டென்று காதில் விழுந்த அந்தக் குரல் திடுக்கிட்டு நிற்க வைத்தது.

''ரஸ்தாளி, பூவன் பழம்'' என்று கொட்டகை வாசலில் ஓங்கி ஒலிக்கும் பழகிய குரலைக் கேட்டுப் பதறியவளாய்த் திரும்பிப் பார்த்தாள் அவள்.

வழக்கம் போலதான் பழம் விற்கும் இடத்தில் நின்று கொண்டு, கூட்டத்தினரைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தது அவளது தாயேதான்! காலையில் கடும் காய்ச்சலாகப் படுத்துக் கிடந்தவள் எதற்கு வந்தாள்?

திகைத்து நின்ற சுமித்ராவை எதேச்சையாகத் திரும்பிய தாயின் கண்கள் பார்த்து விட்டன. அவளால் ஒருகணம் தன் கண்களையே நம்ப முடியவில்லை. படிக்கப் போவதாகச் சொல்லி விட்டுச் சென்ற மகள் திரைப்படக் கொட்டகையிலிருந்து வெளியே வருகிறாளே! இது என்ன?

அவளது வியப்பு மறுநிமிடமே கோபமாக உருவெடுத்தது. ''ஏய், சுமித்ரா'' என்று கூட்டத்தையும் மறந்து அவள் கத்த, ஒன்றும் பேச முடியாமல், ''வந்தும்மா... ரொம்ப நல்ல படம்னு எல்லோரும் சொன்னதால... இவ ரொம்பவும் வற்புறுத்திக் கூப்பிட்டா, அதுதான்...'' என்று தோழியைக் காட்டித் திணறினாள் அவள்.

அம்மாவின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது. ''உனக்கு பீஸ் கட்டணுமே, உடம்புக்கு முடியல்லேன்னு படுத்துக் கிடந்தா எப்படின்னு கூடையைத் தூக்கிக்கிட்டு, இந்த காய்ச்சலோட நான் வந்திருக்கேன்... நீ என்னடான்னா, படிக்கப் போறேன்னு சொல்லிட்டு, சினிமா பார்க்க வந்திருக்கியே..! கொஞ்சமாவது பொறுப்பிருந்தா இப்படிச் செய்வியாடி?'

கவிதா அவசரமாகக் குறுக்கிட்டு, ''சுமித்ரா மேலே தப்பில்லீங்க... அவ படிக்கலாம்னுதான் வந்தா. நான்தான் வற்புறுத்தி இங்கே அழைச்சுட்டு வந்தேன். தப்பு என் மேலதான். மன்னிச்சுடுங்க'' என்றாள். தன்னால் இப்படி ஆகி விட்டதே என்ற உண்மையான வருத்தம் அவள் குரலில் தொனித்தது.

அதன் பிறகுதான் ஓரளவு அமைதியடைந்தாள் அம்மா. ''உன்னோட வந்ததுக்காகச் சொல்லலைம்மா. எங்கிட்ட சொல்லிக்காம இவ சினிமாவுக்கு வந்தது தப்பில்லியா..? அதுதான் சொன்னேன்'' என்றாள்.

கவிதா தன் செயலுக்கு மீண்டும் மன்னிப்புக் கோரியவளாய் விடைபெற்றுக் கொண்டாள்.

வீடுதிரும்பிக்கொண்டிருக்கையில், சுமித்ரா வருத்தத்துடன் தன் தாயாரிடம், ''அம்மா, நான் செய்தது தப்புத்தான். கவிதா சொன்னபோது நான்தான் உறுதியா மறுத்திருக்கணும். தப்பு என் மேலதான். இனி இப்படிப் பொறுப்பில்லாம நடக்க மாட்டேன்" என்றாள்.

அவளை ஆதரவுடன் திரும்பிப் பார்த்த அம்மா, ''சுமித்ரா, எந்த மண்ணுல விளைஞ்சாலும், இந்தப் பழத்தோட மணமோ, சுவையோ மாறுபடறதில்லே. அது மாதிரி, எந்த சூழ்நிலையில இருந்தாலும் நம்முடைய குணத்தையோ, குறிக்கோளையோ மாத்திக்கக் கூடாது. நம்முடைய நோக்கங்களை அடையணும்னா சூழ்நிலைகளால பாதிக்கப்படாத மனசு நமக்கு வேணும். இது மாதிரி சபலங்களுக்கு உன்னை ஆட்படுத்துகிற சூழ்நிலைகள் இனி வரும்போது, நீ கவனமா இருக்கணும், தெரியுதா'' என்றாள்.

புரிந்து கொண்டவளாய்த் தலையசைத்த சுமித்ரா, புதிய உறுதியுடன் அம்மாவைப் பின்தொடர்ந்தாள்.


நாயின் மூக்கு

காற்று வீசும் திசைக்கு எதிராகத் தனது மூக்கு இருக்கும்படியாகவே நாய் எப்போதும் படுக்கும். எதிரி வருவதை மோப்பத்தால் சுலபமாக உணரவே இவ்வாறு செய்கிறது.

— ஆ. வெங்கடேசன், திண்டிவனம்.

சைக்கிள் விநோதங்கள்!

ஆழி



1779-ஆம் ஆண்டு, பிளான்ஷார், மெகாரர் என்ற இரு பிரெஞ்சுக்காரர்கள்தாம் முதன் முதலில் சைக்கிளை உருவாக்கினர். அந்த சைக்கிளின் அமைப்பு வேடிக்கையானது. அது ஒரு மரச்சட்டத்தின் இரு முனைகளிலும் இரு சக்கரங்களால் இணைக்கப்பட்டிருந்தது. தரையில், கால்களால் உந்தித்தான் அதைச் செலுத்தவேண்டும்; திருப்பங்களிலெல்லாம் கீழே இறங்கித் திருப்பி வைத்துக் கொள்ள வேண்டும்!


1816-ஆம் ஆண்டு 'கார்ல் டிரெய்ஸ்' என்ற ஜெர்மானியர், தன் பெயரைச் சேர்த்து 'டிரெய்ஸீன்' என்ற பெயர் வைத்து ஒரு சைக்கிளைச் செய்தார். அதில், விருப்பம் போல் திருப்புவதற்கு வேண்டிய கைப்பிடி முன் சக்கரத்துடன் இணைக்கப்பட்டிருந்தது!





அதில் சில மாறுதல்களுடன் 1818-இல், 'பாரன் வான்ட்ரைஸ்' என்னும் பிரெஞ்சுக்காரர் 'மரக்குதிரை' என்ற பெயரில் அமைத்தார். இதையும் பெடல் இல்லாமல் தரையில், காலால் உந்தித்தான் ஓடச் செய்ய வேண்டும்!


1843-இல், 'கில் பாட்ரிச் மாக்மில்லன்' என்னும் ஸ்காட்லந்துக்காரர் பின்பக்கத்துச் சக்கரத்தை இயங்கச் செய்யும் பெடல்களை அமைத்தார்.



1969-ஆம் ஆண்டுதான், 'ஸ்டான்ஸன்' என்பவரால் 'சைக்கிள்' என்று பெயர் கொடுக்கப்பட்டது!




1880-இல் தான், இரு சக்கரங்களும் சமமாக உலோகத்தால் சைக்கிள் உருவாக்கப்பட்டது. 1885-இல், ஜேம்ஸ் ஸ்டார்லி என்பவர், இதற்குப் பெடலுடன் செயினும் இணைத்தார்.



இப்போது உள்ள 'பெல்' அப்போது இல்லை. ஒரு பெரிய வெண்கல மணி சைக்கிளின் முன் கட்டப் பட்டிருக்கும்!

1863-ஆம் ஆண்டு, பியாரிலாலிமெண்ட் என்ற பிரெஞ்சுக்காரர் முன் சக்கரம் பெரிதாகவும், பின் சக்கரம் சிறிதாகவும் உள்ள ஒரு சைக்கிளை அமைத்தார். பெடல் முன்சக்கரத்தில் இருந்தது. இதன் கிண்டல் பெயர்: எலும்புக் குலுக்கி!

இப்படியும் ஒரு சைக்கிள் இருந்தது. இதன் பெயர் கங்காரு சைக்கிள்! இன்னமும் இது ஹாலந்து மியூசியத்தில் இருக்கிறது!



1888-இல் தான் ஜான் பாய்டு என்பவர் காற்றடைத்து உப்பக்கூடிய டியூபும் டயரும் சைக்கிளில் பொருத்தினார்!

சைக்கிளைப் பற்றி அந்தக்கால விளம்பரம் இது: 'இந்த வண்டி மிகச் சாதுவானது! கடிக்காது! உதைக்காது! தொந்தரவு தராது! தீனி எதுவும் போட வேண்டியது இல்லை! சவாரி செய்வது மிகவும் சுலபம்!


சைக்கிளில் சில புதிய கண்டுபிடிப்புகள்

இதோ, ஒரேசமயத்தில் 12 பேர்கள் அமர்ந்து ஓட்டக்கூடிய சைக்கிள். இதைத் தயாரிக்க 11 மாதங்கள் ஆயின! உலகின் மிக நீளமான சைக்கிள் என்று பரிசும் பெற்றது இது. இதற்குச் சக்கரங்கள் இரண்டுதான்! ஜெர்மனியின் தயாரிப்பு இது!


ஒரே சமயத்தில் 35 பேர்கள் சவாரி செய்யக் கூடிய சைக்கிளை பெல்ஜியத்தில் தயாரித்திருக்கிறார்களாம்!




இரண்டு பேர்கள் அமர்ந்து, சுகமாகச் சாய்ந்து கொண்டு மிதித்துச் செலுத்தக் கூடிய சைக்கிளை மாஸ்கோவில் தயாரித்திருக்கிறார்கள். இதற்கு மூன்று சக்கரங்கள்.



இதுவும் மாஸ்கோ தயாரிப்பு தான்! ஒருவர் முதுகில் ஒருவர் சாய்ந்து கொண்டு சைக்கிள் மிதிப்பது. சக்கரங்கள் நான்கு!






உலகிலேயே மிகவும் உயரமான சைக்கிள் ஒன்றைத் தயாரித்திருக்கிறார் நார்த் ஹாம்டனைச் சேர்ந்த மால்கம் கிளார்க் என்பவர்!

செயின் இல்லாமல் பெடல் செய்யக்கூடிய சைக்கிள்.






இரண்டு பேர்கள் அமர்ந்து செலுத்தக் கூடிய சைக்கிள் இது.

சில தகவல்கள் :

சைக்கிளில் சவாரி செய்த முதல் பெண்மணி லேடி ஹர்பெட்டன்.

சைக்கிள் உற்பத்தியில் உலகில் முதல் இடம் இந்தியாவுக்குத்தான்! இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்று விட்டது!

125 நாடுகளுக்கு மேல், இந்திய சைக்கிள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன!



நெருப்புக் கோழி நெருப்பைத் தின்னுமா?

ரேவதி

மரக்கிளையில் உட்கார்ந்திருந்த கூப்ளோவும் தசோளாவும், பாபுவுக்கும் உஷாவுக்கும் சைகை காட்டினர். இருவரும் தங்கள் பைனாகுலரைத் திருப்பினர்.

"அப்பா! எவ்வளவு நெருப்புக் கோழிகள்! காலும் கழுத்தும் எப்படிச் சிவப்பா இருக்கு! எத்தனை நீளம் கழுத்து!"

"கால் மட்டும் என்ன குறைச்சலாவா இருக்கு! எவ்வளவு உயரம்! பக்கத்துல பாரேன்... காட்டு ஆடுகள்... மந்தை மந்தையா இருக்கு!"

"ஐயையோ... நெருப்புக் கோழிக் கூட்டத்துக்கு முன்னால், சற்றுத் தள்ளிப் புதர் மறைவில் பாரேன்... பெரிய புலி... பதுங்கிப் பதுங்கி வந்துண்டிருக்கு!"

"க்ரெளக்க்க்க்... க்ரெளக்க்க்... க்க்க்"

நெருப்புக் கோழிக் கூட்டத்தின் தலைவனான 'அறுபதன்' தனது மிக நீண்ட கழுத்தைக் கம்பீரமாக உயர்த்தி எச்சரிக்கைக் குரல் கொடுத்தது. பதுங்கி வந்து கொண்டிருந்த புலியை அது பார்த்துவிட்டது.

அவ்வளவுதான்! அத்தனை நெருப்புக்கோழிகளும் வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கின. ஓட்டமென்றால் சாதாரண ஓட்டமா? மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகம்! புலியும் துரத்தி வந்தது.

நெருப்புக் கோழிக் கூட்டத்தோடு ஓடி வந்து கொண்டிருந்த காட்டு ஆடுகளும், மான்களும் கூடவே ஓடத் தொடங்கின. ஆபத்தை முதலில் அறியக் கூடியவை என்பதால்தான் அவை நெருப்புக் கோழிகளோடு அலைகின்றன.

கோழிகள் ஓடுவதைக் கவனமாகப் பார்த்தது அறுபதன். அதற்கு அறுபது வயதாகி விட்டது. அதனால் அப்பெயர். எல்லாக் கோழிகளும் ஓடி விட்டன. ஒரே ஒரு சின்னக் கோழி மட்டும்தான் பாக்கி. அது மட்டும் சற்றுப் பின்தங்கி வந்தது.

"என்ன ஆச்சு உனக்கு? புலி துரத்தி வர்றது தெரியலே?"

"தாத்தா, எனக்குக் கால்ல காயம். வேகமா ஓட முடியலே..."

"அதுக்காகப் பயப்படாதே. முடிஞ்ச வரை ஓடு. என் கண் முன்னாலேயே ஓடிக் கொண்டிரு."

புலி, நொண்டிக் கொண்டு ஓடிய சின்னக் கோழியையே குறி வைத்து வந்தது. அறுபதன் அதை முந்திக் கொண்டது. கடப்பாறை போன்ற உறுதிமிக்க கால்களால் புலியின் முகத்தில் அது ஓங்கி உதைத்தது. புலி ஒரு நொடி, நிலை கலங்கிப் போனது. அதைப் பயன்படுத்திக் கொண்டு தன் கூரிய கத்தி நகங்களால் புலியின் முகத்தில் பயங்கரமாகக் கீறியது. புலியின் ஒரு கண் பிய்ந்து இரத்தம் வழிந்தது. மறுபடி உதை! மறுபடி பாய்ச்சல்! இன்னொரு கீறல்!

புலி நிலைகுலைந்து தப்பி ஓட முயன்றது. அறுபதன் விடவில்லை. தன் கொக்கிக் கால்களைப் புலியின் சதைப் பிடிப்பான உடலில் அழுந்தப் பதித்துக் கிழித்தது. இப்பொழுது பேரனும் சேர்ந்து கொண்டது. புலி தீனமாக முனகிக் கொண்டு பின் வாங்கி ஓடிவிட்டது.

பைனாகுலரில் பார்த்துக் கொண்டிருந்த பாபுவும், உஷாவும் திகைத்துப் போனார்கள்.

"இவ்வளவு மூர்க்க குணமுடையவையா நெருப்புக்கோழிகள்! இவைகளை வைத்தா மாமா நெருப்புக் கோழிப்பண்ணை ஆரம்பிக்கப்போகிறார்! முடியுமா?"

"இவை யாரையும் அனாவசியமாகத் தாக்காது. தங்களை யாராவது தாக்கினால் விடவும் விடாது. பார்த்தீர்களே நேரில்? ஆனால், பழக்கினால் நன்றியோடு இருக்கும். ஆட்டு மந்தைகளை மேய்ந்து வர, நாங்கள் மனிதர்களைவிட நெருப்புக் கோழிகளையே அதிகமாக நம்புகிறோம்" என்றார் கூப்ளோ.

கூப்ளோவும், தசோளாவும் ஆப்பிரிக்கச் சுதேசிகள்; பாபு உஷாவின் மாமா, ஜிம்பாப்வேயில் தொடங்க இருந்த நெருப்புக் கோழிப் பண்ணைக்கு ஆலோசகர்கள். விடுமுறையைக் கழிக்க வந்திருந்த பாலு, உஷாவுக்கு, காட்டைச் சுற்றிக் காட்ட வந்திருந்தார்கள்.


கொண்டு வந்திருந்த மூங்கில் கூடையிலிருந்து வறுத்த முந்திரி, கடலை, பிஸ்கெட்டுகளை எடுத்து ஒரு பெரிய கிண்ணத்தில் வைத்துக் கொடுத்தார் தசோளா. கிண்ணம் புதுமையாக இருக்கவே, உஷா கேள்விக்குறியோடு தசோளாவைப் பார்த்தாள்.

"இவை நெருப்புக் கோழி முட்டையின் ஓடுகள். அடுப்பில் ஏற்றிச் சமைக்க முடியாதே தவிர, உண்கலமாகப் பயன்படுத்தலாம்" என்று சிரித்தார் தசோளா.

அறுபதன் பேரனோடு விரைந்து தன் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டது.

திடீரென்று வேட்டை நாய்களின் சப்தம் கேட்டது.

"க்ரௌக்க்க்க்... க்ரௌக்க்க்..." — அறுபதன் கம்பீரமாகக் குரலெழுப்பித் தன் கூட்டத்தினரை எச்சரித்தது. எல்லாக் கோழிகளும் காற்றாகப் பறந்து ஓடின. அறுபதன் மட்டும் பின்தங்கியது பேரனுடன்.



"தாத்தா, என்னால் இனி ஓட முடியாது. எனக்காகப் பின்தங்கி நீங்கள் வேட்டை நாய்களிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். நீங்களாவது தப்பித்துக் கொள்ளுங்கள்" என்றது பேரன்.

அறுபதன் பேரனின் தலையைச் செல்லமாக அன்புடன் கொத்தியது.

"மனிதர்கள் தங்களுடைய நாக்குச் சுவைக்காக என்னுடைய எண்ணற்ற உறவினர்களை, குழந்தைகளை, பேரக் குழந்தைகளை வளருமுன்பே வேட்டையாடி விட்டார்கள். தப்பியிருப்பவன்; அதிலும் அறுபது வயதாகியும் இருப்பவன் நம்ம சுற்று வட்டாரத்தில் நான்தான். என் கண்ணெதிரே நீ பலியாகி, நான் உயிரோடிருப்பதை என்னால் அனுமதிக்க முடியாது."


கீழேயிருந்த சிறு பள்ளத்தில் பேரனைத் தள்ளி, தன் அடர்ந்த சிறகுகளால் மூடி, தனது நீண்ட கழுத்தையும் வளைத்துக் கொண்டு தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டது அறுபதன்.


வேட்டை நாய்கள் நெருங்கின. திடீரென்று வானம் கறுத்து இரும்புக் கம்பிகளாக மழைத் துளிகள் விழத் தொடங்கின. வேட்டை நாய்கள் வந்த வழியே ஓடிவிட்டன. ஆபத்து நீங்கிய மகிழ்ச்சியில், அறுபதன் பேரனை எழுப்பிக் கொண்டு விரைந்தது.

"ஆபத்து வந்தால் நெருப்புக் கோழிகள் மண்ணுக்குள் தலையைப் புதைத்துக் கொள்ளும் என்பது சரியல்ல. தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டு ஏதோ புதர் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கித் தப்பித்துக் கொள்ள முயலும். அவ்வளவுதான்" என்று விளக்கினார் கூப்ளோ.

மரத்தடியில் அடுப்பு மூட்டித் தேநீர் தயாரித்து எடுத்து வந்தார் தசோனா. பேரனோடு அந்த மரத்தடிக்கு வந்தது அறுபதன்.

"விரட்டாதீர்கள். என்ன செய்கிறது என்று பார்க்கலாம். நெருப்புக் கோழிக்கு நெருப்புப் பிடிக்குமாமே. இவை நெருப்பைத் தின்பதைப் பார்க்க ஆசையாக இருக்கிறது" என்றாள் உஷா.





"சைக்கிள் சக்கரத்துலே மாட்டிக்கிட்டா, நாய் எப்படிக் கத்தும்?"

"வீல் வீல்னு!"

— சீர்காழி வி. ரேவதி.



"பி. டி. உஷா எப்படி ஆத்திச்சூடி படிப்பாங்க?"

"ஓடாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்!"

— வெ. ராஜாராமன், சென்னை — 47.



"ஒரு பல் போனதுக்காகவா சீப்பைத் தூக்கி எறிஞ்சுட்டே?"

"அதில் இருந்ததே ஒரே ஒரு பல் தானே?"

— எஸ். சிவபாதசேகரன், திருவையாறு.

கூப்ளோ சிரித்தார். "யார்தான் உங்கள் மொழியில் இதற்கு நெருப்புக் கோழி என்று பெயரிட்டார்களோ! இதற்கும் நெருப்புக்கும் எவ்விதத் தொடர்பும் இடையாது. இவை நெருப்பைத் தின்னவும் தின்னாது."


"ஐயையோ, சின்னச் சின்னக் கற்களைக் கூட இவை விழுங்குகிறதே!" என்றான் பாபு.

"இவைகளுக்கு வாயில் பற்கள் இடையாது. சாப்பிடும்பொருள் ஜீரணமாக வேண்டாமா? அதனால் கற்களை விழுங்கும். வயிற்றில் உணவு ஜீரணமாக இந்தக் கற்கள் உதவும்" என்றார் தசோனா.

கூப்ளோவின் இடுப்பில் இருந்த சாவிக் கொத்து, பிரிந்து மரத்தடியில் விழுந்தது. பளபளவென்று இருந்த அவைகளைத் தாத்தாவும் பேரனும் ஆவலுடன் கொத்தி எடுத்து விழுங்கி மகிழ்ந்தன!

அறிவியல் உண்மைகள் :

- நெருப்புக் கோழி நெருப்பைத் தின்னாது.
- பற்கள் இல்லாததால் இவை சிறு கற்களையும், கனமான இரும்புப் பொருட்களையும் விழுங்கி வைக்கின்றன.
- ஒட்டகத்தைப் போல் இதுவும் பல நாட்கள் வரை நீர் குடிக்காமல் உயிர் வாழும்.
- இது மணிக்கு நூறு கி. மீ. வேகத்தில் கூட ஓடும்.
- இதன் இறைச்சியில் கொழுப்புச் சத்து குறைவாக இருப்பதால், இறைச்சிக்காக இது வேட்டையாடப்படுகிறது.
- ஆபத்து வந்தால், தரையோடு தரையாகிவிடும். தலையை மண்ணுக்குள் புதைக்காது.
- தன்னைத் தாக்குவோர் எவரையும் இது விடாது. புலி சிங்கத்தையும் கூட இது வீழ்த்தும்.



உண்மைக் கதை

மறக்க முடியாத கேசவன்

வைகறைப் பொழுது. இருட்டு இன்னும் பிரியவில்லை. கோவிலுக்குச் செல்லும் தெரு அப்பொழுதே களை கட்டிச் சந்தடி மிகுந்து காணப்பட்டது. குளித்துவிட்டு ஈர உடையோடு அங்கப் பிரதக்ஷிணத்திற்கு பக்தர்கள் சென்று கொண்டிருந்தனர். அபிஷேகத்திற்காகவும், அர்ச்சனைக்காகவும் அவர்கள் எடுத்துச் சென்ற நறுமணப் பொருள்கள், சுற்று வட்டாரத்தையே மணக்க வைத்துக் கொண்டிருந்தன.

லட்சதீபக் கம்பத்தின் அருகே,கால்களில்லாத ஒரு சிறுவன் கைகளால் விந்தி விந்தி நகர்ந்து நகர்ந்து வந்து கொண்டிருந்தான். அடிக்கொரு தடவை அவன் 'குருவாயூரப்பா' என்று குரல் கொடுத்த போது, தெருவில் சென்றவர்களும் அவனோடு சேர்ந்து கொண்டனர்.

நேரமாக ஆக, தெருவில் மக்கள் நெரிசல் கூடிக் கொண்டே இருந்தது. சிறுவன் தீபக் கம்பத்தை நெருங்கி விட்டான்.

திடீரென்று ஒரு கூக்குரல்.

''கோவில் யானைமேல் யாரோ கல்லடித்து விட்டார்கள். அது யானையின் கண்ணில் பட்டுவிட்டது. யானை மூர்க்கமாகத் தெருவில் ஓடிவந்து கொண்டிருக்கிறது. விலகிப் போங்கள்''

தெருவே நொடியில் காலியாகி விட்டது! எழுந்து ஓட முடியாத அந்தச் சிறுவன் மட்டும்தான் தெருவில் இருந்தான். எல்லோரும் தங்கள் உயிரைக் காத்துக் கொள்வதில்தான் அக்கறை காட்டினரே தவிர, நடக்க முடியாத அவனைப் பற்றி யாரும் நினைக்கவில்லை.

தெரு அதிர்ந்தது. யானை மூர்க்கமாக ஓடி வந்து அந்தத் தெருவில் நுழைந்து சிறுவனை நெருங்கியது.

ஹரிசிங்

'சிறுவனின் வாழ்வு முடியப் போகிறது' என்று அனைவரும் எண்ணினர். ஏன், அந்தப் பரிதாபத்திற்குரிய சிறுவனே அப்படித்தான் எண்ணிக் கொண்டான்.

யானை சிறுவனின் அருகே வந்து நின்றது. சிறுவன் கண்களைத் திறக்க அஞ்சி, மூடிக் கொண்டான்.

'குருவாயூரப்பா! குருவாயூரப்பா!' என்று அவன் அலறிய அலறல் தெருவெங்கும் கேட்டது.

யானை சிறுவனை உற்றுப் பார்த்தது. தன் உறுதியான துதிக்கையால் சிறுவனைத் தூக்கியது!

சுற்றி மறைந்து ஒளிந்து நின்றவர்கள், நடக்கப் போகின்ற கோரக் காட்சியைக்காணப்பயந்து கண்களை மூடிக் கொண்டனர்.

ஆனால், யானை சிறுவனை ஒன்றும் செய்யவில்லை. துதிக்கையால் அவனைத் தூக்கியபடி கோவிலை நோக்கி நடந்தது. யானை இப்படி வருவதை அறிந்ததும், காத்திருந்த மக்கள் கூட்டம் ஓடி ஒளிந்து கொண்டது. சாமி தரிசனத்துக்காக மணிக் கணக்கில்மக்கள் காத்துநிற்கும் நீண்ட பிராகாரங்கள் எல்லாம் விரிச் சோடி விட்டன!


யானை கோவிலுக்குள் நுழைந்தது. பூவைப் போல் மிகக் கவனமாகத் தூக்கி வந்த சிறுவனை, தரிசன வாசலில் இறக்கி வைத்து விட்டுத் தன் வழியே ஆடி அசைந்து எதுவுமே நிகழாதது போல் சென்று விட்டது!

யாருக்குமே கிடைக்காத வாய்ப்பு. சிறுவனுக்கு யாருடைய தொந்தரவும் இல்லாமல், தனியாகக் குருவாயூரப்பன் தரிசனம் கிடைத்தது.

குருவாயூர் ஆலயத்தில் புதிதாக ஒரு கொடி மரத்தை நிறுவ ஏற்பாடுகள் நடந்தன. கொடி மரம் தயாரானது. அந்தப் புனிதமான மரத்தை நட குழி தோண்டப்பட்டது. யாகங்கள், பூஜைகள் எல்லாம் நடந்தன. குறிப்பிட்ட நல்ல நேரத்தில் கொடி மரத்தைத் தூக்கி நடுவதற்காக, பாகர்கள் புடைசூழ, அலங்கரிக்கப்பட்ட கோவில் யானை வந்தது. துதிக்கையால் கொடி மரத்தைத் தூக்கியது. குழிக்கு அருகே வந்ததும் ஏனோ அது தயங்கியது.

"ஆகட்டும். முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்று நம்பூதிரிகள் விரட்ட, பாகர்கள் யானையை விரட்டினர். பிரம்பால் அடித்தனர். யானை எதையும், யாரையும் பொருட்படுத்தவில்லை.

துதிக்கையால் தூக்கிய கொடி மரத்தை யானை மெதுவாகச் சுழற்றியது. சுற்றியிருந்த மக்கள் கூட்டம் பீதியோடு விலகிக் கொண்டது. கொடி மரத்தை மெதுவாகக் கீழே தரையில் வைத்த யானை, கொடி மரத்தை நடுவதற்காகத் தோண்டப்பட்டிருந்த ஆழமான சிறு குழிக்குள் துதிக்கை



யை விட்டது. எடுத்தது. அதன் பிடியில் ஒரு பூனைக் குட்டி இருந்தது! பூனையைப் பத்திரமாக இறக்கிவிட்டு, கொடி மரத்தைத் தூக்கி நட்டது அந்த மனிதாபிமானமிக்க யானை!

ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் அவசரம் அவசரமாகக் கரையேறினார்கள். காரணம், கோவில் யானை குளிக்க வந்து கொண்டிருந்ததுதான். எல்லோரும் வெளியேறி விட்டனர். ஆனால், ஒரு சிறுவன் மட்டும், அழுதபடி நீரில் நின்று கொண்டிருந்தான்.

"சீக்கிரம் வாப்பா. யானை குளிக்கணுமில்லே?" என்று குரல் கொடுத்



நார் பாகன்.


சிறுவன் அழுதானே தவிர வெளியே வரவில்லை. கரையில் நின்று கொண்டிருந்த யானை சில நிமிடங்கள் அழுது கொண்டிருந்த சிறுவனைக் கவனித்தது. துதிக்கையைச் சுழற்றி, பக்கத்தில் இருந்த பாகனின் தலைப் பாகையை எடுத்தது! நீருக்குள் நின்று அழுது கொண்டிருந்த சிறுவனிடம் நீட்டியது! சிறுவன் அதை வாங்கி உடுத்துக் கொண்டு கரையேறி யானையிடம் வந்தான்.

"உன் பெருமைகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், எனக்கு உதவவே நீ வருவாய் என்று எதிர்பார்க்கவில்லை. ஆற்றில் குளித்துப் பழக்கமில்லாததால், உடுத்தியிருந்த வேட்டி அடித்துக் கொண்டு போக, தவித்துக் கொண்டிருந்த என் நிலையை அறிந்து நீ உதவியிருக்கிறாயே...! நீ விலங்கல்ல! அந்தக் குருவாயூரப்பனேதான்!" என்று யானையின் துதிக்கையைப் பிடித்துக் கொண்டு அழுதான் சிறுவன்.

மக்களோடு மக்களாகப் பழகி, அறிவோடு சிந்தித்து, அவர்களுக்கு உதவி, அனைவராலும் விரும்பப்பட்ட யானைதான் குருவாயூர் கேசவன். பத்து வயதுக் குட்டியாக இருந்த போது, அதை நிலாம்பூர் அரசர், வேண்டுதலையாகக் குருவாயூர் கோவிலுக்கு வழங்கினார். யானையின் அறிவுத்திறமையும், தெய்வ பக்தியும், மனிதர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு உதவும் தன்மையும் விஞ்ஞானிகளுக்குச் சவாலாக இருந்தது! குருவாயூரப்பனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் கேசவனையும் தவறாது தரிசித்தனர்.

ஐம்பது ஆண்டு காலம் குருவாயூரப்பனின் தொண்டில் கழித்த கேசவனுக்கு, ஊர் மக்கள் 1973 ஆம் ஆண்டில் பொன்விழா கொண்டாடினர். 'கஜராஜன்' என்று பொறிக்கப்பட்ட பொற்பதக்கத்தைச் சூட்டினர். அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகளே கேசவன் உயிரோடு இருந்தது. தனது அறுபத்து மூன்றாவது வயதில் 1976 ஆம் ஆண்டு, கேசவன் மறைந்த போது ஊரே அழுதது. மனித நேயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த கேசவனை இன்றும் சிலை வடிவில் குருவாயூரில் காணலாம்.


விண்ணிலிருந்து பார்த்தால்...



விண்வெளியிலிருந்து பார்த்தால் பூமியில் புலப்படக்கூடிய ஒரே பொருள் "சீனப் பெருஞ்சுவர்"தான். மனிதன் மேற்கொண்ட மிகப் பெரிய கட்டட வேலை என்று இதைக் கூறலாம். 1684 மைல் நீளமுள்ள சுவர் இது. கி. மு. 214ல் இதன் வேலை தொடங்கியது. பல்லாயிரக்கணக்கான குற்றவாளிகள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். கட்டி முடிப்பதற்குள் பத்து இலட்சம் பேர் இறந்தனர்.

இது 30 அடி உயரமும், 32 அடி அகலமும் கொண்டது. 600 அடிக்கொரு காவல் கோபுரம் 40 அடி உயரத்தில் உள்ளது. 2000 ஆண்டுகளுக்குப் பிறகும் பெருஞ்சாதனையாக விளங்குகிறது இந்தச் சீனப் பெருஞ்சுவர்.

— என். நாகராஜன், தேனி.


இட்லி சுட்டு வியாபாரம் பண்ணினாரே உங்கப்பா... என்ன ஆச்சு?
ஊத்தி மூடியாச்சு!
எம்பையன் அறிவியல்ல ஒரு சந்தேகம் கேட்டதுக்கு நீங்க சொல்ல மாட்டேன்னு சொன்னீங்களாமே...? நியாயமா?
உங்க பையன் சந்தேகம் கேட்டது பரீட்சை ஹாலிலே!
... ஓட்டப்பந்தய வீரர்கள் 20-பேர்... போன் பண்ணிருக்காங்க; என்ன டிஃபன் இருக்கு?
சிரிப்...
"கோபாலனை 'கோபி'ன்னு கூப்பிட்டதுக்கு என்ன சொன்னான்?"
"கோவிந்தான்!"
இஸ்திரிக்காரர் என் சட்டையைத் தீய்த்திட்டாரே... கேட்டியா?
கேட்டேன். அவர் சட்டையே பண்ணலை!

ஆமையார்


தனியாய் நீந்தும் ஆமை யாரே
தங்க மான ஆமை யாரே!
மனைவி தன்னை அழைத்து வர
மாமி வீடு பயண மோ?


தோசைக் கல்லை முதுகின் மேலே
தூக்கிச் செல்லும் ஆமை யாரே!
ஆசை மனைவி வீடு செல்ல
அந்தக் கல்லும் தேவை யோ?

மாமி வீடு பெரிய குளமா?
மந்தி குளமா? மாங் குளமா?
சேம அம்பா சமுத் திரமா?
செப்பி டுவீர் ஆமை யாரே!

தயக்க மின்றி ஊர்ந்து செல்லும்
தாமத குண ஆமை யாரே!
முயலைப் போட்டிக் கழைத்து வெற்றி
முயன்று பெற்ற ஆமை யாரே.

— தமிழன்பன்.
வேட்டைநல்லூர்





பார்... பார்...

வானத்திலே நிமிர்ந்து பார்!
மாயா ஜால வித்தை பார்!
கூனல் பிறை போல வானில்
கோலங் காட்டும் வில்லைப் பார்!

வெயிலிலே மழையைப் பார்!
வேடிக்கையை நிமிர்ந்து பார்!
பையப் பையப் பல நிறத்தில்
படரும் வான வில்லைப் பார்!

வாழும் நொடி நேரத்துக்குள்
மனங் கவரும் வில்லைப் பார்!
ஏழு வண்ண ஓவியமாய்
எழிலைக் காட்டும் வில்லைப் பார்!

மைபடாத சித்திர வில்
மறைவதற்குள் ரசித்துப் பார்!
கைபடாத விசித்தி ரத்தைக்
கடுகி ஓடி வந்து பார்!

— தங்கமணி, சென்னை — 1.

நத்தையார்


வீட்டை முதுகில் தூக்கிச் செல்லும்
விந்தையான நத்தையாம்;
மூட்டை போலச் சுமந்து கொண்டு
முக்கி முனகிச் செல்லுமாம்!

இலைகள் புல்லின் அடியிலெங்கும்
இருக்கும் வித்தை கற்றது
தலையி லிரண்டு கொம்பு வழியைத்
தடவிச் சொல்ல நகர்வது.

படிப்படி யாய்ப் பற்கள் தம்மைப்
பார்க்க ஆசை உண்டுதான்!
கடித்தி டாமல் இலைகள் தின்னும்
கலையை எங்குக் கற்றதோ?

பகை யறிந்து கூண்டில் தன்னைப்
பதுக்கிக் கொள்ளும் தந்திரம்!
மழையில் பனியில் திரியும் நத்தை
மறைந்து வாழும் கோடையில்.

— ''பரிதி'' வேங்கடேசன்.



மந்திரப் பேழை!

ருமேனிய நாட்டுக் கதை
தமிழில் : வாமனன்

வெகு காலத்திற்கு முன்னால் ஒரு விவசாயி இருந்தான். அவனுடைய மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றதுமே இறந்து போனாள். குழந்தை அழகாக இருந்தது. அதற்கு மலர்விழி எனப் பெயரிட்டு, அன்போடு வளர்த்தான்.

விவசாயி இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டான். இன்னொரு பெண் குழந்தை பிறந்தது. இவள் பெயர் மேரி. மலர்விழியும் மேரியும்,அக்கா தங்கைகளானாலும் குணத்தால் மாறுபட்டிருந்தனர்.

மலர்விழி இயல்பாகவே அழகானவள்; சுறுசுறுப்பானவள். எந்த வேலையையும் எளிதில் கற்றுக் கொள்பவள்; உழைப்பாளி; எல்லோரிடத்தும் அன்பாக இருப்பவள்; மற்றவர்களை மதிப்பவள்.

மேரி எந்த வேலையையும் செய்ய மாட்டாள். சோம்பேறி. இரக்கமே இல்லாதவள். அவள் அம்மா தேவைக்கு அதிகமாகவே அவளுக்குச் செல்லம் கொடுத்தாள். ஆகவே, மேரிக்குத் தன் குறைகள் தெரியவே இல்லை.

மேரியும் அவளுடைய அம்மாவும் மலர்விழியைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். அவளைப் பாடுபடுத்திக் கடுமையாக வேலை வாங்கினர். தண்ணீர் எடுத்து வருவது, மாவு அரைப்பது, விறகு கொண்டு வருவது போன்ற கடினமான வீட்டு வேலைகளை எல்லாம் அவர்கள் மலர்விழிக்குக் கொடுத்தனர். மலர்விழியும் பொறுமையோடு அவற்றைச் செய்து முடித்தாள். அப்படியும் மேரியும், அவளுடைய அம்மாவும் திருப்தி அடையவில்லை. குற்றம், குறை சொல்லிக் கொண்டே இருந்தனர்.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்,' என்பார்கள் இல்லையா? ஒரு நாள் விவசாயி மலர்விழியை அழைத்தான். 'குழந்தாய், சித்தியிடம் நீ பணிவாக நடந்து கொண்டால் என்ன? மேரி உன் தங்கைதானே? அவளிடம் அன்பாக இல்லாமல் அடிக்கடி சண்டை போடுகிறாயாமே? உன்னால் வீட்டின் நிம்மதி போய் விட்டது. இனி இந்த வீட்டில் உனக்கு இடமில்லை. வெளியே நட்





என்று கோபமாகக் கூறினான்.

வேறு வழியில்லாமல், மலர்விழி தனது அத்யாவசியப் பொருள்களை யும், கொஞ்சம் ஆகாரத்தையும் எடுத்துக் கொண்டாள். அப்பாவை வணங்கினாள். கண்களில் நீர் வழிய, வீட்டை விட்டு வெளியேறினாள்.

புழுதி படிந்த நீண்ட சாலை. மலர் விழி நடந்து கொண்டிருந்தாள். சாலையில் ஒரு நாய்க்குட்டி படுத் திருந்தது. உடம்பெல்லாம் ஒரே அழுக்கு. எலும்புந் தோலுமாக அது இருந்தது. 'அக்கா! ரொம்பப் பசிக் கிறது. உடம்பு வேறு சரியில்லை. கொஞ்சம் உதவி செய்யேன். என் றைக்காவது ஒருநாள் நானும் உனக்கு உதவுவேன்!' என்று கெஞ் சியது.

மலர்விழியின் அன்பு உள்ளம் உரு கியது. தன்னிடமிருந்த உணவைக் கொடுத்தாள். அன்போடு தட்டிக் கொடுத்து விட்டு மேலே நடந்தாள்.

வழியில் ஒரு ஆப்பிள் மரம் இருந் தது. அது நன்றாக வளர்ந்திருந்தது என்றாலும், அடை அடையாக அதில் இருந்த பச்சை நிறக் கம்பளிப் பூச்சி கள், மரத்தைத் தின்று அரித்துக் கொண்டிருந்தன. 'பெண்ணே! கம் பளிப் பூச்சிகள் என்னை அழிக்கின் றன. வேதனையாக இருக்கிறது. ஒன்றுமே செய்ய முடியவில்லை. என் னைக் காப்பாற்றேன். என்றாவது ஒரு நாள் நானும் உனக்கு உதவு வேன்,' என்று மரம் கெஞ்சியது.

மலர்விழி கம்பளிப் பூச்சிகளை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே போட்டாள். காய்ந்த கிளைகளை யும், இலைகளையும் வெட்டி நீக்கி மரத்தைச் சுத்தம் செய்தாள். மரம் புதுப் பொலிவோடு தலையை அசைத்தது. மலர்விழி காட்டுப் பாதையில் பயணத்தைத் தொடர்ந் தாள்.

வழியில் ஒரு கிணறு. பாசி படர்ந்து, சேறும், சகதியுமாக இருந் தது. 'பெண்ணே! இந்தச் சேறும், சகதியும் எனக்கு பெரிய தொந்திர வாக இருக்கிறது. இந்தப் பாசி, சேறு எல்லாவற்றையும் நீக்கி, என் தண் ணீரைச் சுத்தமாக்கிக் கொடேன். என்றைக்காவது ஒரு நாள் நானும் உனக்கு உதவி செய்வேன்'' என்று கிணறு கேட்டது.

மலர்விழி கிணற்றைச் சுத்தம் செய்தாள். நீர் தெளிந்தது. தாகம் தீரத் தண்ணீர் அருந்தினாள். நடந் தாள்.

சிறிது தூரத்தில் ஒரு குடிசை. அங்கே ஒரு பழைய அடுப்பு துருப் பிடித்து உடைந்து கிடந்தது. ''நான் பரிதாபமான நிலையில் இருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் உதவி செய் யேன். நான் உன்னை மறக்கவே மாட்டேன்,'' என்று அடுப்பு அவளி டம் கெஞ்சிக் கேட்டது.

மலர்விழி அந்த அடுப்பை நன்றா கக் கழுவித் துடைத்தாள். அதைக் குடிசையின் உள்ளே வைத்துக் களி மண்ணால் பூசி, அதற்குப் புதிய உருவம் கொடுத்தாள். பிறகு தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

இருட்டத் தொடங்கியது. காட்டு வழி. ஊர் எதுவும் இன்னும் வர வில்லை. ஆகவே, தான் சரியான பாதையில் போகவில்லை என்பதை உணர்ந்தாள். நீண்ட பயணத்தால் அவள் களைத்திருந்தாள். எதிரே ஒரு பெரிய வீட்டைப் பார்த்தாள். வாச லில் ஒரு முதியவள் இருந்தாள்.

''என் பெயர் மலர்விழி. என் அப்பாவே என்னை வெளியேற்றி



விட்டார். இப்போது நான் ஓர் அனாதை. இருப்பதற்கு இடமும், செய்வதற்கு வேலையும் தேடிப் போகிறேன். இன்றிரவு இங்கே தங்கு வதற்கு அனுமதிப்பீர்களா?'' என்று மலர்விழி பணிவோடு கேட்டாள்.

''குழந்தாய்! உள்ளே வா! என்னை ஞாயிறு அன்னை என்று அழைப்பார்கள். இன்றைக்கு என் வீட்டு வேலைகளை நீ ஒழுங்காகச் செய்தால், நாளைக்கு உன்னைப் பரிசுகளோடு அனுப்பி வைப்பேன்" என்றாள் முதியவள். மலர்விழி சம்மதித்தாள்.

''இங்குள்ள குழந்தைகள் முற்றத் தில் தூங்குகிறார்கள். அவர்கள் எழுந்ததும், நீ அவர்களைக் குளிப் பாட்டி, ஆகாரம் கொடுக்க வேண் டும். பிறகு, எனக்கு உணவு சமைக்க வேண்டும். அது மிகவும் ருசியாக வும், பக்குவமாகவும் இருக்க வேண் டும். புரிந்ததா?'' என்று உத்தர விட்டாள் முதியவள். பிறகு ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு வெளியே போய் விட் டாள்.

மலர்விழி முழு மூச்சாக வேலை யில் இறங்கினாள். வெந்நீர் போட் டாள். ''குழந்தைகளே! குளிக்க வாருங்கள்!'' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தாள்.

முற்றத்தில் இருந்த கூட்டத்தைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டுப் போனாள். சிறியதும், பெரியதுமாக டிராகன்களும், பல பயங்கரப் பிராணிகளும் அங்கே குழுமியிருந் தன. அவைதான் ஞாயிறு அன்னை யின் செல்லக் குழந்தைகள்!

ஒரு கண நேரத்தில் மலர்விழி தைரியத்தை வரவழைத்துக் கொண் டாள். இறைவனைப் பிரார்த்தனை செய்தாள். அப்புறம் அவள் தயங் கவே இல்லை. அந்த நெளியும் பிராணிகளை ஒவ்வொன்றாகக் கையில் எடுத்துக் குளிப்பாட்டி னாள். பிறகு சமையலையும் செய்து முடித்தாள். ஞாயிறு அன்னை திரும் பிய போது வீடு பளிச்சென்று அழகாகவும், சுத்தமாகவும் இருந் தது. அவளுடைய 'குழந்தைகள்' குளித்துச் சாப்பிட்டுத் திருப்தியாக இருந்தனர்.

விருந்து பிரமாதமாக இருந்தது. முதியவள் சந்தோஷமடைந்தாள். ''மலர்விழி! உன் வேலைகளை நீ பொறுப்போடும், பொறுமையோ டும் செய்திருக்கிறாய். உனக்கு ஒரு பரிசு தர ஆசைப்படுகிறேன். மாடிக் குப் போ. அங்கே உள்ள பேழை களில் உனக்குப் பிடித்த ஒரு பேழையை எடுத்துக் கொள்,'' என் றாள்.


மலர்விழி மாடிக்குப் போனாள். பலவகையான பேழைகள் அங்கே வரிசையாக இருந்தன. மலர்விழி எப்போதுமேகிடைத்ததைக்கொண்டு திருப்தி அடைவாள். பேராசைப் பட மாட்டாள். ஆகவே, அவள் புழுதி படிந்த, பழமையான ஒரு பேழையை எடுத்துக் கொண்டு, கீழே இறங்கி வந்தாள்.

தனக்குப் பரிசாகக் கிடைத்த பேழையை மலர்விழி அப்பாவிடம் காட்ட நினைத்தாள். ஆகவே, அவள் வந்த வழியே தன் வீட்டை நோக்கித் நடக்கத் தொடங்கினாள். வழியில் தான் புதுப்பித்த அந்த இரும்பு அடுப் பைக் கண்டாள். அதன் மீது ஒரு பாத்திரம் நிறையச் சுவையான தின் பண்டங்கள் குவிந்திருந்தன. அவள் பசியாறச் சாப்பிட்டாள். கையிலும் கொஞ்சம் எடுத்துக் கொண்டாள். மேலே நடந்தாள்.

தாகம் எடுத்தது. அப்போது, தான் சுத்தம் செய்த அந்த கிணற்றைக் கண் டாள். அங்கே தெள்ளிய நீர் நிரம்பிய வெள்ளிக் கிண்ணங்கள் அவள் முன் னால் தோன்றின. நீரைப் பருகினாள். வெள்ளிக் கிண்ணங்களைப் பையில் வைத்துக் கொண்டாள். கிணற்றுக்கு நன்றி சொல்லிவிட்டுப்புறப்பட்டாள்.

வழியில் பழைய ஆப்பிள் மரம் பழுத்துக் குலுங்கியது. மரம் தன் கிளைகளைத் தாழ்த்தி அவளை வர வேற்றது. அவள் பழங்களை எளிதில் பறித்துக் கொண்டாள். சந்தோஷ மாக நடந்தாள்.

ஓரிடத்தில் பளபளக்கும் தங்கக் காசு மாலையைக் கவ்விக்கொண்டு, அவளிடம் உதவிபெற்ற சின்ன நாய்க்



ஆனால், சித்தியும், மேரியும் பொறாமையால் வெந்தனர்.

''நான் போய் இவற்றை விட உயர்வான, சிறப்பான பொருள்களைக் கொண்டு வருகிறேன்,'' என்று சொல்லிய மேரி அம்மாவைத் தேற்றினாள். வீட்டைவிட்டுப் புறப்பட்டாள்.

மேரியும் புழுதிபடிந்த அதே நீண்ட சாலை வழியாக நடந்தாள்.

எலும்பும் தோலுமான அந்த நாய்க்குட்டியை மேரி முதலில் சந்தித்தாள். மிகவும் உருக்கமாக அது மேரியின் உதவியை வேண்டியது.

''அற்ப நாயே! என்னைப் பார்த்தால்ஒருவேலைக்காரியைப்போலவா தெரிகிறது? என் கைகளைப் பார்! எவ்வளவு அழகாக, பளபளப்பாக அவற்றைக் காப்பாற்றி வருகிறேன். உன்னைப் பார்த்தாலே வியாதி தொற்றிக் கொள்ளும் போலிருக்கிறதே! போ! போ! விலகிப் போ!'' என்று மேரி சீறினாள்.

கம்பளிப்பூச்சி மரம், சேற்றுக் கிணறு, உடைந்த அடுப்பு — ஆகியவற்றையும் மேரி அடுத்தடுத்துச் சந்தித்தாள். அவைகளிடமும் கேவலமாகப் பேசி, உதவி செய்ய மறுத்தாள். ஆகாயத்தைப் பொத்துக் கொண்டு அதிர்ஷ்டம் தனக்குக் கிடைக்கப் போகிறது என்று அவள் நம்பினாள். கடைசியில் முதியவளான ஞாயிறு அன்னையின் இல்லத்தை அடைந்தாள்.

ஞாயிறு அன்னை அவளைக்கூர்ந்து நோக்கினாள். ஒன்றும் கேட்கவில்லை. ''குழந்தைகளைக் குளிப்பாட்டு; சமையல் செய்; வீட்டைப் பார்த்துக் கொள்!'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அன்னை வெளியே போனாள்.

மேரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேலைகளை எல்லாம் இஷ்டமில்லாது, அரைகுறையாகச் செய்யத் தொடங்கினாள். குளிப்பாட்டுவதற்காக நன்றாகக் கொதிக்கும் நீரை அங்கிருந்த செல்லப் பிராணிகளின் மீது ஊற்றினாள். சூடும், வலியும் பொறுக்கமாட்டாமல்,

குட்டி பாய்ந்துவந்தது. காசுமாலையை அவளுக்குப் பரிசாக அளித்து! வாலை ஆட்டியது.

மலர்விழி அப்பாவின் வீட்டை அடைந்தாள். அப்பா மகளை ஆசையோடு கட்டிக்கொண்டார். கண்ணீர் வடித்தார். தங்கக் காசு மாலையையும், வெள்ளிக் கிண்ணங்களையும் மலர்விழி தன் அப்பாவிடம் கொடுத்தாள்.

ஞாயிறு அன்னை பரிசாகக் கொடுத்த பேழையை அப்பாவும், மகளும் சேர்ந்து திறந்தனர். அப்போது பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அவர்களுடைய வீட்டில் புதிய ஒளி வீசியது. வறுமைக் கோலம் மறைந்தது. செல்வச் செழுமை சேர்ந்தது. திடீரென பல்வேறு வசதிகளும் தோன்றி வீட்டை நிறைத்தன. அப்பாவும், மகளும் பூரித்துப் போயினர்.

அவை சிறிக் கொண்டு பாய்ந்தன. கோபத்தால் வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் அவை தாறுமாறாக உருட்டி விட்டன.

மேரி சமையல் செய்யத் தொடங்கினாள். பழக்கம் இல்லாததால் உணவுப்பண்டங்கள் தீய்ந்துபோயின. முதியவள் சாப்பிடுவதற்காக அவற்றை மேசை மீது அழகாக எடுத்து வைக்கக்கூட அவளுக்குத் தெரியவில்லை.

ஞாயிறு அன்னை வீடு திரும்பினாள். வீட்டின் அவல நிலையைக் கண்டு அவள் திடுக்கிட்டாள். "மேரி ஒரு சோம்பேறி. உடம்பு வணங்கி வேலை செய்யமாட்டாள்," என்பதை அன்னை ஒரு நொடிப் பொழுதில் உணர்ந்தாள். ஆனால், அவள் மேரியை வையவில்லை. மேரியைக் கூப்பிட்டு, "மேரி! உன் உழைப்புக்கு ஊதியம் தரவேண்டுமல்லவா? மாடிக்குப் போ! ஏதாவது ஒரு பேழையை எடுத்துக் கொள்!" என்றாள் அன்னை.

மேரி அழகிய வேலைப்பாடுகளுடன், கவர்ச்சியாகத் தோற்றமளித்த ஒரு பேழையை எடுத்துக் கொண்டாள். ஞாயிறு அன்னைக்கு நன்றி கூடச் சொல்லவில்லை. வீட்டை நோக்கி விரைந்தாள்.

பழைய அடுப்பு இப்பொழுது எரிந்து கொண்டிருந்தது. சுவையான தின்பண்டங்களின் நறுமணம்காற்றில் மிதந்து வந்தது. மேரிக்குப் பசித்தது. பண்டங்களில் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள். அது மிகவும் சூடாக இருந்ததால், வாய் வெந்து விட்டது. அடுப்பிலிருந்த நெருப்பு சிறிக் கொண்டு அவளைத் துரத்தியது.

மேரி பயந்து ஓடத் தொடங்கினாள். நீர் அருந்தக் கிணற்றடிக்குப் போனாள். அங்கே இருந்த வெள்ளிக் கிண்ணங்களைக் கையில் எடுத்தாள். கைபட்டதுமே, வெள்ளிக் கிண்ணங்கள் மாயமாக மறைந்தன!

சிறிது தூரத்தில் பழுத்துக் குலுங்கும் ஆப்பிள் மரம், பழங்களைப் பறிக்க ஏறப் போனாள். ஆனால், அவளுடைய கைகளுக்கு எட்டாமல் மரத்தின் கிளைகள் உயர, உயர வளர்ந்து கொண்டே போயின!

மேரி ஏமாற்றத்துடன் நடந்தாள். கழுத்தில் வைரமாலை பளிச்சிட, அந்தச் சின்ன நாய்க்குட்டி எதிரே வந்தது. அவளை நெருங்கியது. மாலையை எடுத்துக் கொள்வதற்காக மேரி கையை நீட்டினாள். வெடுக்கென்று அவளுடைய கையைக் கடித்து விட்டு நாய்க்குட்டி ஓடியது.


பசி, தாகம், பயம், களைப்பு, ஏமாற்றம், துக்கம் — இவற்றால் உந்தப்பட்ட மேரி கடைசியில் தன் வீட்டை அடைந்தாள். பேழையை அம்மாவிடம் கொடுத்தாள்.

எல்லோரும் ஆவலுடன் அந்த அழகிய பேழையைத் திறந்தனர். டிராகன்களும், பயங்கரமான பல பிராணிகளும் உள்ளேயிருந்து வெளிப்பட்டு, நாலாபுறமும் சிதறி ஓடின. அனைவரும் திடுக்கிட்டனர்.

மலர்விழி மேரியைத் தேற்றி, அன்போடு ஆறுதல் சொன்னாள். அவமானம் தாங்காமல் மேரி குறுகிப் போனாள். மேரி தன் தவறுகளுக்காக மனம் வருந்தினாள். புதிய பெண்ணாக மாறினாள். மேலும், மலர்விழியின் பெருமைகளைப்புரிந்து கொண்டு, அவளை மதிக்கத் தொடங்கினாள். தானும் அவளைப் போல் மாற முயன்றாள்.



"ரவுடித்தனமான பூ எது?"
"காலிஃப்ளவர்தான்!"
— கெச. பக்தவத்சலம், விருத்தாசலம்—1







விடுதலை வீரன் ராபர்ட் புரூஸ்

கதை: ஆனந்தி
படம்: வினு









புத்திசாலியான ராபர்ட் புரூஸ்...
நமக்குள் சண்டைபோட்டுக் கொண்டிருந்தால் ஸ்காட்லாந்து சுதந்திர நாடாகவே முடியாது... ஜான் காமினுடன் நட்புறவு கொள்ளவே விரும்புகிறேன்....
ராபர்ட், காமினுக்குத் தூது அனுப்பினான்...
நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தால் ஸ்காட்லாந்து பூரண சுதந்திரம் பெறும். ஏன், இங்கிலாந்தைக்கூட வென்று விடலாம்!
யோசித்துச் சொல்கிறேன்.
ஆனால் ராபர்ட்டின் நல்லெண்ணத்தைக் காமின் பிரதிபலிக்கவில்லை...
ராபர்ட் கெட்டிக்காரன்... அவனிருக்கும் வரை எனக்கு நிம்மதி இல்லை...
...நாளை என்னைக் கவிழ்த்து விட்டு அவனே ஸ்காட்லாந்தின் அரசனாகப் பார்ப்பான்...
எனவே...
ஜான் காமின், இங்கிலாந்து அரசன் எட்வர்டுக்குக் கடிதம் எழுதினான்...
ராபர்ட் உங்களுக்கு எதிராகச் சதி செய்கிறான். அவனைச் சிறையில் அடைக்கவும்...


கடிதம் கிடைத்ததும் எட்வர்ட் கோபம் அடைந்து...
அந்தக் கலகக்காரன் ராபர்ட் புரூஸைப் பிடித்து இழுத்து வாருங்கள்.
ராபர்ட் புரூஸுக்குச் செய்தி எட்டியது...
புரூஸ்! நீ தப்பி ஓடிவிடு! காமின் உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டான்!
இங்கிலாந்து வீரர்கள் உன்னைப் பிடிக்க வருகிறார்கள்...
ராபர்ட் புரூஸ், குதிரை ஏறித் தப்ப முயன்றான்...
நிச்சயம் என்னைப் பிடித்து விடுவார்கள்; ஏதாவது தந்திரம் செய்ய வேண்டும்...
ஒரு கொல்லுப் பட்டறையைக் கடக்கும் போது...
நண்பனே! என் குதிரைக் குளம்பில் உள்ள லாடங்களைத் தலை கீழாக மாற்றி வைத்து அடித்துவிடு...
குதிரைக் குளம்படிகளைப் பார்த்த வீரர்கள்...
இதென்ன குழப்பம்? எதிர்த் திசையில் அல்லவா போகிறான். திரும்புங்கள்! திரும்புங்கள்!


அப்போதைக்குத் தப்பிய ராபர்ட், காமினைத் தனியிடத்தில் ரகசியமாகச் சந்திக்க விரும்புவதாகத் தூது அனுப்பினான்...
நட்பைப் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறார் ராபர்ட்.
ஆகட்டும். வருகிறேன்.
தனது சதிச் செயல் ராபர்ட்டுக்கு அம்பலமாகி விட்டது என்பது காமினுக்குத் தெரியாது. எனவே...
அதோ! அந்தப் பாழடைந்த மண்டபத்தில்தான் சந்திக்கச் சொல்லியிருக்கிறான்... இங்கிலாந்து மன்னரின் ஆட்கள் வரும் வரை நண்பனைப் போல் நடிக்கவேண்டியதுதான்.
காமினுக்காகக் காத்திருந்த ராபர்ட் புருஸ்...
துரோகி! என்னைக் காட்டிக் கொடுத்தாய் அல்லவா!
இல்லையே!
பொய் சொல்லாதே! எட்வர்டின் ஆட்கள் என்னைத் தேடுகிறார்கள். எடு வாளை!
இருவரும் சண்டையிட்டார்கள்...


அந்த யுத்தத்தில் காமின் இறந்து விழுந்தான்...
என்னை மன்னித்துவிடு!
ஸ்காட்லாந்து மக்கள் புரூஸை ஆதரித்தார்கள்....
வாழ்க!
வாழ்க!
பல பிரபுக்கள் புரூஸ் தலைமையை ஏற்றுத் தங்கள் வீரர்களுடன் அணி திரண்டார்கள்...
எங்கள் தலைவன்...
ராபர்ட் புரூஸ்!
ஸ்கோன் என்ற நகரில் புரூஸுக்கு முடி சூட்டப்பட்டது.
ஸ்காட்லாந்து மன்னன்...
வாழ்க!
ராபர்ட் புரூஸ் ஸ்காட்லாந்தின் சுதந்திரத்தைக் காக்கப் படை திரட்டினான்...
தாய் நாட்டைக் காக்கத் திரண்டு வருக!


இங்கிலாந்து மன்னன் எட்வர்டுக்கு ரொம்பக் கோபம்...
நமது நண்பன் காமினைக் கொன்றுவிட்டு, ராபர்ட் புரூஸ் ஸ்காட்லாந்தின் அரசனாகியிருக்கிறான்!
சிற்றரசனாக இருப்பதற்குப் பதில், ஸ்காட்லாந்தின் சுதந்திரத்தை அறிவித்திருக்கிறான். ஸ்காட்லாந்தை ஜெயிக்கும் வரை உறங்கமாட்டேன்!
அந் நாட்களில் அன்னப்பட்சிகள் மீது ஆணையாகச் சபதம் செய்வது வழக்கம்...
இங்கிலாந்தையும் ஸ்காட்லாந்தையும் மீண்டும் இணைப்பேன்!
இங்கிலாந்தின் படைகள் முன்னேற, புரூஸ், தனது சிறிய படையுடன் வடக்கே பின் வாங்கினான்...
எதிரிகளுக்குப் பயன்படக் கூடிய எதையும் எரித்து விடுங்கள்...
மக்கள் வயல்களுக்குக்கூடத் தீ வைத்தனர்...
ஸ்காட்லாந்தின் விடுதலைக்காக எந்தக் கஷ்ட நஷ்டத்தையும் பொறுத்துக் கொள்வோம்!



ஓரிடத்தில் இரு படைகளும் நேருக்குநேர் சந்தித்தன... அப்போது ராபர்ட் புருஸ்...
பெம்புரோக்! படைகள் ஏன் கைகலக்க வேண்டும்? வீண் உயிர்ச்சேதம் வேண்டாம்! நீயும் நானும் தனித்துச் சண்டையிடுவோம். அதன் முடிவை வைத்து யுத்தத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்போம்!
அந்த நாளில் இத்தகைய சவால்கள் சகஜம். ஆனால் இங்கிலாந்து தளபதி பெம்புரோக், சவாலை ஏற்கத் தயாராக இல்லை... தந்திரமாக...
களைத்திருக்கிறான்; நாளைக்குப் போரிடுவோம்!
ராபர்ட் புருஸைத் தனித்துச் சந்திக்கத் துணிவில்லாத பெம்புரோக், நள்ளிரவுக்கு மேல்...
ஸ்காட்லாந்து வீரர்கள் அசந்து தூங்குகிறார்கள்; இப்போது அவர்கள் மீது பாய்வோம்!
இந்த வஞ்சகத் தாக்குதலில் புரூஸின் பல வீரர்கள் உயிரிழந்தார்கள்.
ஆ!
ஐயோ!
என்ன? என்ன?
ராபர்ட் சுமார் முந்நூறு வீரர்களுடன் தப்பிச் சென்றான்...
இந்த மலைச்சாரல்களும் பள்ளத் தாக்குகளும் நமக்குப் பாதுகாப்பு அளிக்கும்...


அந்த மலைப்
பிரதேசத்தில்
ராபர்ட் புரூஸின்
மனைவியும்
சகோதரிகளும்
ரகசியமாக
வந்து சேர்ந்து
கொண்டனர்.
ராபர்ட்! உனக்கு
உதவி செய்தவர்கள்
பலருக்கும் மரண
தண்டனை விதிக்கிறார்
இங்கிலாந்து மன்னர்...
இந்தச் செய்தி கேட்டு புரூஸ்
அஞ்சவில்லை. மேலும் மன
உறுதி பெற்றான்...
வீரர்களே! சுதந்திரமே நமது
உயிர் மூச்சு... சரியான
சமயத்துக்குக் காத்திருப்போம்...
புரூஸ், தான் இழந்த நாட்டைத்
திரும்பக் கைப்பற்ற முயன்று
பலமுறை தோற்றான்....
ஓடுங்கள்! ஒளியுங்கள்! தக்க
தருணத்துக்கு மீண்டும் காத்திருப்போம்!
புரூஸ், ஒரு சமயம் சோர்வுடன்
ஒரு குகையில் ஒளிந்திருந்தான்.
..
இந்தச் சிலந்தி, கூடு பின்னும்
முயற்சியில் இதுவரை ஆறு
தடவை நூலில் வழுக்கி
இறங்கி விட்டது!
நானும் ஆறு முறை தோற்று
விட்டேன்! இந்தச் சிலந்தி
தனது ஏழாவது முயற்சியில்
வெற்றி பெறுமா?


இம்முறை சிலந்தி வெற்றி அடைந்து வலை பின்னி முடித்தது.
ஓர் அற்பச் சிலந்தி, விடா முயற்சியால் வெற்றி பெற்றது! ஏழாவது தடவை நானும் வெற்றி அடைவேன்!
மாவீரனும் பிரபுவுமான டக்ளஸ், ராபர்ட்டின் உயிர் நண்பன்.
இப்போது டக்ளஸ் எங்கே இருக்கிறான்...?
தம் வீரர்களுடன் ஆரான் தீவில் ஒளிந்திருக்கிறார்.
புரூஸ், ஆரான் தீவை அடைந்தான்...
நண்பா!
உன்னைப் பார்த்து எத்தனை நாளாச்சு!
புரூஸ்! எத்தனை காலம் நாம் இப்படி ஒளிந்திருப்பது?
உன் துணை இருந்தால் வெற்றி நிச்சயம். நம்பிக்கைதான் அடிப்படை!
டக்ளஸ் தன் வீரர்கள் சிலரை ஸ்காட்லாந்துக்கு உளவறிய அனுப்பினான்...
மக்களிடம் ரகசியமாகப் பேசி, சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்புங்கள்...




சரியான தருணத்தை எங்களுக்குத் தெரியப் படுத்துங்கள். உடனே வருகிறோம்... நமது நம்பிக்கைக்குரிய நிலப் பிரபுக்களுக்குச் செய்தி சொல்லி, உதவி கேளுங்கள். . . .
வீரர்கள் விடை பெற்றனர்...
முன்னேற்பாடுகளைச் செய்து முடித்ததும் அதோ அந்த மலை மீது தீ மூட்டுவேன். அதைப் பார்த்ததும் நீங்கள் புறப்பட்டு வரலாம்!
ஆகட்டும்!
டக்ளஸும் புரூஸும் பொறுமையுடன் காத்திருந்தனர். ஒரு நாள்...
டக்ளஸ்! அதோ!
மலை மீது நெருப்பு!
டக்ளஸும் புரூஸும் தத்தமது வீரர்களுடன் படகுகளிலேறிச் சென்றனர்...
ஆனால் என்ன ஏமாற்றம்!
அடடா! இந்த நெருப்பு நம் உளவாளிகள் கொளுத்தியது அல்ல; காட்டுத் தீ!



புரூஸ் இறுதல் சொன்னார்...
டக்ளஸ்! வந்தது வந்து விட்டோம். இங்குள்ள ஆங்கிலேயர் முகாமைத் தாக்குவோம்!
சரி!
ஆங்கிலேயர் பயந்து ஓடினார்கள்!
முதல் வெற்றி!
ஆபத்தான வெற்றி! நாம் வந்திருப்பது தெரிந்து பெரும் படையுடன் ஆங்கிலேயர் தாக்குவார்கள். பின்வாங்குவதே உசிதம்!
ஆனால் பின்வாங்க முடியாமல் ஆங்கிலேயர் சூழ்ந்து கொண்டனர்....
பதுங்குங்கள்! நாலா புறமும் எதிரிகள்! சிதறுங்கள்!
ஆங்கிலேய வீரர்கள்...
இந்த நாய் புரூஸினால் வளர்க்கப்பட்டது. நிச்சயம் அவனை மோப்பம் பிடித்துக் கண்டு பிடித்துவிடும்! தப்ப முடியாது.
பாவிகளா! என் நாயை வைத்தே என்னைத் துரத்துகிறீர்களா!
இந்த ஓடையைக் கடந்து தப்புகிறேன். நாயின் மோப்பசக்தி நீரைக் கடந்து தொடர முடியாது...


தப்பிவிட்ட ராபர்ட் ப்ரூஸ், கிளைண்ட் ரோல் என்னும் இடத்தில் மீண்டும் தன் படைகளை ஒன்று திரட்டினான்.
அச்சமும் சோர்வும்தான் நம் முதல் எதிரிகள். அவற்றை வென்றால் ஆங்கிலேயரையும் வென்று விடலாம்!
பெம்புரோக் கோபமடைந்து...
மறுபடி ராபர்ட் ப்ரூஸ் தப்பி விட்டான். நரிகளைப்போல் ஸ்காட்டிஷ் சதிகாரர்கள் மலைக் குகைகளில் பதுங்குகிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து அழிப்போம்!
மலைப் பாதையில் இங்கிலாந்து வீரர்கள் வரும்போது ராபர்ட்டின் வீரர்கள், பாறைகள் மறைவிலிருந்தும் மலை உச்சியிலிருந்தும் தாக்கினார்கள்!
ஓடு! ஓடு!
இவ்வாறு சிறு சிறு வெற்றிகளை ராபர்ட் ப்ரூஸ் அடைந்து வந்தான்... ஒரு நாள்...
ப்ரூஸ்! ஒரு செய்தி! இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்ட் இறந்து விட்டார்!
ப்ரூஸ் அஞ்சலி செலுத்தினான்...
நம் எதிரியானாலும் வீரன். கொள்கையில் விட்டுக்கொடாமல் உறுதியாக இருந்தான். நமக்கு அடிமேல் அடி கொடுத்த சக்தி உடைந்து போனது!



செயிண்ட் ஆண்ட்ரூஸ் என்னுமிடத்தில் ராபர்ட் புரூஸ் நாடாளுமன்றம் கூட்டி அரசாளத் தொடங்கினான்...
வாழ்க, ராபர்ட் புரூஸ்! வாழ்க, ஸ்காட்லாந்து மன்னர்!
டக்ளஸும் ராபர்ட்டும் அடுத்த சாகசத்தைத் திட்டமிட்டார்கள்...
இதுவரை சிறு சிறு வெற்றிகளைப் பெற்றுள்ளோம்... எடின்ப்ரோ கோட்டையைப் பிடித்தால் நமக்கு மதிப்பும் கௌரவமும் பெருகும்!
முதலில் உன்னுடைய டக்ளஸ் கோட்டையைக் கைப்பற்று... எடின்பரோவை அடுத்த கட்டமாக வைத்துக் கொள்!
டக்ளஸின் வீரர்கள் மாறுவேடத்தில் ஆங்கிலேய வீரர்களுடன் கலந்து கோட்டைக்குள் புகுந்தார்கள்.
என்ன சமையல்? சீக்கிரம் சாப்பாடு கொண்டு வா!
யார் நீ?
இந்தக் கோட்டையின் சொந்தக்காரன்!



எதிர்பாராத தாக்குதலில் ஆங்கிலேயர் தோற்றுப் போனார்கள்...
டக்ளஸ் வந்து விட்டான்!
ஐயோ டக்ளஸ்!
என்னை விட்டுவிடு! சரணாகதி!
ராபர்ட் புரூஸ் மகிழ்ச்சி அடைந்தான்...
பலே! நண்பா! நம் அடுத்த இலக்கு, எடின்பரோ கோட்டை!
ஒரு நாள் இரவு டக்ளஸ் தன் வீரர்களுடன்...
சத்தப்படுத்தாமல் இருட்டோடு இருட்டாக, கோட்டைச் சுவர்மீது ஏற வேண்டும் புரிந்ததா...
திடீர் தாக்குதலில் எதிரிகள் ஏமாந்தார்கள்...
எடின்பரோ கோட்டையும் நம் வசப்பட்டது... மன்னர் ராபர்ட் புரூஸுக்குச் செய்தி கொண்டு போ!


மேலும் சில வெற்றிகளுக்குப் பிறகு ஸ்டார்லிங் கோட்டையை முற்றுகையிட்டான் புரூஸ்.
கோட்டைக் காவலர் சமாதானத் தூது அனுப்பியிருக்கிறார்...
இன்னும் பத்து நாட்களில் இங்கிலாந்து மன்னர் எங்களுக்கு உணவு அனுப்பவில்லையானால் நாங்களே சரணடைகிறோம். அதுவரை கோட்டையைத் தாக்க வேண்டாம்...
நான் சுத்தவீரன். உங்கள் கோரிக்கையை ஏற்கிறேன்!
இதற்கிடையில் இங்கிலாந்து அரசன் இரண்டாம் எட்வர்ட் ஒரு பெரும் படையுடன்...
ஸ்காட்லாந்தை வெற்றி கொள்ளாமல் விடமாட்டேன்!
ராபர்ட் புரூஸ் முதலில் தோல்வி அடைந்து...
பதுங்கிப் பாய்வோம்; பின் வாங்குங்கள்!
பின்வாங்கினாலும் வீரர்கள் உறுதியாக இருந்தனர்...
சுதந்திரமே உயிர்மூச்சு!
வெற்றி அல்லது வீரமரணம்!


பாதிரியார் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் போது ஸ்காட்லாந்து வீரர்கள் மண்டியிட்டனர்....
அதைத் தொலைவிலிருந்து பார்த்த எட்வர்ட், ஏமாந்து...
ஸ்காட்லாந்து வீரர்கள் பயந்து, கருணை வேண்டி, மண்டியிடுகிறார்கள். இதுதான் சமயம்; தாக்குங்கள்!
ஆங்கிலேயரின் குதிரைப் படை பாய்ந்து வந்தது... ராபர்ட் புரூஸின் வீரர்கள் அசையவில்லை... ஈட்டிகள் பாய...
ஆ!
ஐயோ!
ஆங்கிலேயப் படை வீரர்கள் சிதறி ஓடினர்... அனைவருக்கும் முன்னால் பயந்து ஓடியவன் அரசன் எட்வர்ட்!
மகத்தான வெற்றி, டக்ளஸ்!
நம் வீரர்களின் மன உறுதியும் சாகசமும் தான் காரணம்.
இரண்டாம் எட்வர்ட் காலத்தில் சண்டை, சச்சரவுகள் தொடர்ந்தன... பிறகு வாலிபனான அவன் மகன் இங்கிலாந்து மன்னனானான்...
நமது அருமை நண்பர் ராபர்ட் புரூஸ் ஸ்காட்லாந்து நாட்டின் பேரரசராக நம்மால் அங்கீகரிக்கப்படுகிறார்.
ராபர்ட் புரூஸின் விடா முயற்சியால் அவன் சுதந்திரக் கனவு நிறைவேறியது.

மாற்றத்தின் மர்மம்





பள்ளிக் கூடம் செல்ல மறுப்பான்
பாடம் படிக்க விரும்ப மாட்டான்
நல்லோர் சொல்லைக் கேட்பதும் இல்லை
நாளும் மாதவன் தருவது தொல்லை

இனிமைச் சொல்லே அவனிடம் இல்லை
ஏசிப் பேசல் மாதவன் இயல்பு
பணிவை அறியா அவனை மாற்ற
பற்பல வழியில் பெற்றோர் முயன்றார்

பெற்றோர் முயற்சி பெற்றது தோல்வி
பெருகிய துன்பம் உற்றனர்; ஒருநாள்
கற்றோர் யாவரும் போற்றும் வண்ணம்
கல்வியில், பண்பில் சிறந்தான் மாதவன்!

"மாதவன் இப்படி மாறுதல் எப்படி?
யாதோ மாயம்?" அனைவரும் கேட்டனர்.
மாதவன் மாமா ஒருநாள் வந்தார்
'மலரும் உள்ளம்' வாங்கித் தந்தார்

"எதையோ செய்திடு! எதுவோ பேசிடு!
அதைநான் தடுத்திட மாட்டேன். ஆனால்
நிதமும் மலரும் உள்ளம் படித்திடு.
அதுவே போதும்" என்றார், மாமா.

அறிவுரை இல்லை! அதட்டல் இல்லை!
'அடிப்பேன் உதைப்பேன்' மிரட்டல் இல்லை!
ஒருமுறை நாளும் மலரும் உள்ளம்
தருகிற பாட்டைப் படித்தால் போதும்.

மாதவன் இதனை மகிழ்வுடன் செய்தான்
மாயம் அதனால் நிகழ்ந்தது, உண்மை!
தீதே செய்திடும் மாதவன் மெதுவாய்த்
திருந்தி விட்டனன்! உயர்வு பெற்றனன்!

வள்ளி யப்பா வழங்கிய பாட்டை
அள்ளி உண்டால் அகலும் தீமைகள்!
கள்ளம் அகலும்! கல்வி பெருகும்!
உள்ளம் தெளியும்! ஒழுக்கம் விளையும்!

— டாக்டர். பூவண்ணன்.

நீதான் உடைச்சியா?

காந்தியடிகளின் வாழ்க்கைச் செய்தியாக 'சத்திய சோதனை'யை மாணவர்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம் விளக்கிய ஆசிரியர், 'நீங்கள் ஒவ்வொருவரும் காந்திஜியின் பண்புகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினால் கூடப் போதும். நீங்களும் முன்னேறுவீர்கள். நாடும் முன்னேறும்' என்ற வேண்டுகோளுடன் முடித்தார்.

மனம் நெகிழ்ந்து போயிருந்த மாதவன் ஆவேசத்துடன், ''நான் இனி பொய்யே பேச மாட்டேன் சார்'' என்று உறுதியாகக் கூறினான்.

வீட்டிற்குத் திரும்பி டிபன் சாப்பிட்டுவிட்டு விளையாடச் சென்றதுமே மாதவனுக்கு முதல் சோதனை ஏற்பட்டது. தன்னைப் பெரிய கபில்தேவ் என்று நினைத்துக் கொண்டு அவன் வேகமாக வீசிய நிஜமான கிரிக்கெட் பந்து விக்கெட்டையும் கடந்து எதிர் வரிசையிலிருந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடியை உடைத்துக் கொண்டு உள்ளே போய்விட்டது! அவ்வளவுதான்! எல்லா கிரிக்கெட் வீரர்களும் புறமுதுகு காட்டி ஓடினர். அவனும் ஓடிவந்து விட்டான்.

இரவு அவன் அப்பா வீட்டிற்குத் திரும்பியதுமே கேட்டார், ''மாதவா, சாயந்திரம் நீ கிழக்கு ரெண்டாவது தெருவில் கிரிக்கெட் ஆடினியா?''

மாதவனுக்கு உடம்பு ''வெட வெட'வென்று நடுங்க ஆரம்பித்தது. அப்பாவுக்கு விஷயம் எவ்வளவு தூரம் தெரியும் என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை. அவர் பெல்ட்டைக் கழற்றிக் கொண்டிருந்தார். அதேசமயம் அவனுக்குத் தன்னுடைய சபதமும் ஞாபகத்திற்கு வந்தது.

சுவரில், கண்ணாடிப் படத்திலிருந்த மகாத்மா அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார். ''மாதவா, இவ்வளவுதானா உன் மன உறுதி? சில மணி நேரம் கூட உன்னால் சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியவில்லையே! நான் ஆயுள் முழுதும் கடைபிடித்தேனே? ஒரு முறை அப்பாவிடம் பெல்ட் அடி வாங்கப் பயப்படுகிறாயே? அதுவும் கூட அரைமணி நேரம்தானே வலிக்கும். நான் எத்தனை வருஷமாப் போலீசிடம் எவ்வளவு துன்பப்பட்டிருப்பேன்?'' என்று அவர் கேட்பது போல் மாதவனுக்குத் தோன்றியது.

''என்னடா, உனக்குள்ளேயே முணுமுணுத்துக்கிட்டிருக்கே? அந்தத் தெருவில் எந்த வீட்டுக் கண்ணாடியையாவது நீ உடைச்சியா?''—அப்பாவின் கர்ஜனை மாதவனின் சிந்தனையைக் கலைத்தது.

மாதவன் தலைகுனிந்து கொண்டு, ''ஆமாம்பா, நான் வேகமாகப் பந்து போட்டபோது தவறிப்போய்க் கண்ணாடியை உடைச்சிடுத்துப்பா'' என்றான் மெல்லிய குரலில்.

சொல்லி முடித்ததும் இடைவெளியின்றி அவன் முதுகில் மின்னல் பாய்ந்தது போல் உணர்வு. பெல்ட்டால் நாலு விளாசல். மாதவனால் வழக்கமாக ஒரு அடிகூடத் தாங்க முடியாது. இம்முறை அடிவிழுகை

யில் அவன் இமைகொட்டாமல் காந்திஜியின் படத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். தான் வலியை அதிகமாக உணராதது அவனுக்கே ஆச்சரியமளித்தது. இப்போது காந்திஜி பரவசப் புன்னகையுடன், ''சபாஷ் மாதவா, நான் பாதி வலியை வாங்கிக் கொண்டுவிட்டேன். முதல் முறையிலேயே, முதல் சோதனையிலேயே நீ ஜெயித்துவிட்டாய். இனி உனக்கு எங்கும் வெற்றி, எதிலும் வெற்றிதான்'' என்று ஆசி கூறுவது போல் இருந்தது.



அப்பொழுதுதான் கோவிலிலிருந்து திரும்பி வீட்டுக்குள் நுழைந்த மாதவனின் அம்மா பதறிப் போய் ஓடிவந்து மகனை அணைத்துக்கொண்டாள். அழுகுரலில், ''என்னங்க, சின்னப் பிள்ளையை இப்படி அடிக்கிறீங்களே? இது நல்லாயிருக்கா?'' என்று பதறிக் கேட்டு மேலும் அடிக்க விடாமல் தடுத்தாள்.

''உன் அருமைப் பிள்ளை கிழக்கு ரெண்டாவது தெருவில் ஒரு வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைச்சிட்டு வந்திருக்கான். அவனை அடிக்காம என்ன செய்யறது? கொஞ்சச் சொல்றியா?'' என்று உறுமினார் அப்பா.

''மாதுக்கண்ணு, அப்படியா செஞ்சே?''

''ஆமாம்மா, நான்தான் உடைச்சேன். இனிமே ஜாக்கிரதையா இருப்பேம்மா?''

''பார்த்தீங்களா எவ்வளவு நல்ல பிள்ளைன்னு! வேறு பிள்ளைகளா இருந்தா 'நான் உடைக்கவே இல்லை'ன்னு சூடம் கொளுத்தி சத்தியமே செஞ்சிடும். நீங்க அடிப்பிங்கன்னு தெரிஞ்சும், நம்ம மாது உண்மையே பேசியிருக்கான். இது என்ன சாதாரண விஷயமா?''

அப்பா திகைத்துப் போனார். அம்மா எடுத்துக் காட்டிய உண்மை அவரைச் சுட்டிருக்க வேண்டும். அவரது கோபம் குறைந்தது. சற்றுத் தணிந்த குரலில் கூறினார், ''அவன் உண்மையைச் சொன்னதுக்கு சந்தோஷம்தான். ஆனா, நாம நஷ்டஈடு செஞ்சாகணுமே? பணத்துக்கு எங்கே போறது?''

டாக்டர் என்.ஸ்ரீதரன்

''உங்களுக்கு எப்படி விஷயம் தெரியும்?'' என்று அம்மா கேட்டாள்.

''நான் ஆபீசிலேந்து வர வழியில் அந்த வீடு வாசல்ல கொஞ்சம் கூட்டம். விசாரிச்சப்போ, சாயந்திரம் அந்தப் பக்கம் விளையாடிக்கிட்டிருந்த பையன்களில் ஒருத்தன் வீசிய பந்து, ஜன்னல் கண்ணாடியை உடைச்சு உள்ளே போயிடுச்சுன்னு சொன்னாங்க. அக்கம்பக்கத்துப் பையன்களை, யார் பந்து போட்டதுன்னு விசாரிச்சுக்கிட்டிருந்தாங்க. இது நம்ப பையன் வேலையா இருக்குமோன்னு சந்தேகத்தோட வீட்டுக்கு வந்திட்டேன். சந்தேகம் உண்மையாயிடிச்சு. இவனோட பௌலிங் திறமை தெரிஞ்சு போயி, அந்த வீட்டுக்காரர் இங்கே வந்து புதுக்

கண்ணாடி போட நூறு ரூபாயாவது தாளும்னு கத்தப்போறார் பாரு.'' என்றார் அப்பா.

அடுத்த நிமிடமே வாசல் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அப்பா பரபரப்புடன், ''இந்த நேரத்தில யார் கதவைத் தட்டறது? கண்ணாடி உடைஞ்ச வீட்டுக்காரர்தான் வந்துட்டாரோ? அவருக்கு நூறு வயசு'' என்று கூறியபடியே கதவைத் திறந்தார்.

வெளியே நின்றிருந்தவர் ஒரு நடுத்தர வயது மனிதர். அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணி. கூடவே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்!

''வாருங்கள்'' என்று வரவேற்றார் அப்பா. மூவரும் உள்ளே வந்தனர். அவர்தான் கண்ணாடி உடைந்த வீட்டின் சொந்தக்காரர் என்பதையும், கூட வந்திருப்பது அவர் மனைவி என்பதை மாதவன் பார்த்ததுமே தெரிந்து கொண்டான். அவர் வந்திருப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால், இன்ஸ்பெக்டர் எதற்கு வந்திருக்கிறார்? இது என்ன புதிய வம்பு? மாதவன் உடல் மறுபடியும் நடுங்கியது. காந்திஜியின் படத்தைப் பார்த்து, ''தாத்தா, காப்பாற்றுங்கள், சோதனை போதும்'' என்று மனத்துக்குள் முனகினான்.



ஷாஜகானிடம் காலிக்காத் என்ற பட்டத்து யானை இருந்தது. ஔரங்கசீப் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு ஷாஜகானைச் சிறைவிட்டார். காலிக்காத்தும் தாஜ்மகாலின் முன் கண்ணீர் விட்டபடியே படுத்துக் கிடந்தது! ஷாஜகான் சிறைப்பட்ட கோட்டையிலிருந்து தாஜ்மகாலைப் பார்த்தபடியே உயிர்விட்ட அதே நாளில், அதே நேரத்தில், தாஜ்மகாலைப் பார்த்தபடியே காலிக்காத்தும் உயிரை விட்டது!


— எம். ஆனந்தன், வந்தவாசி.

இருவரும் அமர்ந்து கொண்டனர். வந்தவர் மாதவனை வற்புறுத்தி அருகில் அழைத்தார். அவன் பதறிக் கொண்டே நெருங்கினான். ''நீதானே தம்பி எங்க வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைச்சே?'' என்று அவர் கேட்டார். அவரது குரலில் கோபமே இல்லை. கனிவுதான் இருந்தது! மாதவன் சற்றுத் தைரியத்துடன், ''ஆமாம் சார் நான்தான் உடைச்சேன். என்னை மன்னிச்சுடுங்க. இனி அந்தப்பக்கம் வந்து விளையாட மாட்டேன்'' என்றான்.

அவனுடைய அப்பாவும், ''ஆமாம் சார், இந்தத் தடவை மன்னிச்சுடுங்க. நான் சம்பளம் வாங்கியதும் கண்ணாடி விலையைக் குடுத்திடறேன்'' என்று பணிவுடன் கூறினார்.

வந்தவர் சிரித்துக் கொண்டே மனைவிக்கு ஜாடை காட்டினார். அவரது மனைவி பையிலிருந்து ஒரு தட்டும் பழங்களும் எடுத்து அடுக்கினாள். அவர் ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றை எடுத்து அதில் வைத்து அவனிடம் அளித்தார். மாதவனும் அவனுடைய பெற்றோரும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

இன்ஸ்பெக்டர் விளக்கினார். ''இவங்க வீட்டைப் பூட்டிட்டு பகல் காட்சி சினிமாவுக்குப் போயிருந்தாங்க. ஒரு திருடன் எப்படியோ உள்ளே நுழைஞ்சிருக்கான். பீரோவைத் திறந்து பணம், நகைகளை மூட்டை கட்டிக்கிட்டிருந்த போதுதான் உங்க பையனோட பந்து ரூம் கண்ணாடியை உடைச்சு ராமபாணம் மாதிரிப் படுவேகமா அந்தத் திருடனோட நெற்றிப் பொட்டில் அடிச்சிருக்கு. கண்ணாடித் துண்டுகளும் முகத்தில்குத்திடுச்சு. அவ்வளவுதான், ஆள் அப்படியே மயக்கம் போட்டுட்டான். இவங்க சினிமாவிலேந்து திரும்பி வந்ததும் ஆள் கிடக்கிறதைப் பார்த்துப் போலீசுக்கு போன் செஞ்சாங்க. நான் வந்து திருடனைக் கைது செஞ்சு ஆஸ்பத்திரியில சேர்த்துட்டு வந்தேன். ரூமுக்குள்ள கிரிக்கெட் பந்து கிடக்கிறதைப் பார்த்ததும் என்ன நடந்ததுன்னு ஊகித்து விட்டோம். இன்னிக்கு விளையாடின



பையன்கள் வீட்டுக்குப் போய் விசாரித்தோம். ஒருத்தனை ஒருத்தன் யாரும் காட்டிக் கொடுக்கலை. கடைசியா விசாரிக்க உங்க வீட்டுக்கு வந்தோம். உங்க பையனும் தான் தான் பந்து வீசி உடைச்சதை ஒப்புக் கொண்டான்.''

''நகையும் பணமும் களவு போகாம காப்பாத்தின பையனுக்கு ஆயிரம்ரூபாய்பரிசுகொடுக்கணும்னு இவர் வந்தார். போலீஸ் பரிசும் அப்புறமா வரும். நானும் அந்தக் குட்டிக் கபில்தேவ் யாருன்னு தெரிஞ்சிக்கிறதுக்காக வந்தேன்'' என்று கூறிச் சிரித்தார் அந்தப் பெண்மணி. அந்த அறையே சிரிப்பு மயமாயிற்று.

இன்ஸ்பெக்டர் இறுதியாகக் கூறினார், ''நாங்க எதுக்கு வந்திருக்கோம்னு உங்க பையனுக்கு முதல்ல தெரியாதில்லையா? கண்ணாடியை உடைச்சியா'ன்னு வீட்டுக்காரர் கேட்டதுக்குப் பயந்து போய் உங்க பையன் 'நான் உடைக்கலை'ன்னு பொய் சொல்லியிருந்தா, யார் பந்து போட்டாங்கன்னு எங்களால் கண்டு பிடிக்கவே முடிஞ்சிருக்காது. நாங்க போயிருப்போம். அதோட யாருக்கும் இவரோ போலீசோ பரிசு தர முடியாதப் போயிருக்கும். ஆகவே, உங்க பையனுக்குக் கொடுத்த பரிசு திருடனைப் பிடிச்சதுக்கு மட்டுமில்லை, உண்மையைப் பேசினதுக்காகவும்தான்.'' வந்தவர்கள் விடை பெற்றுச் சென்றனர். அப்பாவும் அம்மாவும் மாதவனை மகிழ்ச்சியுடன் தழுவிக் கொண்டனர்.

சத்திய சோதனையில் வென்று, தழும்புகளையும் பரிசுகளையும் பெற்றுக் கொண்டு, அண்ணல் காந்தியடிகளின் படத்தைத் தொட்டு வணங்கி உறக்கத்தில் ஆழ்ந்தான் மாதவன்.

புள்ளி மானே...



கள்ளமில்லா உள்ளத்தோடு
புள்ளிமானே — ஒன்றிக்
கானகத்தில் வாழுகிறாய்
புள்ளிமானே!
வெள்ளமதாய்த் துள்ளிப் பாயும்
புள்ளிமானே — அம்பின்
வேகத்தை நீ எங்கு பெற்றாய்
புள்ளிமானே?

புள்ளி வைத்துக் கோலமிடப்
புள்ளிமானே — முற்றும்
புலன் மறந்து போனது யார்
புள்ளிமானே?
கொள்ளி வைத்த மரக்கிளை போல்
புள்ளிமானே — உந்தன்
கொம்புகளும் தோ ளிடுதே
புள்ளிமானே!

வெள்ளி போலக் கண்ணிரண்டில்
புள்ளிமானே — அன்பு
வெளிச்சரேகை மின்னிடுதே
புள்ளிமானே!
குள்ளவாலும், காதும் ஆட்டிப்
புள்ளிமானே — நீயும்
குட்டிக்குப் பால் கொடுக்கும் போது
புள்ளிமானே!

அள்ளியுனை அணைத்திடவே
புள்ளிமானே — நெஞ்சில்
ஆசைமிகக் கூடிடுதே புள்ளிமானே!
மெள்ளவுனை நெருங்கிடிலோ
புள்ளிமானே — அஞ்சி
மிரண்டுடனே ஓடுவதேன்
புள்ளிமானே?

— தளவை. இளங்குமரன்.

லட்டுப் பாப்பா



லட்டுப் பாப்பா! லட்டுப் பாப்பா!
கன்னம் குழியச் சிரிக்குது! — அதன்
பட்டுத் துணி போல் உடம்பு
கண்ணை யெல்லாம் பறிக்குது!

ஆசையோடு அணைத்துக் கொண்டால்
இன்ப மெல்லாம் பிறக்குது! — அதன்
பாஷை யில்லாப் பேச்சினாலே
துன்ப மெல்லாம் பறக்குது!

பஞ்சு மெத்தைப் பாப்பாவினைப்
பார்ப்ப வர்க்குக்
கொண்டாட்டம்! — அதன்
அஞ்சு விரல் கையும் காலும்
துறுதுறுக்கும் வண்டாட்டம்!

குழந்தை மனம் இருந்து விட்டால்
கால மெல்லாம் களிப்புத்தான்! — இந்தக்
கொள்கை யினைக் கடைப் பிடித்தால்
ஞால மெல்லாம் சிறப்புத்தான்!

— ஆண்டாள் பிரியதர்சினி.



போங்கய்யாவும் வாங்கய்யாவும்

கைலாஸ்

மதியூகி அமைச்சர் ஓய்வு பெற விரும்பியதால், தக்க ஒருவரைத் தேர்ந்தெடுக்க நாடு முழுவதும் பறையறிவிக்கப்பட்டது. வந்தவர்களுள் இருவர் மட்டுமே இணையான தகுதிகளுடன் இறுதித் தேர்வுக்கு நின்றனர். அவர்கள் அமணனும், குமணனும்.

இருவருக்கும் தலா ஒவ்வொரு ஏக்கர் நிலத்தையும் ஐந்து வேலைக்காரர்களையும் கொடுத்த அமைச்சர், "ஆறு மாதம் கழிந்ததும் உங்கள் இருவரில் அதிகமான விளைச்சலை யார் காட்டுகிறார்களோ அவருக்கே அமைச்சர் வேலை!" என்று விளக்கினார்.

இரு இளைஞர்களும் உற்சாகத்துடன் அன்றே பணியைத் துவக்கினர்.

ஆறு மாதங்களும் ஓடி விட்டன.

குமணன் நிலத்தில் அமணனுடைய நிலத்தில் விளைந்ததைக் காட்டி

லும் இரண்டு மடங்கு விளைந்திருந்தது.

அரசன் கிள்ளிவளவனுக்கு ஒரே வியப்பு.

மதியூகி, அமணன் குமணன் இருவரையும் அழைத்தார்.

''ஒரே சிறப்புடைய நீங்கள் இருவரும் ஒரே அளவு உற்பத்தியைக் காட்டாதது வியப்புக்குரியதே. வித்தியாசம் உங்களுக்கிடையே தான் இருக்க வேண்டும். நீங்கள் வேலைக்காரர்களை எப்படி வேலை வாங்கினீர்கள்?'' என்று வினவினார்.

இளைஞர்கள் இருவரும் யோசித்துப் பார்த்தனர்.

குமணன் கூறினான். ''வாங்கய்யா வாங்க. காலா காலத்திலே நல்லபடியா பாடுபட்டு நிறைய விளைவிப்போம்; என்று கூறுவேன். எல்லாரும் உழைப்பார்கள்,'' என்றான்.

''போங்கய்யா! போய் காலா காலத்திலே நல்லபடியா பாடுபட்டு நிறைய விளைவிக்கணும் என்று கூறுவேன். எல்லாரும் பாடுபடுவார்கள்,'' என்று அமணன் கூறினான்.

அமைச்சர் அரசரைப் பார்த்து முறுவலித்தார்.

''கவனித்தீர்களா அரசே! தன்மையாகப் பேசுவதே ஆட்களிடம் எவ்வளவு ஆர்வத்தையும் உழைப்பையும் பெருக்குகிறது! குமணன் வாருங்கள் என்று விளித்து விளைவிப்போம் என்று தன்னையும் சேர்த்துக் கொண்டு கூறியிருக்கிறான். ஆனால் அமணன், போங்கள் போய் விளைவியுங்கள் என்று கட்டளையாகப் புகன்றிருக்கிறான். தன்னை ஆட்களோடு இணைத்துப் பேசவில்லை. இருவரும் வேலைதான் வாங்கியிருக்கிறார்களே தவிர, தாங்கள் உழைக்கவில்லை. ஆனால், சொல் நயத்தால் குமணன் ஆட்களைத் தன் வயப்படுத்தி விட்டான். எனவே, அவனே எனது தேர்வு,'' என்று கூறி முடித்தார் மதியூகி.



இரண்டும் இரண்டும் நாலாச்சு!
மீதி எல்லாம் என்னாச்சு?



பாம்புக்கும் பழத்திற்கும் ஒரே பாட்டு!

கவி காளமேகத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்; அம்மென்னும் முன்னே ஆயிரமுமாகக் கவிதை பாடவல்லவர்.

இந்தக் காலத்தில் ஒன்றில் இரண்டு (டூ இன் ஒன்) ஒன்றில் மூன்று (த்ரீ இன் ஒன்) என்கிறோமே, அப்படித் தம் பாடல்களை ஒன்றில் இரண்டு, ஒன்றில் மூன்று என்று பொருள் வரும்படி பாடிய சமர்த்தர் அவர்.

ஒரு சமயம் கவி காளமேகம் ஓர் ஊரின் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கே ஒரு பிடாரன் தன் பாம்பை வைத்து வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் அந்த வழியே வந்த காளமேகப் புலவரை இனம் கண்டுகொண்ட ஒரு படித்தவர், ''புலவர் பெருமானே, இந்த நாகப் பாம்பைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்.

அதேசமயம் அங்கு நின்ற கிராமத்தார் ஒருவர், தம் கையில் வைத்திருந்த வாழைப் பழத்தைக் காட்டி, ''தயவு செஞ்சு, இந்த வாழைப் பழத் தைப் பற்றியும் நீங்க ஒரு பாட்டுப் பாடுங்க'' என்று கேட்டுக் கொண்டார். ஒருவர் பாம்பைப் பற்றிப் பாடச் சொல்கிறார். மற்றொருவர் வாழைப் பழத்தைப் பற்றி...

நம்மிடம் இப்படி யாராவது கேட்டுக் கொண்டால் என்ன செய்திருப்போம்? குறைந்தபட்சம் இரண்டு முழு நாட்கள் யோசித்து, பாம்பைப் பற்றி ஒரு பாட்டு, பின், பழத்தைப் பற்றி ஒரு பாட்டு என

தஞ்சாரசன்

இரண்டு பாடல்களை எழுதியிருப் போம். ஆனால், கவி காளமேகம் இரண்டுநாட்களும்எடுத்துக்கொள்ள வில்லை. இரண்டு பாட்டுக்களையும் பாடவில்லை. இமை மூடித் திறக்கும் முன் அவரிடமிருந்து அழகான வெண்பா ஒன்று வந்தது.

ஒரே ஓர் வெண்பா. அது ஒன்றில் இரண்டு (டூ இன் ஒன்) வெண்பா: பாம்பைப் பற்றியும், பழத்தைப் பற்றியும் அந்த ஒரே பாட்டில் செய்தி இருந்தது.

பாட்டைப் பாருங்களேன்.

"நஞ்சிருக்கும் தோல் உரிக்கும் நாதர்
முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தால் பல் பட்டால்
மீளாது — விஞ்சு மலர்த்
தேன் பாயும் சோலை
திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்."

பாட்டை இன்னொரு முறை படித்துப் பாருங்கள். பொருள் புரிகிறதல்லவா? இந்தத் 'திருமலைராயன்', 'தேன் பாயும் சோலை'யை மட்டும் ஒதுக்கி வையுங்கள்கொஞ்சம்.பாட்டின் முதல் இரண்டு வரிகளை மட்டும் முதலில் பார்ப்போம். என்ன சொல்கிறது பாட்டு?

'நஞ்சு இருக்கும், தோல் உரிக்கும். நாதர் முடி மேல் இருக்கும். வெஞ்சினத்தால் பல்பட்டால் மீளாது' — என்கிறது பாட்டு.

அதாவது, நாகப் பாம்புக்கு நஞ்சிருக்கும். அது சட்டை உரிக்கும். சிவ பெருமானின் தலைமேல் இருக்கும். கொடும் கோபத்தால் அதன் பல் மற்றவர்களின் மேல் பதித்தால் அவ்வளவுதான். கதை முடிந்துவிடும்! மீளாது.

எப்படி...? இந்தச் செய்திகள் அப்படியே பாம்புக்குப் பொருந்து கின்றனவா? சரி... பழத்துக்கு?

'நஞ்சிருக்கும் (கனிந்து முதிர்ந்து) வாழைப்பழம் நைந்து இருக்கும். (பேச்சு வழக்கில் நைந்து நஞ்சு ஆகி விடுகிறது). தோல் உரிக்கும். பழத்தை உண்ண வேண்டுமானால் தோலை உரித்துத்தானே ஆகவேண்டும்? நாதர் முடிமேல் இருக்கும். பஞ்சாமிர்தமாகப் பிசையப்பட்டு அது இறைவன் தலையில் அபிஷேகமாகப் பொழியப் படும்போது முடி மேலும் இருக்கும். வெஞ்சினத்தால் பல்பட்டால் மீளாது — அதாவது, சாப்பாட்டில் கறியாகச் சமைத்துப் பரிமாறப்படும் போது பல் பட்டு வாய்க்குள் போனால் திரும்ப வராது (டபக்கென்று தொண்டைக்குள் இறங்கி விடும்.) எப்படி?

வாழைப் பழத்துக்கும் இந்தச் செய்திகள் ஒத்து வருகின்றன அல்லவா?

அட, பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பற்றி, ஒன்றுக்கொன்று தொடர்பே இருக்க முடியாது என்று நாம் நினைப்பவை பற்றிக் கூட கவி காளமேகம் சிலேடையாக நிறையப் பாடி இருக்கிறார்.

ஏன் விநாயகர், முருகன், சிவன் மூவருக்கும் பொருந்தி வருமாறு ஒன்றில் மூன்றாக (த்ரீ இன் ஒன்) பொருள் வரும்படி கூடப் பாடி இருக்கிறார்.

காளமேகப் பெரும்புலவரின் பாடல்களைப் படித்துப் புரிந்து கொண்டால், உள்ளம் இனிக்கும். உயிரும் சிலிர்க்கும். படித்துப் பாருங்கள். முடிந்தால் நீங்களும் ஒன்றில் இரண்டு, ஒன்றில் மூன்று என்று பொருள் வர (பாட்டு) எழுதிப் பாருங்கள்.




கருத்து: சீர்காழி ஸ்ரீராம்.


திறமையான இளவரசி
சேர நாட்டு மன்னர், இளவரசனை மணக்க ஏற்ற திறமையான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க, மந்திரியிடம் ஆலோசனை கேட்டார்.
அதன்படி மந்திரி மறுநாள் ஐந்து பெண்களை அழைத்து வந்தார்.
மன்னா! இப் பெண்களில் திறமையான ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்!
அதற்கும் நீங்களே ஏற்பாடு செய்யுங்களேன் மந்திரியாரே!
அதன்படி-
உட்காருங்கள் ராணியார் பொன், வெள்ளி, முத்து, செம்பு, வைரக் கிரீடங்கள் ஐந்தை எடுத்து வருவார் இப்போ.
ராணியார் வந்து பின் பக்கமாகக் கிரீடங்களைச் சூட்டினார்.
ஒவ்வொருவர் தலையிலும் கிரீடங்கள் ஜொலித்தன.
அரசர் ஒவ்வொருவராக அழைத்துக் கேட்டார்.
உன் தலையில் உள்ள கிரீடம் என்ன கிரீடம்?
தெரியாது மன்னா!
1


நான்கு பெண்களும் 'தெரியாது' என்ற பதிலையே கூறினர். அரசர் ஐந்தாவது பெண்ணை அழைத்தார்.
உன் தலையில் உள்ள கிரீடம் என்ன கிரீடம் தெரியுமா?
தெரியும் அரசே! வைரக் கிரீடம் என்னுடையது!
மன்னர் மகிழ்ச்சியும் வியப்பும் கொண்டார்.
நீ மட்டும் எப்படித் தெரிந்து கொண்டாய் பெண்ணே!
அரசே! என் தலையில் சூட்டியதைத் தானே என்னால் பார்க்க முடியாது?
எனக்கு முன்னால் நான்கு பேரின் தலையில் இருந்த கிரீடத்தை நான் பார்க்க-லாம் அல்லவா!
நீ தான் திறமையான பெண்! இளவரசனுக்கு மனைவியாகத் தகுந்தவள்.

கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர்.கு.கணேசன்




● எஸ். பழனிச்சாமி, வனிதா. தண்ணீர்ப் பந்தல்பாளையம்.

தலைமுடி உதிர்வதற்கு என்ன காரணம், டாக்டர்? அதைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

பதில்: பரம்பரை அம்சம், தைராய்டு, அட்ரீனல், டெஸ்டோஸ்டீரான் போன்ற இயக்கு நீர்களின் சுரப்பு விகிதத்தில் ஏற்படும் கோளாறுகள், காளான் நோய்கள், வைரஸ், பாக்டீரியா நோய்கள், புரதச் சத்துக் குறைவு, இரத்த சோகை நோய், மிகையான வைட்டமின் — ஏ, சில மருந்துகளின் பின் விளைவு, நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டுக் கிடத்தல் போன்ற பல காரணங்களால் தலைமுடி உதிர்கிறது. இதைச் சரி செய்ய சிறப்பான சிகிச்சை எதுவுமில்லை!

இருப்பினும், புரதச் சத்து நிறைந்த உணவுகளான பால், முட்டை, இறைச்சி, பருப்பு வகைகள் போன்றவற்றையும் இரும்புச் சத்து நிறைந்த கேப்பை. கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளையும், வெண்டைக்காய், பீர்க்கங்காய், பீட்ரூட், முட்டைக்கோஸ், புடலங்காய், பூசணிக்காய் போன்ற காய் கறிகளையும் உணவில் தாராளமாகச் சேர்த்து வந்தால் தலை முடி உதிர்வது தவிர்க்கப்படும். காளான் நோய்க்கான எதிர் மருந்துகளை உபயோகிப்பதன் மூலமும் தலைமுடி உதிர்வதைத் தவிர்க்கலாம். பேன், பொடுகு போன்றவை பாதிக்காமல் பாதுகாத்து வந்தால் கூட ஓரளவுக்குத் தலைமுடி உதிர்வதைத் தவிர்த்து விட முடியும்!



● க. உதயசூரியன், திருப்பாச்சூர்.

என் தம்பிக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு வலது கண்ணில் கம்பி குத்திப் பார்வை போய் விட்டது. இதனால் இடது கண் எவ்வகையிலாவது பாதிக்கப்படுமா?

பதில்: கவலைப்படாதே, உதயசூரியன்! உன் தம்பிக்கு வலது கண் பாதிப்பின் காரணமாக இடது கண் கண்டிப்பாக பாதிக்கப் படாது! தைரியமாக இருக்கச் சொல்!



● எஸ். மனோகரன், சங்கமங்கலம்.

தேள் — பூரான் — பாம்பு இம்மூன்று விஷக்கடிகளுக்குச் சிறந்த மருத்துவ முறைகளைக் கற்றுத் தாருங்கள் டாக்டர்! நாங்கள் தெரிந்து கொள்கிறோம்.


பதில்: தேள் கொட்டிய இடத்திற்குச் சுமார் 10 செ.மீ. மேலே தள்ளி கயிற்றாலோ, துணியாலோ கட்டுப் போட வேண்டும். இதனால் தேளின் விஷம் நம் உடம்புக்குள் பரவாமல் தடுத்து விடலாம். இல்லையா?

பின்பு, தேள் கொட்டிய இடத்தில் தொடர்ந்து அரை மணி நேரத்திற்கு ஐஸ் கட்டியால் ஒற்றடம் கொடுக்க வேண்டும். ஐஸ் கிடைக்காத பட்சத்தில் குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் ஒற்றி எடுக்கலாம். அல்லது குளிர்ந்த நீரிலேயே கடிபட்ட பாகத்தை மூழ்கி வைக்கலாம்! இதன் மூலம் தேள் கடியினால் உண்டாகும் வேதனையைக் குறைக்க முடியும்.

இப்போது பூரான் கடிக்கு வருவோம். ஏறக்குறைய தேள் கடிக்கு செய்கின்ற முதல் உதவி முறைகளையே பூரான் கடிக்கும் செய்யலாம். பலன் கிடைக்கும்!

அடுத்ததாகப் பாம்புக்கடி! பாம்பு கடித்த இடத்திற்கு, சற்று மேலே தள்ளி, கயிற்றாலோ துணியாலோ இறுக்கிக் கட்டுப் போட வேண்டும். பின்பு அக்கட்டினை 15 நிமிடங்களுக்கு ஒருமுறை சுமார் இருபது வினாடிகள் வரை தளர்த்தி விட்டு, மீண்டும் இறுகக் கட்டி விட வேண்டும். இதனால் பாம்பின் விஷம் உடம்புக்குள் பரவுவதைத் தவிர்ப்பதோடு, கடிபட்ட பாகத்திற்கு இரத்தம் நின்று விடாமலும் பார்த்துக் கொள்ள முடியும்! கட்டு கட்டிய கையோடு பாம்பு கடித்த இடத்தை சுத்தமான கத்தியாலோ அல்லது பிளேடாலோ கீறி இரத்தத்தை வெளியேற்ற வேண்டும். இதன் மூலம் கடிபட்ட இடத்தில் தேங்கி நிற்கும் பாம்பின் விஷம் வெளியேற வாய்ப்பு உண்டாகும். அடுத்ததாக, பாம்பு கடித்த பாகத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் உயரே தூக்கிப் பிடிக்கக் கூடாது; தொங்கப் போட வேண்டும்.

கடைசியாக ஒரு செய்தி — தேள், பூரான், பாம்பு எது கடித்தாலும் — முதல் உதவி செய்து கொண்ட பின்னர் மருத்துவர் உதவியையும் நாட வேண்டியது அவசியம். ஏனென்றால், உடம்புக்குள் ஊடுருவியிருக்கும் விஷத்தின் வீரியத்தை மருத்துவரால் மட்டுமே குறைக்க முடியும்!



● தா. ஷேக் ஹுசைன், செஞ்சி.

இருமல் எவ்வாறு உண்டாகிறது?

பதில்: நம் சுவாசப் பாதையில் ஏதோ ஒரு பகுதி — ஏதோ ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பே 'இருமல்' ஆகும்! இது இரு வழிகளில் உண்டாகிறது. ஒன்று — நாம் வேண்டுமென்ற உண்டாக்குவது. மற்றொன்று தானே உண்டாவது.


இரண்டாம் வகை இருமலுக்கு இரண்டு காரணங்கள். சுவாசப்பாதையில் பாக்டீரியா, வைரஸ், காளான் போன்ற கிருமிகளின் தொற்று இருந்தால் இருமல் வருகிறது. அல்லது ஏதேனும் வேண்டாத அயல் பொருள் சுவாசப் பையினுள் நுழையும் போதும் இருமல் வருகிறது.

மூளைத்தண்டில்' இருமல் மையம் உள்ளது. மேற் சொன்ன காரணங்களால் தூண்டப்படுகிறது. அப்போது கீழ்க்காணும் இயக்கங்கள் நிகழ்கின்றன.

— சுவாசப்பையில் காற்றை உள்ளிழுக்கும் தசைகள் சுருங்கி போதிய அளவு காற்றை உள்ளே இழுத்துக் கொள்கின்றன.

— பின்பு, கீழ்த்தொண்டை மூடிய நிலையில் சுவாசப் பையின் வெளியிழுப்பு தசைகள் சுருங்கி காற்றை வேகமாக வெளியே தள்ள முயல்கின்றன. இதனால் சுவாசப் பையிலும், சுவாசக் குழாயிலும் உள்ள காற்றின் அழுத்தம் அதிகமாகிறது.

— இந்நிலையில் தொண்டை திறந்து கொள்ள, சுவாசப் பையினுள் அடைப்பட்டிருக்கும் காற்று, மிக வேகமாக வெளியேறுகிறது. அப்போது எழும்பும் ஓசைதான் 'இருமல்'! நமக்கு இருமல் வருவதும் வீட்டுக் குக்கரில் 'விசில்' சத்தம் கேட்பதும் ஒரே சித்தாந்தத்தில்தான் என்பதைத் தெரிந்து கொள் ஷேக் ஹுசேன்.



● எஸ். ஷர்மிளா, எம். குணசுந்தரி. அன்னூர்.

நம்முடைய முடி ஏன் கருமை நிறத்தில் உள்ளது?


பதில்: நம்முடைய முடியில் 'மெலனின்' என்ற கறுப்பு நிற நிறமிகள் (Melonin pigments) உள்ளன. இவைதான் முடியின் நிறத்தை நிச்சயிக்கின்றன. இந்நிறமிகள் கறுப்பாக இருப்பதால் முடியும் கறுப்பாக இருக்கிறது!

"என் கால்குலேட்டர் சும்மா ரிப்பேர் ஆறது?"

"அப்பவே சொன்னேன், கால்குலேட்டர் வேண்டாம். முழுகுலேட்டர் வாங்குன்னு..."

— எம். ஆனந்தன், வந்தவாசி.





செல்லா இடத்துச் சினம்

ஏழாம் வகுப்புப் படிக்கும் ராமு கோபத்திற்குப் பேர் போனவன். காரணமே இல்லாமல் கோபப்படுவதும் ஆத்திரம் கொண்டு மற்றவர்களைத் திட்டுவதும் அவனுக்கு அல்வா சாப்பிடுவது போல.

ராமு நன்றாகப் படிப்பான். எல்லோருக்கும் உதவி புரிய எண்ணுவான். எத்தனையோ நல்ல குணங்கள் இருந்தாலும் அந்த முன் கோபம் அவனுக்குக் கெட்ட பெயரையே வாங்கித் தந்தது.

ராமுவின் ஆசிரியர் அவனிடம் பலமுறை, 'ஒருவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் கோபத்தைக் கட்டுப் படுத்த வேண்டும். இல்லையேல் அந்தக் கோபம் அவனுக்கே தீமை செய்து விடும். கோபம் ஒரு பந்து போன்றது. அது, அடித்தவனிடமே சுவற்றில் பட்ட பந்து போலத் திரும்பி வந்து விடும் என்று கூறியிருக்கிறார். அவனை மாற்ற அவன் பெற்றோர் எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.

ராமு அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டான். ஒரு நாள் ராமு தோட்டத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டு இருந்தான். முன்கோபியான அவனுடன் யாருமே சேர விரும்புவது இல்லை. ஆகவே, அவன் தனியாகவே பந்தைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தான். ராமுவின் வீட்டுவேலைக்காரன் முனியன் அங்கு வந்தான்.

"முனியா! கொஞ்ச நேரம் என் கூடப் பந்து ஆட வாயேன்?" என்று அழைத்தான் ராமு.

வேணு சீனிவாசன்

"எனக்கு வேலை இருக்கு ராமு. வங்கிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். பெரிய ஐயா ஆபீஸ் கிளம்பு முன் வந்துவிட வேண்டும்." என்று தன் இயலாமையைக் கூறினான் முனியன்.

"என்னமோ கூப்பிட்டா, ரொம்ப அலட்டிக்கிறியே! என்னைத் தவிர வேறு யாராவது ஒருவன் வேலைக்காரனை மதிச்சு, தன்னோடு விளையாடக்கூப்பிடுவாங்களா?" என்றான் ராமு கோபமாக.

முனியனுக்கு 'சுருக்' என்றது. இது வரையில் ராமுவின் அப்பாவோ, அம்மாவோ முனியனை வேலைக்காரனாக எண்ணியதும் இல்லை. தரக் குறைவாகப் பேசியதும் இல்லை. அதனால், அதை அவன் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "இன்னும் அரைமணியில் வங்கியை மூடிடுவாங்க, அதுனால தான் அவசரமாப் போறேன்" என்ற முனியன், "இருந்தாலும் இருக்கட்டும். உனக்காக ஒரு ஆட்டம் ஆடிட்டுப் போறேன் ராமு" என்று சொல்லி அவனுடன் விளையாட ஆரம்பித்தான்.

வயதான முனியனுக்கு கிரிக்கெட் ஆடத் தெரியுமா? அவன் இலக்கு இல்லாமல் போடும் பந்தை அடிக்க





முடியாமல் திணறிய ராமுவுக்குக் கோபம் கண்ணை மறைத்தது.

"படிக்காத முட்டாள்! பந்து போடத் தெரியுதா உனக்கு? இது

கூடத் தெரியாம இவ்வளவு உயரம் மாடு மாதிரி வளர்ந்து இருக்கிறியே?" என்று வாய்க்கு வந்தபடி திட்டி விட்டான்.

முனியனுக்கு பதில் ஏதும் சொல்லத் தோன்றவே இல்லை. கனத்த உள்ளத்துடன் வங்கியை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் மனம் மிகவும் வருந்தியது. நாம் எடுத்து வளர்த்த பிள்ளை, இப்படிக் கேவலமாகப் பேசி விட்டானே என்று அவமானத்தால் கூசிப் போனான்.

இவ்வளவு காலம் வரை கௌரவமாக வாழ்ந்து விட்ட தன்னை, இப்படி அவன் வயதுக்குக் கூட மதிப்புக் கொடுக்காது திட்டியதை நினைத்து அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. சாலையில் செல்லும் லாரி, கார் ஆகிய வாகனங்களைப் பற்றிய எண்ணமே இல்லாமல் முனியன் மனம் குழம்பிப் போன நிலையில் நடந்து கொண்டு இருந்தான்.

பழக்கத்தின் காரணமாக வண்டி மாடு சொல்வது போல முனியன் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பி நடந்தான். என்ன முயன்றும் ராமு திட்டியதை அவனால் மறக்கவே முடியவில்லை. ராமுவின் பெற்றோர்கள் அவனை 'டா'' போட்டுக்கூடப்பேசியதில்லை. ஏதாவது தவறு செய்து விட்டால் கூட 'நீங்களே இப்படிச் செய்துட்டிங்களே!' என்று தான் கேட்பார்கள். நேற்றுப் பிறந்த பயல், 'முட்டாள்' என்று திட்டி விட்டானே!

ராமு கோபமாகத் திட்டிய வார்த்தைகளையே திரும்பத் திரும்ப நினைத்துக்கலங்கினான் முனியன்.

கார்களின் 'பீம், பீம், என்ற ஹாரன் சப்தம் முனியனை சுய நினைவிற்குக் கொண்டு வந்தது. அவன் யோசனை செய்து கொண்டே சாலையின் நடுவிற்கு வந்து நடந்து கொண்டிருக்கிறான்! முனியன் பரபரப்போடு நடை பாதைக்குச் செல்ல முயன்ற போது, வேகமாக வந்த கார் ஒன்று அவனை மோதியது. முனியன் சாலையில் விழுந்தான். கையில் இருந்த பணப்பை எகிறிப் போய்த் தொலை



வில் விழுந்தது.

இரக்க குணமுடைய காரோட்டி வந்தவர், முனியனை அதே காரில் ஏற்றிச் சென்று மருத்துவ மனையில் சேர்த்தனர்.

காருக்குச் சொந்தக்காரர் வேணு கோபால், ராமுவின் தந்தைக்கு நண்பர். அவருக்கு ஏற்கெனவே முனியனை நன்றாகத் தெரியும். ஆகவே, அவர் ராமுவின் தந்தைக்கு தகவல் சொல்லி அனுப்பினார்.

நடந்த எல்லாவற்றையும் மருத்துவ மனையில் தம் நண்பர் மூலமாகக் கேள்விப்பட்ட ராமுவின் அப்பா, முனியன் ஏதோ பலத்த யோசனையின் காரணமாகவே நடை பாதையை விட்டு, சாலையின் நடுவிற்கு வந்து விபத்தில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டார்.

"முனியனுக்கு என்ன? விபத்தில் சிக்கிக் கொண்டானாமே? சற்றுமுன் தானே அவனுடன் நான் விளையாடிக் கொண்டிருந்தேன்!" என்று ஓடி வந்தான் ராமு.

"முனியனுக்குப் பாவம், என்ன காரணமோ, மனநிலை சரியில்லை. என்னிடம் கூட எதுவும் சொல்லவில்லை. வங்கிக்குச் சென்று பணம் எடுத்துக் கொண்டு வரும் போது, தன்னை மறந்து சாலையின் நடுவிலே நடந்து வந்து காரில் சிக்கிக் கொண்டிருக்கிறான்!"

தந்தையின் பதில் ராமுவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு உண்மை தெரிந்து விட்டது. தான் முனியனைக் கோபத்தில் மனம் நோகுமாறு திட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்ற உண்மையை அவன் உணர்ந்து கொண்டான்.

தந்தை கேட்கக் கேட்க, எல்லா விவரங்களையும் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் விட்டான் ராமு. அவருக்குக் கோபமான கோபம்.

"உடனே போய், முனியனிடம் மன்னிப்புக் கேள். இல்லா விட்டால், உன்னோடு இனி பேச மாட்டேன்" என்றார் அவர்.

முனியனுக்கு நினைவு திரும்ப வெகு நேரமாகியது. அவனுக்கு நினைவு திரும்புவதை எதிர்பார்த்து எல்லோரும் காத்துக் கிடந்தனர். அவர்களில் ஒரு போலீஸ்காரரும் இருந்தார்.

"முனியா, இந்தக் கார்க்காரர் தானே உன் மேல் வந்து மோதினார்?" என்று கேட்டார் போலீஸ்காரர்.

"இல்லீங்க. நானாகத்தான் மனம் குழம்பிப்போன நிலையில் நடுரோடில் நடந்து சிக்கிக்கிட்டேன். அவர் மேல் தப்பு இல்லே" என்றான் முனியன்.

"முனியா, என் மனத்தில் இருந்த கவலையைத் தீர்த்து விட்டாய்" என்று கலங்கினார் அப்பாவின் நண்பர். போலீஸ்காரருக்குத்தான் ஏமாற்றம்.

"முனியா என்னை மன்னிச்சுடு. எல்லாத்துக்கும் நான்தான் காரணம். முன்கோபத்தால் உன்னை மரியாதைக் குறைவாக நான் பேசியதால்தானே, நீ இப்படி மனம் குழம்பி விபத்தில் சிக்கிக் கொண்டாய்? எனக்குப் புத்தி வந்துவிட்டது. இனிமேல் முன்கோபப் படமாட்டேன்" என்று கண்ணீர் விட்டான் ராமு. முனியன் அவன் தலையை அன்போடு தடவிக் கண்ணீர் விட்டான்.


"பணம் போனால் போகுது. முனியன் ஆபத்து இல்லாமல் உயிர் பிழைத்தான். அதோட என் பையன் ராமுவும் திருந்திட்டானே" என்று மகிழ்ந்தார் அப்பா.

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற.

"ஐந்தும் ஐந்தும் பத்துன்னா, எட்டும் ஒன்பதும் எத்தனை?"

"ஏன் சார், நீங்க மட்டும் ஈசி கணக்கைப் போட்டுட்டு எங்களுக்கு மட்டும் கஷ்டமான கணக்கைக் குடுத்திருக்கீங்களே?"

— எஸ். ஹரிஹரன், மன்னார்குடி.



ஒரு நாளாவது போகாதே!

பாலு புரோக்கிரஸ் ரிப்போர்ட்டைக் காட்டினான் அம்மாவிடம்.

"உனக்கு இந்த வீட்டில் என்னடா குறைச்சல்? வேளா வேளைக்குச் சாப்பாடு. கேட்ட உடனே வாங்கித் தர நாங்க? சரியாப் படிக்க என்ன கேடு?"

"இனிமேசோறுபோடாதேஇந்தச் சனியனுக்கு."

அம்மா குட்டினாள். கன்னத்தைப் பிடித்துத் திருகினாள்! பாலு மறுப்புப் பேசாமல் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டான்! அவர்களிடம் சொல்லிக் கொள்ளக் கூட இல்லாமல்,கால்போன போக்கில் நடந்தான்.

இனிமேல் இந்த வீட்டுக்குத் திரும்பக் கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.

எங்கே போவது? எங்கேயாவது. பள்ளிக்கூடம், வாத்தியார், புரோக்கிரஸ் ரிப்போர்ட் எதுவுமே இல்லாத இடமாகப் போக வேண்டும்! படிப்பை நினைத்த போதே அவனுக்கு வேம்பாகக் கசந்தது!

பள்ளிக்கூடமே இல்லாத இடம் எது? அவனுக்குச் சட்டென்று இலுப்பைக் காட்டில் வசித்த பழங்குடி மக்களின் நினைப்புத்தான் வந்தது. அங்கே பள்ளிக்கூடம், பரீட்சை எதுவும் இல்லையாம். போன மாதம் டீ.வி.யில் சொன்னார்களே?

சட்டைப்பையில் ஏதோ சில்லறை இருந்தது. எடுத்து எண்ணிப் பார்த்தான். பத்து ரூபாய் இருபது காசு. பஸ் ஸ்டாண்டில் போய் இலுப்பைச் குடிக்கு என்ன கட்டணம் என்று விசாரித்தான். நான்கு ரூபாய் சில்லறை என்றார்கள். உடனே ஏறிவிட்டான்!


மலையடிவாரத்தில் இறங்கி, யாரிடமோ வழி கேட்டு அவன் இலுப்பைக்காட்டில், காட்டு மக்கள் வசித்த சிற்றூரை அடைந்த போது இருட்டிவிட்டது. அவர்களுக்கு அவனைப் பார்த்ததும் ஒரே வியப்பு. "உங்களோடு ஒருநாள் இருக்க வந்திருக்கிறேன்'" என்றுகிராமத் தலைவரிடம் கூறி வைத்தான். அவர்கள் குடிசையிலேயே தங்கினான்.

அதிகாலை. ஏதோ பேச்சுக் குரல் கேட்டுப் பாலுவுக்கு விழிப்பு வந்தது. பேசிக் கொண்டிருந்தவர்கள் கிராமத் தலைவரும், பாலுவின் வயதிலிருந்த அவரது மகன் கங்காளியும்.

"நகரத்து வாழ்க்கை அலுத்துவிட்டது என்பதற்காக ஒரு மாறுதலுக்குப் பாலு இங்கே வந்திருக்கிறான். இவன் வந்திருப்பதற்காக; இவனோடு சுற்ற வேண்டும் என்பதற்காக என்னைப் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று கூறுவது சரியல்ல," என்றான் கங்காளி.

"இதுமட்டும் காரணம் இல்லை கங்காளி. நேற்று, பனம்பாக்கம் அருவியைத் தாண்டி வரும்போது காலில் விஷ முள் குத்தி வலிக்குதுன்னு சொன்னியே? இந்த வலிக்கிற காலோட, மலைப் பாதையில பத்துக் கல் நடந்து, இரண்டு ஆறுகளைக் கடந்து, அப்படியாவது பள்ளிக்கூடம் போகணுமான்னுதான் கேட்டேன். இன்னிக்கு ஒரு நாள் போகாம இருந்து வீட்ல ஒய்வா இரேன். இந்தத் தம்பிக்கு இடங்களைக் காட்டின மாதிரியும் இருக்கும்"

என். விஜயன்



என்று மகனிடம் வற்புறுத்தினார் கிராமத் தலைவர்.

"மன்னிச்சுக்குங்க அப்பா. ஒரு நாள் பாடம் போனால் கூட, அதைச் சொல்லித் தர நம்ம ஊர்ல யாருமில்லே. இதுக்காகவாவது நம்ம கிராமத்திலேயே ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க நீங்கள் முயற்சி பண்ணணும். கல்வி கண்களைப் போன்றது."

"அது எனக்கும் தெரியும் கங்காணி. நாம் எவ்வளவோ முறையிட்டும் அரசாங்கம் நம்ம கிராமத்தில பள்ளிக்கூடத்தைத் தொடங்க முன்வரலே. அதனால, அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்ப வர்ற மாதம் பத்தாம் தேதி, கலெக்டர் அலுவலகம் முன்னால நம்ம கிராமத்து ஜனங்களெல்லாம் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தறதா இருக்கோம்" என்றார் தலைவர்.

பாலுவுக்கு உள்ளம் படபடத்தது. கல்வியை வெறுத்து, பள்ளிக்கூடம் இல்லாத ஊராகப் பார்த்து அவன் தங்க வந்திருக்கிறான். இங்குள்ள மக்கள், தங்கள் குழந்தைகளின் கல்விக் கண்களைத் திறக்கப் பள்ளிக்கூடம் தொடங்க உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருக்கிறார்கள்! இந்தச் சிறுவன் கங்காணி, படிப்பதற்காக இருபது கிலோமீட்டர் நடந்து, இரண்டு அருவிகளைக் கடந்து போகிறான்! அவன் எழுந்து கொண்டான்.

"தம்பி, கங்காணி பள்ளிக்கூடம் போனால் போகட்டும். நான் வேறு யாரையாவது ஏற்பாடு பண்ணி, உனக்குக் காடு மலையெல்லாம் காட்டச் சொல்றேன்" என்றார் தலைவர்.

"இருக்கட்டுங்க. நான் இன்னொரு விடுமுறை நாளில் வர்றேன். இப்ப, கங்காணியோட நானும் கிளம்பறேன். பள்ளிக்கூடத்துல முக்கிய பாடம் இருக்கிறது இப்பத்தான் நினைப்பு வந்தது!" என்று கிளம்பிய பாலுவை, கங்காணியும் அவன் தந்தையும் வியப்போடு பார்த்தனர். அவன் கண்களை மூடியிருந்த திரையைத் தாங்கள் விலக்கி விட்ட உண்மையை அவர்கள் எப்படி அறிவார்கள்?

பிருந்தாவனம்



அதிசயம் ஆனால் உண்மை!

நம்புவதற்கு கஷ்டமாய் இருக்கும். தீக்குச்சி கண்டு பிடிப்பதற்கு முன்னரே சிகரெட் லைட்டர் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. 1816 ஆம் ஆண்டு ஜே. டபிள்யூ டோபரெய்னர் என்பவர் தானாகவே நைட்ரஜன் வாயு தீப்பற்றிக் கொள்ள ஒரு வழியைக் கண்டு பிடித்தார். சிகரெட் லைட்டர் பிறந்தது.

ஹைதர் அலி ஆற்காட்டுக் கோட்டையில் உயிர் நீத்தார். ஆனால், அவர் மரணம் மக்களுக்கு அறிவிக்கப்பட வில்லை. உயிர் நீத்த ஹைதர் அலியை இரவில் பல்லாக்கில் தூக்கிக் கொண்டு மைசூர் சென்ற பின்னரே அறிவித்தார்கள்.


— என். நாகராஜன், தேனி.

உருளைக்கிழங்கு சிகிச்சை

* வேகவைத்த உருளைக் கிழங்கின் தோலைப் பொதுவாகக் குப்பையில் எறிந்து விடுகிறார்கள். ஆனால், அந்தத் தோல் தீக் காயம் அடைந்த நோயாளிகளுக்கு வலியில்லாத சிகிச்சை (டிரெஸிங்) சாதனமாக உதவுகிறது என்று தீக்காயங்கள் சிகிச்சை சம்பந்தப்பட்ட சர்வ தேச மாநாட்டில் இந்திய டாக்டர்கள் தெரிவித்தனர். வெந்த உருளைக் கிழங்கின் தோலை எடுத்துக் காயத்தில் கட்டுவது எளிது. காயக்கட்டை மாற்றும் போது இதனால் ரத்தம் கசிவதில்லை. வலியும் ஏற்படுவதில்லை.

இறக்குமதி செய்யபபட்ட சிகிச்சை சாதனங்களின் விலையைப் பார்க்கும்போது, உருளைக் கிழங்கு தோல் சிகிச்சை முறை பல மடங்கு மலிவானது!

— ஆர். சச்சிதானந்தம், நாமக்கல்.



ஈயிடம் தோற்றவர்

* இந்தியாவில் பெரும்பகுதியை வென்ற மாவீரன் அலெக்ஸாண்டர் தனது அறையிலே ஒரு நாள் ஏதோ சிந்தனையில் அமர்ந்திருந்தார். அப்போது அவரது மூக்கின் மேல் ஒரு "ஈ" வந்தமர்ந்தது. உடனே அதை தட்டி விட்டார். மீண்டும் அது மூக்கின் மேல் அமர்ந்தது. மறுபடியும் மறுபடியும் அவர் விரட்டியடிக்க அது அவரை விடுவதாக இல்லை! கோபத்துடன் "ஈ"யை நசுக்க எழுந்தார். அது பறந்து விட்டது. அவர் விடவில்லை. அதை நசுக்க அறை முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து ஒரு மேஜையில் இடித்துக் கொண்டார். தான் இவ்வளவு பெரிய ராஜ்யத்தைப் பிடித்தும் ஒரு ஈயிடம் தோற்று விட்டோமே என வருந்தினராம்.

— கே.ஜி. ராஜன், சீர்காழி.



கைக்குட்டையின் கதை

* இப்பொழுது நாம் பயன்படுத்தும் கைகுட்டைகள் சதுரமாக இருக்கின்றன. ஆனால் தொடக்க காலத்தில் கைகுட்டைகள் வட்டவடிவமாகத்தான் இருந்தன. எப்படி?

பிரான்சு நாட்டை 16 ஆம் லூயி மன்னர் ஆண்டு வந்தார். அவர் மனைவி மேரி ஒரு நாள் ரோஜாப்பூவைப் பறித்த போது, கையில் முள் குத்தி இரத்தம் வந்துவிட்டது. உடனே ஒரு வேலைக்காரி கைகுட்டையினால் காயத்தில் கட்டுப் போட்டாள். கைகுட்டை வட்டவடிவமாக இருந்ததால், கட்டு போட முடியவில்லை.

அன்றே மேரி, அரசரைச் சந்தித்து, நம் நாட்டில் யாரும் வட்டவடிவ கைகுட்டையைப் பயன்படுத்தக்கூடாது. இனி கைகுட்டைகளை சதுரமாகத்தான் தயாரிக்க வேண்டும் என்று கட்டளையிடும் படி கேட்டுக் கொண்டாள். அரசரும் அப்படியே ஆணையிட்டார்.

அது முதல் ச து ர கைகுட்டைகள் தோன்றின.

— புகழேந்தி, ஆறுபாதி.



குறிஞ்சி மலருக்குத் தாத்தா!

* 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்கின்ற 'குறிஞ்சி மலரை'ப்பற்றி அறிந்திருப்பீர்கள்!

ஆனால் 50 ஆண்டுக்கு ஒருமுறை மலர்கின்ற மலரை ஒன்றை அறிவீர்களா?

50 ஆண்டுக்கு ஒருமுறை மலர்கின்ற அதிசய மலரின் பெயர் "காக்டஸ்". இந்த மலர்கள் இந்தியப் பெருங்கடலில் காணப்படுகிறது.

— ஆறு. அண்ணாதுரை, மகாதானபுரம்.



நின்றால் குற்றம்!

* சயாம் நாட்டில் மாங்குட் என்ற அரசன் முன்னால் யாராவது நின்றால், மன்னன் அதைக் குற்றமாக மதித்து அவர்களைத் தண்டித்து விடுவான். அவனிடம் யாராவது பேச வேண்டுமென்றால் தரையில் தங்கள் கைகளால் ஊன்றி, முழங்கால்களால் தவழ்ந்து சென்றுதான் பேச வேண்டும்.

ஊர்ந்து சென்று அவனுக்குச் சேவகம் புரிந்த தொண்டர்கள் பலர், வளைந்த முழங்கால்களுடனும் முறிந்த முதுகுடனும் மாண்டு போனார்கள்.

— மு. மதிவாணன், அரூர்.



பலே பையன்!

* செருப்புக் கடைக்குச் சென்ற ஒருவர் ஒரு ஜோதை செருப்புகளை விலை பேசி எடுத்துக் கொண்டு, அதைக் கட்டித் தரும்படி சொன்னார். பிறகு செருப்புக் கடையில் வேலை செய்த பையனிடம் பாதிப் பணத்தைக் கொடுத்துவிட்டு, மீதியை நாளை வந்து தருவதாகக் கூறிவிட்டுச் சென்று விட்டார். அதற்கு அந்தப் பையனும் சரியென்று தலையசைத்தான்.

அப்போது அங்கு வந்த கடை முதலாளி, "என்னப்பா? அவர் சென்று விட்டார். நாளைக்கு அவர் வருவார் என்று என்ன நிச்சயம்?" என்று கேட்டார்.

'கட்டாயம் நாளைக்கு வருவார். நான் ஒரு ஜோதை வலது கால் செருப்பைத்தானே கட்டிக் கொடுத்திருக்கிறேன்,' என்று அந்த வேலைக்காரப் பையன் கூறினான்.

— தா. ஷேக் உசேன், செஞ்சி.



செஸ் தெரியுமா?

* செஸ் (Chess) விளையாட்டை நீங்கள் அறிந்திருக்கலாம். Chess என்ற சொல்லின் விரிவாக்கம் தெரியுமா உங்களுக்கு?

Chariot
Horse
Elephants
Soldiers

இந்த வார்த்தைகளின் சுருக்கம் தான் செஸ் (Chess).

— ஆறு. அண்ணாதுரை, மகாதானபுரம்.

அப்பாவை அழைத்து வா!

கமலவேலன்

காட்சி — 1

(காலை நேரம். அசோக்கின் வீடு.

அப்பா செய்தித்தாள் படிக்க அம்மா காய்கறி நறுக்கிக் கொண்டிருக்கிறாள். அசோக் பாடம் படித்துக் கொண்டிருக்கிறான்.)

அசோக்: அம்மா.... இன்னிக்காவது அப்பாவை ஸ்கூலுக்கு வரச் சொல்லுங்க அம்மா.

அப்பா: குளிக்க வென்னிர் ரெடியா...? நேரமாச்சு.

அம்மா: கொஞ்சமாவது நீங்க வீட்டுக் கஷ்டங்களைக் காதில் போட்டுக்கறீங்களா?

அப்பா: ஆச்சா! காலையிலேயே ஆரம்பிச்சுட்டியா.? இன்னிக்கு ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன் இருக்கு. இன்னிக்காவது சீக்கிரம்போகணும்னு டிரை பண்றேன்.

அம்மா: ஆமா... என்னிக்குதான் உங்களுக்கு ஆபீஸ்ல வேலை இல்லே? வீடு எக்கேடு கெட்டுப் போனா உங்களுக்கென்ன?

அப்பா: அஞ்சுகம். அழ ஆரம்பிச்சுடாதே. சரியான குட்டிச்சாத்தான் மகனா வந்து அவதாரம் பண்ணியிருக்கு. எல்லாம் இந்தச் சனியனாலே வரும் வினை.

அம்மா: இங்க... பாருங்க அசோக்கை ஏதாச்சும் திட்டினீங்க, எனக்கு கெட்ட கோபம் வரும்.

அப்பா: ஐய்யய்யோ! இப்ப என்ன செய்யணுங்கறே..? அதைச் சொல்லு.

அம்மா:- நம்ம பையன் அசோக், ஐஞ்சாவது ராங்க்ல இருந்து இப்போ பதினைஞ்சாவது ராங்குக்கு போயிட்டான். அதனால அவங்க வகுப்பாசிரியர் உங்களை நேர்ல வந்து பார்க்கச் சொல்லியிருக்கார். அசோக்கும் சொல்லிச் சொல்லி அலுத்துட்டான்.

அப்பா: அஞ்சாவது ராங்க்ல இருந்து பதினைஞ்சாவது ராங்குக்கு வந்துட்டானேன்னு நீ உருகிப் போயிடாதே! அவனைப் பற்றின கவலையை விடு. எப்படியோ பாஸ் ஆயிடுவான்.

அசோக்: இல்லைப்பா, எங்க சார் உங்களைக் கையோடு அழைச்சிட்டு வரச் சொன்னாரு.

அப்பா: அடப் போடா. எனக்குத் தலைக்கு மேலே வேலை இருக்கு. இப்ப வர முடியாது.

அம்மா: என் தலையெழுத்து.

அப்பா: தலையெழுத்துன்னு புலம்பாத... உங்க ரெண்டு பேரோடையும் எனக்குப் பெரிய கழுத்தறுப்பாய்ப் போச்சு.

அம்மா: அவன் நல்லாப் படிச்சு.. இஞ்சினியரா, டாக்டரா வரணும்னு நான் கனவு காண்றேன். அவன் ரொம்பப் பாடங்களிலே வீக்கா இருக்கானாம். அதனாலதான் அவங்க சார் உங்களை நேரில வரச் சொல்றாரு.

அப்பா: (கேலிச்சிரிப்புடன்) வீக்.... ஆ! எனக்கு புரிஞ்சு போச்சு. வேணும்னே மார்க்கைக் குறைச்சு வீக்குன்னு சொல்லி பயம் காட்றாங்க.

அம்மா: மார்க்கைக் குறைக்கிறதால் அவருக்கு என்ன லாபம்?

அப்பா: லாபம் நிறைய இருக்கு. இது ஒரு டெக்னிக். வீக்குன்னு சொன்னா பையன் டியூஷன் சேருவான். ஆசிரியர்கள் பண வரவுக்காக மாணவர்களுக்கு விரிக்கிற வலைதான் டியூஷன். நான் இதுல சிக்க மாட்டேன்.



அசோக்: அப்பா எனக்கு போர்டுல எழுதுறதே தெரியமாட்டேங்குதுப்பா.

அப்பா: புரியும்படியா எழுதிட்டா டியூஷன் சேர்க்கறது எப்படி? அப்பத்தானே உன்ன வீக்குன்னு சொல்ல முடியும்?

அம்மா: எல்லாரையும் ஊங்களை மாதிரியே நினைக்காதீங்க.

அப்பா: (கோபமாக) அசோக்குக்குத் தெரியலேன்னா என்னிடம் கேட்கட்டும். எது வேண்டுமானாலும் நான் சொல்லித்தறேன்.

அசோக்: அப்பா மறந்தே போயிட்டேன். எனக்கு ஒரு கணக்கு சரியாத் தெரியலே. சொல்லிக் குடுங்க.

அப்பா: (அலட்சியமாக) கணக்கை வாசிடா.

அசோக்: 4 ஆண்கள் 3 பெண்கள் நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் வேலை செய்து 12 ஹெக்டேர் நிலத்தையும் 16 நாட்களில் சமப்படுத்த முடியும்.

அப்பா: 4 ஆண்களும் 3 பெண்களும்... ஏண்டா ஆண்கள் மட்டும் நிலத்தை சமப்படுத்தினா போதாதா? ஏண்டா என் உயிர வாங்கிற?

அம்மா: அசோக்... ஏன் கணக்கல மோசமா இருக்கான்னு இப்பத்தான் எனக்கு புரியுது.

அப்பா: ரொம்பத் துள்ளாதே. டேய். கணக்கை குளிச்சிட்டு வந்து பார்ப்போமா? அப்புறம் வெந்நீர் ஆறிரும். வரலாறு, புவி இயல்னு அதுல ஏதும் சந்தேகம் இருந்தாக் கேளு.

அசோக்: நமக்கு மிக அருகில் உள்ள கோள் வியாழனா வெள்ளியா?

அப்பா: அடச்சி சனி...

அம்மா: ஐயோ அசடு வழியுது. போய்க் குளிச்சிட்டு வாங்க.

அப்பா: குளிச்சிட்டு ஃப்ரெஷ்ஷா வந்து பதில் சொல்றேன்டா சனியனே!

அசோக்: ஏம்பா குளியலறை சுவற்றில் ஏதாவது பதில் எழுதி ஒட்டிருக்கா?

அம்மா: இத பாருங்க. புத்திசாலித்தனமா அவங்க ஆசிரியரைப் பார்த்து எந்தப் பாடத்துல வீக்குன்னு கேட்டு அதுக்கு டியூஷன் வெச்சுட்டு வந்து சேருங்க. அவ்வளவுதான் நான்



சொல்லுவேன்.

அப்பா: சரி..... சரி....

காட்சி — 2

(மாலையில் பள்ளி விட்ட பிறகு வகுப்பறை. ஆசிரியர் அமர்ந்திருக்க அசோக்கின் அப்பா வருகிறார்.)

அப்பா: குட்மார்னிங் சார். நான் அசோக்கின் அப்பா. அவன் ஐந்தாவது ராங்கல இருந்து 15க்கு வந்துட்டான். ரொம்ப வீக்கா இருக்கான்னு வந்து பார்க்கச் சொன்னீங்களாம்.

ஆசிரியர்: நிச்சயமா.. வீக்காத் தான் இருக்கான். ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் பெயில் ஆயிருந்தா அதுல தீவிர கவனம் செலுத்தித் தேத்திடலாம். ஆனா, அசோக் 5 பாடங்களிலும் கணிசமா மார்க்கு குறைஞ்சு எடுத்துருக்கான். காரணம் என்னவாயிருக்கும்னு உங்களுக்குத் தொணுதா?

அப்பா: அதுக்குத்தானே சார் நீங்கெல்லாம் இருக்கீங்க.

ஆசிரியர்: ஓ அப்படியா!

அப்பா: சுத்தி வளைச்சு ஏன் பேசறீங்க? வீக்-ன்னு சொன்னா உங்க அகராதிப் படி.. டியூஷன்னு தானே அர்த்தம்? நீங்க அவனுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்க. நான் புறப்படறேன்.

(செல்ல முயல்கிறார்)

ஆசிரியர்: சார்.. கொஞ்சம் நில்லுங்க. செய்தியை முழுசா தெரிசுக்காம நீங்களா ஒரு முடிவுக்கு வந்தா எப்படி?

அப்பா: ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன் வேலை தலைக்கு மேலே இருக்கு.

ஆசிரியர்: நீங்க ஆபீஸ் போறது.. சம்பாதிக்கிறது எல்லாமே உங்க குடும்பத்தினர், அதாவது பையன் அசோக் உட்பட அவர்களது நன்மைக்காகத் தானே!... கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதை கேட்டா... உங்களுக்கும் நல்லது, உங்க பையனுக்கும் உருப்படியா ஒரு நன்மை உண்டான மாதிரி இருக்கும்.

அப்பா: என்ன சார் செய்யனும் சீக்கிரம் சொல்லுங்க?

ஆசிரியர்: உங்க பையன் படிப்பில் வீக்-ஆப் போனதுக்கு காரணம். அவன் படிக்கிறதுல குறையில்ல; நாங்க சொல்லித்தர்றதுலேயும் குறை இல்லை!

அப்பா: அப்படீன்னா வேறு எதுல தான் குறை சார்?

ஆசிரியர்: அவனால், ஆசிரியர் போர்டுல எழுதற்றைத் தெளிவாப் படிக்க முடியல!

அப்பா: (அதிர்ந்து) சார் என்ன சொல்றீங்க?

ஆசிரியர்: ஆமாம் அவனுக்குக் கிட்டப் பார்வை இருக்கு. அதனால போர்டுல நாங்க எழுதுறதை வாசிக்க ரொம்பக் கஷ்டப்படுறான். பக்கத்துல இருக்கிறவனைப் பார்த்துப் பார்த்து எழுதறான். அதனால அவனுக்கு நேரம் அதிகமாகுது. நீங்க உடனே அவன் கண்ணை டெஸ்ட் பண்ணி கண்ணாடி போடுங்க. இல்லென்னா நல்லாப் படிக்கிற பையன வீணாக்கின பாவம் நம்ம ரெண்டு பேரைத்தான் வந்து சேரும். இதை விவரமா சொல்லத்தான் உங்களைப் பள்ளிக்கு வரச் சொன்னேன்.

அப்பா: (நெகிழ்ச்சியுடன்)... சார்.. காரணத்தை சரியாப் புரிஞ்சுக்காம நான் உங்களைப் பத்தித் தப்புக் கணக்குப் போட்டுட்டேன்.

ஆசிரியர்: பரவாயில்லை. தப்பா போடுற கணக்கையெல்லாம் திருத்தறதுதானே ஆசிரியர் வேலை?

அப்பா: ரொம்ப நன்றி சார்... இன்னிக்கே... என் பையனுக்கு கண் டெஸ்ட் பண்ணி கண்ணாடி போட்டுடறேன். (புறப்படுகிறார்).

ஆசிரியர்: சார் ஒரு நிமிஷம். நீங்க விரும்பினால்... உங்களுக்கு இதில் உதவி செய்ய நான் தயார். இந்த ஊர்ல இருக்கிற புகழ் பெற்ற கண் டாக்டர் என்னோட மாணவன். நான் வேணுமானால் அவனுக்குக் கடிதம் தரேன். என்கிட்டே அவனுக்கு தெய்வ விசுவாசம். எல்லா டெஸ்டையும் இலவசமாகவே செய்து கொடுத்துடுவான். கடிதம் தரட்டுமா?

அப்பா: போதும் சார்... என்னை வார்த்தையாலேயே கொல்லாதீங்க. உங்க எதிரில் நிக்கக் கூட அருகதை இல்லாதவன் நான்.... என்னை மன்னிச்சுடுங்க சார். நான் எல்லோரையும் ஒரே மாதிரி எண்ணிட்டேன். இந்த தேசத்தின் முன்னேற்றம் உங்களைப் போன்ற தன்னலமற்ற ஆசிரியர்களின் கைகளில்தான் இருக்கிறது. அதை நான் நல்லா உணர்ந்துகிட்டேன்.

ஆசிரியர்: தேசத்தின் முன்னேற்றம் என் கைகளிலோ இல்லை உங்கள் கைகளிலோ இல்லை. இந்த இளந்தளிர்கள் கைகளில்தான் உள்ளது. அதனாலே இந்த இளைய தலைமுறையைக் கனிவோடு பாதுகாக்க வேண்டியது வீட்டில் உங்க கடமை, பள்ளியில் எங்கள் கடமை. அதைச் செய்தால் போதும்.

அப்பா: ரொம்ப நன்றி சார்.



* பாங்காக் நகரில் வாட் பிரகரன் என்ற புத்தர் கோவிலில் 600 குரங்குகளுக்கு சைவ விருந்து வைக்கப்பட்டது. விருந்து வைத்தவர் ஒரு ஹோட்டல் முதலாளி. பாங்காக்கில் லாப்பூரி எனுமிடத்தில் இவருடைய ஹோட்டல் இருக்கிறது. அது வெற்றிகரமாக இயங்கி வருவதால் இத்தகைய விருந்தை அவர் அளித்தார். 50 குரங்குகள் மேஜைகளில் உட்கார்ந்து விருந்து உண்டன. இதற்கு ஆன செலவு மொத்தம் 5,76,000 ரூ ஆகும்.

— இந்திரா, கோபாலன்.



கதையை முடியுங்கள் – போட்டி!

பொன்னப்பர் சிறந்த அறிவாளி. இரக்க மனம் படைத்தவர். ஒருநாள் அடுத்த ஊரில் உள்ள தமது மகளைக் காணச் சென்றார். வழியில் ஓர் அடர்ந்த காடு.

காட்டில் திடீரென்று சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பொன்னப்பர் கவனமாக நடந்தார். மரங்கள் அடர்ந்திருந்த ஓர் இடத்தில் கம்பிகளால் ஆன மிகப் பெரிய கூண்டுக்குள் சிங்கம் ஒன்று சிக்கிக் கொண்டிருந்தது.

பொன்னப்பரைக் கண்டதும் சிங்கம் பரிதாபமாக அழைத்தது. அவரும் அருகில் சென்றார்.

''எந்தப் பாவியோ, பொறி வைத்து என்னைப் பிடித்துவிட்டான். என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. மூன்று குட்டிகள் வேறு. எல்லோரும் என் வரவை எதிர்பார்த்துப் பசியோடு காத்திருப்பார்கள்'' என்று அழுதது சிங்கம்.

பொன்னப்பர் இரக்கத்துடன் அதைப் பார்த்தார்.

''கூண்டைத் திறந்து விடுங்கள்.''

''ஐயோ, நீ என்னைத் தின்று விடுவாயே?'' என்று மறுத்தார் பொன்னப்பர்.

''கண்டிப்பாக மாட்டேன். சத்தியம். நான் நரசிம்ம அவதாரம் எடுத்த விலங்கல்லவா? சத்தியம் மீறமாட்டேன்'' என்று கெஞ்சியது சிங்கம்.

தெய்வ பக்தி மிகுந்த பொன்னப்பர் ஒரு கணம் கண்களை மூடி இறைவனை நினைத்தார். பிறகு கூண்டைத் திறந்து விட்டார்.

சிங்கம் வெளியே வந்தது. 'ஆவ்' என்று மிகப் பயங்கரமாக வாயைத் திறந்து மூடியது.

''பொன்னப்பரே, எனக்கு விடுதலை தந்ததற்காக நன்றி. ஆனால், நான் உங்களைத் தின்னப் போகிறேன். என்னால் பசியைத் தாங்க முடியவில்லை'' என்றது.

பொன்னப்பர் வாதாடினார்; கெஞ்சினார்; அழுது பார்த்தார். சிங்கம் இரங்கவில்லை.

இனிமேல் கதையை முடிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், பொன்னப்பர் சிறந்த அறிவாளி. தெய்வ பக்தி மிக்கவர். உறையின் மேல் 'கதையை முடியுங்கள் — போட்டி' என்று எழுதியனுப்பவும்.

பரிசு கண்டிப்பாக உண்டு! கூப்பனை மறக்க வேண்டாம்!

கதையை முடியுங்கள் — போட்டி

பெயர் : ....

முகவரி: ....

....

....

....

....

பின்கோடு: ....

முடிவு தேதி: 15.3.91

அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32.

ஸ்போர்ட்ஸ் — 1

வெற்றிக்கு உதவும் வேகப் பந்து வீச்சாளர்கள்!

கிரிக்கெட் ஆட்டத்தில் 'ஃபாஸ்ட் பௌலர்ஸ்' என்ற விரைவுப் பந்து வீச்சாளர்களின் திறமை, ஆட்டத்தின் வெற்றி தோல்வியை முடிவு செய்ய உதவக் கூடிய ஒன்றாக மாறி வருகிறது.

என்றைக்குமே விரைவுப் பந்து வீச்சாளர்களுக்குத் தனி மதிப்பு இருந்து வந்திருக்கிறது. உலகப் புகழ் பெற்ற வில்பர்ட் ரோட்ஸுக்கு வேடிக்கையான பழக்கம் உண்டு. கிரிக்கெட் மைதானத்தில் விசித்திரமான சேஷ்டைகளைச் செய்து காட்டுவார். பௌலருக்கு எதிராகத் தமது இடது காலை உயர்த்திக் கொண்டு நிற்பார்! ஃபாஸ்ட் பௌலர் லார்வுட்டுக்குக் கோபம் வராமல் இருக்குமா? அவருக்கு ஆத்திரமான ஆத்திரம்.

'இந்த ரோட்ஸின் பாதத்தை என்ன பண்ணுகிறேன் பார்!' என்று அருகிலிருந்த அம்பயர் செஸ்டரிடம் உறுமிய லார்வுட், தமது ராட்சசப் பந்து வீச்சின் வேகத்தைக் காட்டினார். ரோட்ஸ், கால் வலி பொறுக்க முடியாது துடித்தார்!

அந்த நேரம் பார்த்து அம்பயர் செஸ்டர், ''மிஸ்டர் ரோட்ஸ், நீங்கள் நலம்தானே?'' என்று கேட்டார்.

''ஆமாம், நலமே'' என்று முனகினார் ரோட்ஸ்.

''தங்களால் நடக்க முடியுமா?'' என்று விடாது கேட்டார் செஸ்டர்.

''ஓ'' என்று பதிலளித்தார் ரோட்ஸ். செஸ்டர் எதற்காக இப்படிக் கேட்கிறார் என்பதை அவர்



* பந்துக்குள் என்ன இரகசியமோ?

— பயிற்சியாளர்களுடன் டென்னிஸ் லில்லி

உணரவில்லை.

''அப்படியானால், நீங்கள் நடக்கலாம். ஆனால், நீங்கள் எல் பி டபிள்யூ: அவுட்'' என்றாரே பார்க்கலாம் செஸ்டர்!

யாருமே மறக்க முடியாத ஃபாஸ்ட் பௌலர் எம். ஸி. ஸி. குழுவின் கிளார்க். சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் மேட்ச் நடந்து கொண்டிருக்கிறது. கிளார்க்கின் பந்து வீச்சுக்கு இலக்கான நியோமல், முகத்தில் அடிபட்டு, பெவிலியனுக்குப் போய் விடுகிறார். இந்தப் பயங்கரப் பந்து வீச்சைக் கண்டு, பார்வையாளர்களுக்கு கிளார்க்கின் மேல் ஒரே ஆத்திரம். தீவிர விசிறிகளில் ஒருவர் கிளார்க்கை நோக்கி ஒரு கல்லை அடித்தார். நல்ல காலம், யாருக்கும் ஒன்றும் ஆகவில்லை.

ஓவர் முடிந்தது. 'மூன்றாவது மனிதன்' இடத்தை நோக்கி வந்த கிளார்க், மைதானத்தில் கிடந்த அந்தக் கல்லை எடுத்தார். கிளார்க் உணர்ச்சிமிக்க பௌலர் என்ற பெயரெடுத்தவர். எல்லோரும் என்ன நடக்கப் போகிறதோ என்று பதைபதைப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் கல்லை எடுத்துக் கொண்டு நடந்தார். பௌண்டரி எல்லையைக் கடந்து எல்லைக்கு வெளியே அதை வைத்து விட்டுப் பேசாமல் திரும்பினார்! எல்லோரும் மூச்சு விட்டனர்.


இந்தியாவில் கபில்தேவ் போல், விரல் விட்டு எண்ணக்கூடிய விரைவுப் பந்து வீச்சாளர்களே உள்ளனர். கிரிக்கெட் குழுவின் திறமையைக் கூட்ட, அதிக அளவிலான விரைவுப் பந்தாட்டக்காரர்களின் தேவை உணரப் பட்டாலும், இவர்களை உருவாக்குவதில் பல நடைமுறை சிரமங்கள் இருந்தன. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, எம். ஆர். எஃப். நிறுவனம் ஒரு திட்டத்தைத் தீட்டியது.

இதன்படி, ஃபாஸ்ட் பௌலராகக் கூடிய திறமைமிக்க இளைஞர்களை நாடெங்கிலும் இருந்து எம். ஆர். எஃப். நிறுவனம் தேர்ந்தெடுத்தது. விரைவுப் பந்து வீச்சில் முன்னணியில் உள்ள ஆஸ்திரேலியாவின டென்னிஸ் லில்லியை அழைத்து வந்து, இவர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது.



* பயிற்சி நடக்கிறது.

பயிற்சி அளிக்கப்படும் இடம் சென்னை சேத்துப்பட்டில், கிறித்துவக் கல்லூரிப் பள்ளியின் பசும்புல் மைதானம். இரண்டாள் உயரத்திற்கு வலைகள் கட்டப்பட்ட இந்தப் பயிற்சிக் களத்தில், டென்னிஸ் லில்லியின் நேரடிப் பயிற்சியில், இந்தியாவின் சிறந்த எதிர்கால ஃபாஸ்ட் பௌலர்கள் உருவாகி வருகிறார்கள். இந்தப் பயிற்சியாளர்களுக்கென இப் பள்ளியிலேயே ஜிம்னாசியக் கட்டடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் வசதியாகத் தங்க அண்ணா நகரில் ஒரு பங்களா எல்லா வசதிகளோடும் தரப்பட்டுள்ளது. பயிற்சி மைதானத்தி



* பயிற்சியாளர்களுக்கான நீச்சல் குளம்.

படங்கள்: கே. நாராயணச்சாரி.

லேயே இவர்களுக்காக ஒரு நீச்சல் குளமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய விரைவுப் பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சி தருவதுடன், உலகெங்கும் உள்ள ஜூனியர் ஃபாஸ்ட் பௌலர்களையும் தேர்ந்தெடுத்து, பயிற்சி கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் எம். ஆர். எஃப். நிறுவனத்தார். பேஸ் (PACE) ஃபௌண்டேஷன், உலக அளவில் விரைவுப் பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் தருவதால், இங்கே பயிற்சி பெறுபவர்களுக்கு, சர்வதேசத் திறமையாளர்களோடு பழகி, நெளிவு சுளிவுகளை அறிந்து, தங்கள் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடிய அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதை இவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.


பயிற்சியளித்து வரும் டென்னிஸ் லில்லிக்கு, பயிற்சி பெற்று வரும் இந்திய ஜூனியர் ஃபாஸ்ட் பௌலர்களின் திறமையில் உறுதியான நம்பிக்கை இருக்கிறது. இதில் சிறந்து விளங்க, உடல் வலிமையோடு, மன வலிமையும் இன்றியமையாதது என்கிறார் டென்னிஸ் லில்லி.

ஸ்போர்ட்ஸ் — 2

மோட்டார் ரேஸ்

சர்வதேச மோட்டார் பந்தயம் தொடங்கப்பட்டதற்குக் காரணம், எந்தத் தயாரிப்பாளரது கார் மிகவும் உறுதியானது; மிகவும் வேகமாக ஓடக்கூடியது என்பது குறித்த விவாதம் எழுந்ததுதான்! இப்படித் தோன்றிய 732 மைல் கார் பந்தயம், பாரீஸுக்கும் போர்டாக்ஸுக்குமிடையே நடைபெற்றது. இந்தப் பந்தயத்தில் ஒரு பிரெஞ்சு பான்கார்டு கார், மணிக்கு 15 மைல் வேகத்தில் ஓடிப் பரிசு பெற்றது!

ஐரோப்பாவில் 1900 வரை பல கார் பந்தயங்கள் நடத்தப்பட்டு நியூயார்க் ஹெரால்டு அதிபர் ஜேம்ஸ் கார்டன் பென்னட் பல தொடர்ச்சிப் பந்தயங்களுக்குப் பரிசாகக் கோப்பை வழங்க முன்வந்தார். 1906-ம் ஆண்டு வரை கார்டன் பென்னெட்டால் ஏற்பாடு செய்யப்பட்ட பந்தயங்களே நடைபெற்றன. ஆனால், பிரான்சிலுள்ள இந்தப் பந்தயங்களைப் புறக்கணிக்கத் தொடங்கி, தானே ஒரு போட்டியை 'கிராண்ட் ப்ரீ' என்ற பெயரில் ஆரம்பித்தது. முதல் உலகப் போர் வரை இந்தக் கிராண்ட் ப்ரீ பந்தயங்கள் நடத்தப்பட்டன. 'இண்டியானாபோலீஸ் 500' என்ற கார் பந்தயத்தைக் காண வந்த கூட்டத்தின் எண்ணிக்கை உலகில் ஒரு சாதனையைத் தோற்றுவித்தது. முதல் 'இண்டியானா போலீஸ் 500' போட்டியில் வென்ற முதல் வெற்றியாளர் என்ற



* ரேஸுக்கேற்ற வடிவுடன் ஒரு கார்.

பெருமைக்கு உரியவர் ரேஹூரூஸ்.

பெரும்பாலும் கார் பந்தயங்கள் நடைபெறும் மைதானங்கள் வட்ட வடிவமாக அமைந்திருக்கும். இந்த ரேஸ் மைதானத்தில் பந்தயக் கார்கள் தங்களுக்குரிய பெட்ரோலை நிரப்பிக் கொள்வதற்குரிய இடம் 'பிட்' (Pit) என்று குறிப்பிடப்படுகிறது. இந்தப் 'பிட்'டில், தேர்ந்த கார் ரிப்பேர் வல்லுநர்கள் டயர்களை மாற்றுவதோ, சிறிய ரிப்பேர் செய்து தரவோ காத்திருப்பார்கள். 'பிட்'டிலேயே அதிக நேரத்தைக் கழிக்க நேரும் ரேஸ் கார் வீரர்கள் பந்தயத்தையே இழந்து விட நேர்வதுண்டு.

கார் ரேஸ் பயங்கர விளையாட்டுத்தான்! ஆனால், அதிலுள்ள ஆபத்துக்களை நீக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கார் ரேஸ் டிரைவர்கள் பயங்கர விபத்துக்காளாகாது தவிர்க்க, அவர்கள் கார் ஹெல்மட் அணிவதுண்டு. இது தவிர தீப் பிடிக்காத உடையைத் தலையிலிருந்து பாதம் வரை அணிவர். முகத்துக்கு முகமூடியும் உண்டு. ஒரு ரேஸ் கார் வாங்குவதற்கு ஏராள பணம் தேவைப்படும். அதனால், புரொபஷனல் கார் பந்தய வீரர்கள் தங்களுக்கு என 'ஸ்பான்சர்' ஆதரவாளர்களைத் தேடிக் கொள்வார்கள்.

உலகில் சர்வதேச கார் ரேஸ் கழகம் 90 நாடுகளுக்கிடையே பந்தயங்களை நிர்வகித்து வருகிறது. சர்வதேச கார் பந்தயக் கழகத் தலைமையகம் பாரீஸில் இயங்குகிறது. ஓர் ஆண்டில் கிராண்ட்ப்ரீ பந்தயங்களில் அதிக மதிப்பெண் பெறும் டிரைவர் உலக சாம்பியன் விருதைப் பெறுகிறார்.

கார் ரேஸ் 1890ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முதல் கார் ரேஸ் திறந்தவெளிகளில் இரு நகரங்களுக்கிடையேயுள்ள ரோடுகளில் நடைபெற்றது. பங்கு கொள்வோர் தங்கள் கார்களை வேகமாக ஓட்டுவதால் கண்ட்ரோல் இழந்து மோதிக்கொள்வதுண்டு. ரேஸ் கார்கள் சில சமயங்களில் பார்வையாளர்களைக் கூடத் தாக்கியுள்ளன! பிரான்ஸில் 1895 ஆம் ஆண்டில் பிரான்ஸ் கார் ரேஸ் கழகம் தோன்றியது. 1986ம் ஆண்டு நடைபெற்ற கிராண்ட் ப்ரீ உலகக் கார் பந்தயத்தில் பிரான்சைச் சேர்ந்த கலெய்ன் ப்ராஸ்ட் வெற்றி பெற்றார்.

கார் ரேஸில் மகளிரும் பங்கேற்றிருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த ஜானெட் கத்ரி 'இண்டியனா போலிஸ் 500' பந்தயத்தில் கலந்து கொண்ட பெருமைக்குரிய முதல் பெண்மணி. 1978ல் நடைபெற்ற அந்தப் பந்தயத்தில் ஒன்பதாவது இடம் அவருக்குக் கிடைத்தது. ஷெர்லி முல்டௌனி வின்ஸ்டன் உலக சாம்பியன் போட்டியில் மூன்று முறை (1977, 1980, 1982) வெற்றி பெற்ற வீராங்கனை.

தமிழகத்தில் மெட்ராஸ் மோட்டார் கிளப்' தனது முப்பத்தி நான்

காவது கார் பந்தயத்தை இருங்காட்டுக் கோட்டையில் நடத்தியது.

1952 ஆம் ஆண்டு சென்னை துறைமுகத்தில் 1948 மாடல் இரு கதவுகள் கொண்ட கார் இங்கிலாந்திலிருந்து வந்து இறங்கியது. இந்தக் காரின் உரிமையாளர் ஆர். டி. சௌசா. இதை வைத்துத் தோன்றியதுதான் மோட்டார் ரேஸ் கிளப்பும் கார்ப் பந்தயமும். 1953 ஆம் ஆண்டு சென்னை காமெண்டர் இன்சிப் ரோட்டிலிருந்து ஜியார்ஜ் டவுன் ஆர்மினியத் தெருவுக்கு இரு எம். ஜி. கார்கள் பறந்தன. இந்தக் கார்களை ஓட்டியவர்கள் ஆங்கில கார் பந்தய வீரர் ரெக்ஸ் ஸ்ட்ராங்கும், இந்திய கார் பந்தய வீரர் கே. வர்கீஸும்தான்! அவர்கள் நடத்திய முதல் கார் பந்தயம் மோட்டார் ஸ்காவன்சர் போட்டியாகும். வெற்றி பெற்றவர் காஸிம் கலீல். இந்தப் பரிசளிப்பு விழாவில்தான் முதல் மோட்டார் ரேஸ் கிளப் உருவாவதற்கான அறிக்கை முடிவாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. திரு. எம். ஏ. சிதம்பரமும் எஸ். வி. பி. சாவும் மோட்டார் ரேஸ் கிளப்புக்கான சட்ட திட்டங்களை வகுத்துப் பதிவு செய்து வைத்தனர்.


இரண்டாம் உலகப் போரின் போது அமைக்கப்பட்ட சோழவரம் விமான தளம் பயன்படாது கிடந்தது. இந்த இடத்தை மோட்டார் பந்தயங்கள் நடத்தும் களமாகப் பயன்படுத்தினர்! 1953 ஆகஸ்டில் இரு வகை கார்களுக்கான பந்தயங்கள் சோழவரத்தில் துவக்கப்பட்டன. ஒரு மைல் பந்தயத்தில் மோட்டார் ரேஸ் கிளப் தலைவர் டோனர் தமது மார்க் ஜாகுவர் காரை மணிக்கு 84 மைல் வேகத்தில் ஓட்டிச் சென்றார்.


மெட்ராஸ் மோட்டார் கிளப் ஆறு கோடி ரூபாய் செலவில் ஸ்ரீபெரும்புதூருக்குக்கருகிலுள்ள இருங்காட்டுக் கோட்டையில் உலகப் பந்தயத் தரத்துக்கு ஏற்றதாக பந்தய மைதானத்தைத் தயாரித்து அளித்துள்ளது. 250 ஏக்கர் பரப்பளவுள்ள இந்தக் கார் ரேஸ் மைதானம் இன்று பந்தயங்களைச் சிறப்பாக நடத்தப் பயன்பட்டு வருகிறது. இருங்காட்டுக் கோட்டைப் பந்தய மைதானத்தில் நவீன கண்ட்ரோல் டவர் அமைக்கப்பட்டு, நேரக் கணக்கிடும் நவீன கம்ப்யூட்டர் கருவியுடன் இயங்கி வருகிறது.

அமெரிக்காவில் அதிக வருவாய் கிடைக்கும் வேலை தீயணைக்கும் பணியும், அதற்கு அடுத்தது கார் ரேஸ் பந்தய டிரைவர் பணியும்தான் என்பார்கள் வேடிக்கையாக!

இந்தியாவில் 1903ல் கார்கள் இறக்குமதி ஆயின. ஒரு சில கார்கள் வந்திறங்கியதும் மகாராஜாக்கள்

* மோட்டார் சைக்கிள் ரேஸும் உண்டு.





* இருங்காட்டுக் கோட்டையில் பந்தயக் கார்கள்.

படங்கள்: ரமணன்

அவற்றை வாங்கினர். கார்களைப் பிரபலமாக்கப் பம்பாயிலிருந்து டில்லி வரை 810 மைல் தூரத்துக்கு கார் பந்தயம் நடத்தப்பட்டது. வைஸராய் லார்ட் கர்ஸானும் பம்பாய் கவர்னர் லார்ட் கிச்சனரும் இதற்கு அனுமதியளித்து ஊக்கமளித்தனர். பரோடா மன்னர் கெய்க்வார் ஒரு விலையுயர்ந்த கோப்பையைப் பரிசாகத் தர முன்வந்தார். கெய்க்வார் கோப்பைப் பந்தயத்தில் கிடைத்த பத்தாயிரம் ரூபாய் வருவாய், நதிகளில் தாற்காலிகப் பாலங்கள் கட்டித் தரும் நற்பணிகளுக்கு உதவியது. 1904 ஆம் ஆண்டு டில்லிக்கும் பம்பாய்க்கும் இடையே நடைபெற்ற கார்ப் பந்தயத்தில் முப்பத்தி மூன்று கார்கள் கலந்து கொண்டன. ஆனால் 21 கார்களே பம்பாயை வந்தடைந்தன! கார் டயர் பஞ்சரானதால் சில கார்கள் நின்று கொண்டன! கெய்க்வார் கோப்பை ஆங்கிலேயரல்லாத ஒருவருக்குக் கிடைக்கவே ஆண்ட ஆங்கில அதிகாரிகள் தங்களுக்கே பரிசு கிடைக்க வேண்டும் என்று புதுப் பிரச்னையைத் தோற்றுவித்தனர்! இதன் விளைவு, கார் ரேஸ் கிளப் செயலர் தனது பதவியை இராஜினாமா செய்யும்படி ஆயிற்று!

முதல் அகில இந்திய கார்ப் பந்தயம் 1957 பிப்ரவரி 17 ஆம் தேதி நடைபெற்று அதில் இலங்கையிலிருந்தும் பந்தயக்காரர்கள் பங்கேற்றனர். மோட்டார் சைக்கிள் ஜாக்கி பந்தய வீரர் டீன், அற்புதமாகத் தனது திறமைகளைக் காட்டி அனைவரையும் மகிழ்வித்தார்! மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் இளம் வயதில் பங்கேற்ற இலங்கையின் ராஜா சின்னதுரை முதல் முயற்சியில் வெற்றி பெற்றார்! ஹரிராவ், ஹரிஹரன் ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் மக்களை அதிகம் கவர்ந்தவர்கள்.

ஈராக் போர் தொடங்கியுள்ள இந்த நேரத்தில் எரிவாயு எண்ணெய் பற்றாக்குறை கடுமையாகத் தோன்றியுள்ளபோதிலும் இத்தகைய கார் பந்தயங்கள் தேவை என்கிறார்கள். 1991 சுற்றுலா ஆண்டு என்பதால் இதன் வளர்ச்சிக்கு கார் பந்தயங்கள் அதிக அளவில் பயன்படும் என்று விளக்கம் கூறுகிறார் சென்னை மோட்டார் பந்தயக் கழகத்தின் தலைவர் திரு. முத்து கிருஷ்ணன். ஆயினும் போர் காரணமாக இவ்வாண்டு மோட்டார் பந்தயங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.



தபால்தலை சேகரிப்பை அரசர்களுக்கான பொழுது போக்கு என்று கூறுவார்கள். பல துறை செல்வாக்கும், வசதியும் இருந்தால்தான் இந்தச் சேகரிப்பைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதே இதன் பொருள். ஆனால் ஊக்கமும், விடா முயற்சியும், நண்பர்களது ஒத்துழைப்பும் இருந்து விட்டால், இதுவும் கூடக் கடினமானதல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறான் சேலத்தைச் சேர்ந்த ஒன்பதாவது பயிலும் சிறுவன் ஒருவன். இவன் பெயர் மணிகண்டன்.

மணிகண்டனின் தந்தை கோவிந்தன் சாதாரண இனத் தொழிலாளி. பெரிய கஷ்டப்படும் குடும்பம். இருந்தும், எப்படி மணிகண்டனால் இந்தச் சாதனையைச் செய்ய முடிந்துள்ளது?

அதை நான் தொடர்ந்தேன். நண்பர்களும், ஆசிரியர்களும் உதவினாங்க. என் சேகரிப்பு பெருகியது'' — என்கிறான் மணிகண்டன்.

அதைப்பற்றி விவரமாச் சொல்லேன்!''

''வானொலியில் பேனா நண்பர்களைப் பற்றியும், தபால்தலை சேகரிப்பது பற்றியும், அவங்க முகவரியோட சொன்னாங்க. அதுல அயல்நாட்டு முகவரி கூட வரும். அதையெல்லாம் கேட்டுத் தவறாமல் குறிச்சுப்பேன். அவங்களுக்கு இரண்டு இந்திய தபால்தலைகளை அனுப்பினால், பதிலுக்கு அவங்க, இரண்டு அயல்நாட்டுத் தபால்தலைகளை அனுப்புவாங்க. இவங்களோடு ஆங்கிலத்தில் கடிதம் எழுத என் வகுப்பாசிரியர் அனந்தசயனம் போன்றவர்கள் உதவினர். எங்க பள்ளித் தலைமை ஆசிரியர் சௌந்தரராஜன் அவர்கள் என்னுடைய சேகரிப்பைப் பார்த்து என்னைப் பாராட்டி ஒரு நற்சான்றிதழைத் தந்திருக்கிறார். அதோட எங்களர் கலெக்டர் கர்ஜீத் சிங் சௌத்ரி அவர்களும் எனது சேகரிப்பையும், ஆர்வத்தையும், பாராட்டி ஒரு நற்சான்றிதழ் தந்திருக்கிறார்! என்றான் மணிகண்டன்.

குடியரசுத் தலைவரிடமும் இவன் நற்சான்றிதழ் பெற்றிருக்கிறான்.

உலக நாடுகள் பலவற்றின் தபால் தலைகளை மணிகண்டனின் தொகுப்பில் கண்டு வியந்தோம். ''ஆர்வத்தையும், பொழுதையும் இதுலேயே கழித்து விட்டுப் படிப்பைக் கோட்டை விடுபவனாக இருப்பானோ?''

''வகுப்பில் நான் முதல் ஐந்து மாணவர்களுள் ஒருவன்'' என்று சிரித்த மணிகண்டன், ''டில்லிக்குப் போக வேண்டும். பாரதப் பிரதமரைச் சந்தித்து எனது சேகரிப்பைக் காட்டி, நற்சான்றிதழ் பெற வேண்டும் என்பது தான் எனது ஆசை'' என்றான்.

மணிகண்டனின் விடா முயற்சியைக் காணும் போது, இவன் விரும்பியதைப் பெறும் அந்த நல்ல நாள் தொலைவில் இல்லை' என்றே தோன்றியது.

படம் இங்கே கதை எங்கே? — போட்டி முடிவு

இந்தப் போட்டிக்கு வந்த எண்ணூறுக்கும் மேற்பட்ட கதைகளைப் படித்து முடிவு செய்யும் பணி இதுவரை இல்லாத அளவுக்குக் கடினமாக இருந்தது. பங்கு கொண்டவர்கள் எல்லோருமே மிக அழகாகத் தங்கள் கற்பனை வளத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

முதல் பரிசு ரூ 40/- பெறுபவர்:

என். விஜயன், புதுக்குடி,

தூத்துக்குடி.

இரண்டாவது பரிசு ரூ 25/- பெறுபவர்:

ஆர். ஷண்முகப் பிரியா, திருச்சி — 1.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள்.

படம் இங்கே கதை எங்கே? — போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

போதி மரம்

என். விஜயன்

பேருந்து ஆம்பூரில் நின்றது. இறங்கினேன். எனது தாத்தாவைப் பார்க்க வந்திருக்கிறேன். எனது தாத்தா, இந்தக் கிராமத்திலேயே பெரிய ஜமீன்தார். இந்தக் கிராமத்தில் இருக்கும் நிலங்களில் முக்கால் வாசி அவருடையவைதான்.

''வாங்க ஐயா''. சத்தம் கேட்டுத் திரும்பினேன். வழக்கமான மாட்டு வண்டிக்காரன். தாத்தாதான் அனுப்பியிருக்கிறார்.

இந்த முறை ஆம்பூர் போரடிக்காது. சித்தப்பா பிள்ளைகளும் மதுரையிலிருந்து விடுமுறைக்கு வந்திருக்கிறார்கள். இன்னும் கேட்டால் பொழுது போதாது என்று கூடச் சொல்லலாம். அதிலும் சித்தப்பாவின் இரண்டாவது பையன் குமார் படுசுட்டி. கிரிக்கெட் தகவல்கள் அத்தனையும் அத்துபடி. போன முறை மதுரைக்குப் போன போது அவன் போட்ட 'க்விஸ்'சில் தோற்றது நினைப்பு வந்தது. அவனுக்காகவாவது ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேண்டுமே.

பெட்டியை வண்டிக்காரனிடம் கொடுத்து விட்டு, எதிரே தெரிந்த பெட்டிக் கடைக்குச் சென்றேன். கடை சின்னக் கடைதான். அதற்கு ஏற்ற அளவில் ஒரு சின்னப் பையன் உட்கார்ந்து துருதுருவென்று வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

'பிஸ்கெட் பாக்கெட் எவ்வளவு?' என்று கேட்டேன்.

'இரண்டரை ரூபாய்' என்றான்



அவன்.

இரண்டு பாக்கெட்டை எடுத்துக் கொண்டு, சட்டையில் மடித்து வைத்திருந்த ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தேன். பையன் வாங்கிக் கொண்டான். யாரோ அவனைக் கூப்பிட, சிறுவன் திரும்பிப் பார்த்தான். கடையில் வேறு யாருமில்லை. அந்த நேரத்தில் என்னையறியாது எனக்கு ஒரு ஈனமான ஆசை தோன்றியது. அவனுக்குத் தெரியாமல் இன்னொரு பிஸ்கட் பாக்கெட்டை எடுத்து மறைத்துக் கொண்டு வண்டிக்கு விரைந்தேன்.

எனக்குள்ளே ஒரு பெருமிதம். எவ்வளவு ஏமாளி இந்தப் பையன்! எனக்கு இரண்டரை ரூபாய் இலாபம். வண்டி கிளம்பியது. இந்த பிஸ்கெட் குமாருக்கு மிகவும் பிடிக்கும். வண்டியிலிருந்தபடியே கிராமத்தின் அழகை ரசித்தேன். மாட்டு வண்டியில் போவது எனக்கு மிகவும் பிடிக்கும். தற்செயலாகப் பின்னால் பார்த்தேன். அந்தக் கடைக்காரப் பையன் ஓடி வந்து கொண்டிருந்தான்!

காசு கொடுக்காது மூன்றாவது பிஸ்கெட் பாக்கெட்டை எடுத்தது தெரிந்து விட்டிருக்குமோ?

'வேகமாகப் போங்க' என்று வண்டிக்காரனை அவசரப்படுத்தினேன். வண்டி விரைந்தது. ஆனாலும் சிறுவன் 'நில்லுங்க நில்லுங்க' என்று கதறி ஏறத்தாழ வண்டியை நெருங்கிவிட்டான். வண்டி நின்றது. பையனும் நின்றான். ஓடி வந்ததில் அவனுக்கு மூச்சிரைத்தது.

"அண்ணே, இந்தாங்க மீதி ஐந்து ரூபா!" என்று நீட்டினான். கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தேன்.

"அண்ணே, நீங்க மடிச்சுத் தந்த ஐந்து ரூபாய்க்குள்ளே இன்னொரு ஐந்து ரூபாய் நோட்டு இருந்ததுங்க. இந்தாங்க ஐயா!" என்றான்.

எனக்கு யாரோ செவிட்டில் அறைந்தது போல இருந்தது.

"அதோட, நீங்க எடுத்த இரண்டு பிஸ்கெட் பாக்கெட்டுல, ஒன்று பழைய ஸ்டாக்கு. தேதியைப் பாருங்க. இதோ, புது பாக்கெட்டு. இதை எடுத்துக்கிட்டு அதைக் கொடுத்திடுங்க" என்று பிஸ்கெட் பாக்கெட்டைக் கொடுத்தான் சிறுவன்!

சின்னக் கடை, சின்னப் பையன்தான். ஆனால் சின்னத்தனம் இல்லை. நான் பெரிய இடம், பெரிய பையன்தான். ஆனால் சின்னத்தனம்!

'தம்பி என்னை மன்னித்து விடு!' என்று நான் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதது அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

இப்பொழுதெல்லாம் தாத்தாவைப் பார்க்க ஆம்பூர் வரும் போது அந்தச் சின்னக் கடைக்கும் நான் தவறாமல் போகிறேன். அது சின்னக் கடைதான். ஆனாலும் போதிமரம் அல்லவா?

கேரத்தில் தமிழகக் குழு வெற்றி!

வெளியே போக முடியாதபடி மழைக் காலமா? வீட்டில் பொழுது போகவில்லையா? உடனே கேரம் போர்டை எடுத்து வைத்துக் கொண்டு ஆட உட்கார்ந்து விடுவார்கள் சிறுவர் சிறுமியர்! இதில் பங்கு கொள்ள வயது வித்தியாசமே கிடையாது. கேரம் ஆடத் தொடங்கினால் நேரம் போவதே தெரியாது! சாப்பிட அழைக்கப் பல தடவை படையெடுக்கும்படி இருக்கும்.



புதுதில்லியில் அண்மையில் பத்தொன்பதாவது ஜூனியர் நேஷனல் கேரம் போட்டி நடைபெற்றது. தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்களும், சிறுமிகளும் மூன்று போட்டிகளில் வெற்றிவாகை சூடினர்!

வெற்றி பெற்ற தமிழகக் குழுவினரோடு தமிழகக் கேரம் விளையாட்டுச் சங்கத்தின் நிர்வாகிகள் பூரிப்போடு காட்சி தருகிறார்கள்!

மற்றவர் உழைப்பில்!



பிள்ளையார் குளத்து நீர் காலைச் சூரியனின் ஒளியில் ஜொலித்துக் கொண்டிருந்தது. தண்ணீரில் நீந்திக் கொண்டு இருந்த மீன்கள், தரையில் அமர்ந்திருந்த தவளைக் கூட்டத்தைப் பார்த்து வாயைத் திறந்து திறந்து 'வக்கனை' வலித்துக் கொண்டிருந்தன. பதிலுக்கு 'கிர்ர்ர்...க் கிர்ர்ர்...க்'' எனச் சப்தம் கொடுத்தன தவளைகள்.

கிழக்கு, தெற்கு துறைகள் ஆண்களுக்குரியது. வடக்கு, மேற்கு துறைகள் பெண்களுக்குரியது. அவரவர் துறைகளில் ஆண்களும் பெண்களும் துவைத்துக் கொண்டும் குளித்துக் கொண்டும் இருந்தனர். சிறுவர்கள் சிலர் கார் டியூப்பையும் சிலர் அடைக்கப்பட்ட மண்ணெண்ணெய் டின்களையும் பிடித்துக் கொண்டு நீச்சல் பழகிக் கொண்டிருந்தனர்.

கரையிலிருந்த 'பெரிய அரச மரத்தில்' குருவிகளும், மைனாக்களும் ''குய்யோ முறையோ'' என்று கத்திக் கொண்டிருந்தன. மரத்தடியிலிருந்த அந்த எறும்புப் புற்றுக்குள் கட்டெறும்புகள் இரைகளோடு உள்ளே செல்வதும் அவற்றை உள்ளே விட்டு விட்டு வெளியே வருவதுமாய் இருந்தன.

வரிசையில் வந்து கொண்டிருந்த எறும்புகளில் ஒன்று மட்டும் ஏதோ சிந்தனையில் வந்தது. திடீரென வரிசையிலிருந்து விலகி சற்றுத் தள்ளி நின்று உணவைக் கீழே வைத்தது. சுற்றி ஒருமுறை பார்த்து விட்டு, இரையைக் கொஞ்சம் கொறித்துக் கொண்டு சிந்தனைப் பட்டத்தைப் பறக்க விட்டது.

நாம் ஏன் இப்படிக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்? உணவெடுக்கப் புறப்படும் போது, கூடவே வந்து, சற்றுத் தொலைவில் ஒதுங்கி நின்று கொண்டால் யார் பார்க்கப் போகிறார்கள்? நிம்மதியாக நிழலில் தூங்கி எழுந்து விட்டு சாவகாசமாகச் சென்றால் என்ன?— இவ்வாறாக அதன் சிந்தனை மேலே மேலே சென்று கொண்டே இருந்தது. சிந்தித்துக் கொண்டிருந்த எறும்பு திடீரென ''அய்யோ...'' எனக் கத்தியது. குளத்தில் குளித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பாக்கியம்மாள் சாரை சாரையாய்ச் செல்லும் எறும்புகளைப் பார்த்து அவற்றிற்கு இடைஞ்சல் செய்யாமல் காலைச் சற்றுத் தள்ளி வைத்தாள். ஐயோ பாவம்! அவள் கால் வைத்த இடத்தில்தானா அந்த எறும்பு நின்று சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்...?

''மற்றவர்கள் உழைப்பில் குளிர்காய விரும்பிய எனக்கு ஆண்டவன் தகுந்த தண்டனையைக் கொடுத்து விட்டார்'' என்று துடிதுடித்தவாறு தன் முடிவை ஏற்றுக் கொண்டது அந்த (மட) எறும்பு!

— வெ. கந்தகுமார், சென்னை — 28.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.


FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Monthly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony,
   Anna Nagar, Madras - 600 040
4. Name of Publisher : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony,
   Anna Nagar, Madras - 600 040
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area,
   Nungambakkam, Madras - 600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras - 600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1991



ஒற்றுமைக்கு இலக்கணம்!

—சார் தபால்

* "ஒரு மரத்துப் பறவைகள்" பாசத்தை விட நட்பே சிறந்தது என்று விளக்கி விட்டது.

தக்கோலம். மு. லட்சுமணன்.

* "ஒரு மரத்துப் பறவைகள்" கடைசி வரை விறுவிறுப்புடன் எடுத்துச் சென்று யாருமே எதிர்பார்க்காத ஒரு முடிவைக் கொடுத்து தொடரை அற்புதமாக நிறைவு செய்திருந்தார் பூவை அமுதன்.

தக்கோலம். பி. அ. முஸ்தபா

* "நிறைந்தது" என்பதைப் பார்த்தவுடன் மனதை துக்கம் நிறைத்தது!

பரங்கிப்பேட்டை. பி. எஸ். மணிமாறன்.

* 'ஒரு மரத்துப் பறவைகள்' தொடர் கதை, ஒற்றுமைக்கு இலக்கணம் வகுத்த — நெஞ்சை விட்டு நீங்காத — காலத்தால் அழியாத காவியமாகும்.

சங்கமங்கலம். எஸ். மனோகரன்.

* வாட்...! பூவை அமுதன் எழுதி வந்த, 'ஒரு மரத்துப் பறவைகள்' பதினைந்தே அத்தியாயங்களில் நிறைந்து விட்டதா...? அநியாயம் சார்!

பழையனூர். ந. சம்பந்தம்.

* எங்கப்பாவா பிச்சைக்காரர். குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் தகப்பனார்க்கும் வீணாகச் செலவு செய்யும் சிறுவர்களுக்கும் நிச்சயம் ஒரு படிப்பினையாக இருக்கும்.

சீர்காழி. ஜே. பலராமன்.

* சிறுவர்களுக்கு சமயோஜிதமும் தேவை என்பதை, "வெளியே வா, டைகர்," சிறுகதை, உணர்த்தியவிதம், வெகு அற்புதம்!!

நாயின் நன்றியும், உதவியும், பெருமையும் தெரியாமல் துன்புறுத்தி அடிக்கச் செய்யும் பள்ளி சிறுவர்களுக்கு, "அடி அந்த சோனியை" சிறுகதை: அருமையான புத்திமதியாகும்!!

குடந்தை. கே. எஸ். மூர்த்தி.

* பிரதமர் சந்திரசேகர் பற்றி அறியாத பல விஷயங்களை, மிக அழகாக விளக்கி தெளிவு ஏற்படுத்தியதற்கு நன்றி!

மொரப்பூர். எச். பிஜு.

* கா. நமச்சிவாயர் எழுதிய 'என் வேலை இல்லையே...?' கதை சூப்பர். 'வீட்டு வேலைகளை என்னால் செய்ய முடியாது. படிப்பது மட்டுமே என் வேலை' என்று கூறும் மாணவர்களுக்கு சரியான சவுக்கு அடி!

ஸ்போர்ட்ஸ் பகுதியில் ஹாக்கியைப் பற்றி மேலும் விளக்கிக் கட்டுரையாக அளித்ததிற்கு என் பாராட்டுக்கள்.

செஞ்சி — 2. தா. ஷேக் ஹுசேன்.

* முகப்பரு வராமல் தடுக்க வழி கூறிய டாக்டர் அவர்களுக்கு என் நன்றிகள்!

பரங்கிப்பேட்டை. பி. எஸ். மணிமாறன்.

* வெட்டி ஒட்டுங்கள் போட்டியில் அந்த பக்கத்தைத் தனி பேப்பரில் அச்சிட்டால் அதன் பின்பு உள்ள படைப்புகள் சேதமாகாமல் இருக்குமே.

கவிக்குயில் பற்றி மிக அருமையான கட்டுரை வெளியிட்டது மகிழ்ச்சியாக இருந்தது.

பாணாம்பட்டு. கே. சங்கர்.

* சிறுவர்கள் அனைவரும் நடராஜ் போன்று திகழ வேண்டும் என்பது என் கருத்து.

சென்னை — 34. எ. இராஜேந்திரன்.

* "சேதுவின் வேப்பமரம்" கதை அருமையோ அருமை!

கருமத்தம்பட்டி. ஆர். அருண் பிரகாஷ்.

* 'எனக்குத்தான் பரிசு' சிறுகதைக்கான புகைப்படங்கள் அமைந்திருக்கும் இடங்களையும் அருகில் அச்சடித்திருந்தால் நாங்கள் அறிந்து கொள்ள எளிதாக இருந்திருக்கும்.

பரங்கிப்பேட்டை. சாரதா.


பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—


வீட்டைக் காக்கும் பணியினிலே
வேகமாய் ஓடிக் களைத்தாயோ?
குட்டி பப்பி கிட்டேவா,
காலைப் பிடித்து விடுகின்றேன்!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

தீங்கான பாம்பும் அன்பார்ந்த பட்டையும்

வழிமுறைகள்
விளையாட்டைத் துவங்கிட உங்களுக்குத் தேவை சொக்கட்டானும் (டைஸ்) ஒரு நண்பனும்தான்.



தீங்கான பாம்பின் வாயருகில் சென்றால், அதன் வால்வரை இறங்க வேண்டும்.
ஆனால் அன்பார்ந்த பட்டையின் அடிபாகத்திற்கு சென்றால் அதன் உச்சி வரை ஏறிவிடலாம்.

புள்ளியிட்ட கோட்டினூடே கத்தரிக்கவும்.

